விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 18 ஞாயிற்றுக்கிழமை (02.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தமிழ் நகரங்கள், மொழிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
(C-8929)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## ஜனாதிபதி செயலராகிறார் ஒஸ்ரின் பெர்னாண்டோ



(கொழும்பு)
ஜனாதிபதியின் புதிய செயலராக ஒஸ்டின் பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார். 16

## அரசியலமைப்புத் திருத்தம் வெளிப்படையாக இருக்கட்டும்

### ஐ.நா. வலியுறுத்தல்

(ஜெனிவா)
அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அது குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்படுத்த வேண்டும் எனவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை, இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக அதிகாரத்தை பரவலாக்கும் முறை 15

## விக்னேஸ்வரனை நீக்குவது காலத்தின் தேவை!

### கொழும்பு ஊடகத்திடம் சுமந்திரன்

(கொழும்பு)
தற்போதைய நிலைமையின்படி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் பதவியில் இருந்து நீக்குவது நாட்டுக்கும் தமிழர்களுக்கும் இனங்களிடையேயான நல்லிணக்கத்துக்கும் நல்லது என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாள 15

# வடக்கு - கிழக்கு இணையாது;

# சமஷ்டி என்பதும் கிடையாது

## இதற்காக அரசை கவிழ்க்க முடியாது என்கிறார் சுமந்திரன் எம்.பி



(யாழ்ப்பாணம்) வடக்கு - கிழக்கு இணைப்பு தற்போதைக்கு சாத்தியமில்லை. சமஷ்டி என்ற சொல் வெளிப்படையாக இருக்காதென தெரிவித்துள்ள தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முக்கிய விடயமொன்றுக்காக எமது ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கத்தை சிறு காரணங்களுக்காக கவிழ்க்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிகளுடன் மீனவர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
இழுவைமடி தொடர்பான சட்டவரைபு எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தைச் 16

## ரவியிடம் ஏன் லொத்தர் சபை? எதிரணி சவால்

(கொழும்பு)
தேசிய லொத்தர் சபை மீண்டும் நிதி அமைச்சரின் கீழ் கொண்டுவருதற்கான உயர் நீதிமன்று 15

## ரூ.30 ஆயிரம் கோடி வரி அறவிடவில்லை

(கொழும்பு)
தேசிய இறைவரி திணைக்களம்மற்றும்மதுவரி திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் கடந்த வருடத்தில் அறவிட வேண்டிய சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாய் வரியை அறவிடவில்லை என தெரியவந்துள்ளது. 15

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுமந்திரனுக்கு சவால்!



(கொழும்பு)
நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் சுமந்திரன் முடிந்தால் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டு மாகாண சபைத் தேர்தலிலேயோ 15

## இரண்டு வருட ஒப்பந்தம் முடிய 18 அமைச்சர்கள் வெளியேறுவர்!

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் 18 பேர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் கூட்டு அரசாங்கத்திலிருந்து விலகவுள்ளதாக, இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஏக்க நாயக்க, தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முடியவுள்ளதாகவும், எனவே, கூட்டு அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு இந்த 18 15

## புறா பிடிக்க முற்பட்டவர் தவறி வீழ்ந்து மரணம்!

(திருநெல்வேலி)
புறா பிடிக்க சென்றவர் தவறி வீழ்ந்து மரணமடைந்தார். யாழ்.திருநெல்வேலியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் மேசன் வேலை முடிந்த பின்னர் புறா பிடிப்பதற்காக ஹோட்டலில் அமைந்துள்ள 15

## புலிகள் வழங்கியது சர்வதேசப் பயிற்சி

### அமைச்சர் புகழாரம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் காலத்தில் அந்த அமைப்பு இளைஞர், யுவதிகள் உள்ளிட்டோருக்கு வழங்கிய பயிற்சி சர்வதேச பயிற்சியாகும்.

குறித்த பயிற்சித் திட்டம் சிங்கப்பூர் போன்ற சில சர்வதேச நாடுகளில் தற்பொழுதும் நடைமுறையில் இருக் 15



## தமிழர் - சிங்களவர் ஏற்கும் அதிகாரப் பகிர்வே அவசியம்

### பாக்கியசோதி சரவணமுத்து வலியுறுத்து

(கொழும்பு)
புதிய அரசமைப்பு ஒற்றையாட்சியோ அல்லது சமஷ்டியோ எனப் பெயரில் வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால், தமிழர்களும், சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரப்பகிர்வாக அது அமைய வேண்டும் என நல்லிணக்க செயலணியின் பொதுச்செயலாளரும், மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலை 04

## மிருசுவிலில் வாகன விபத்து முதியவர் பலி

(மிருசுவில்)
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் வைத்தியசாலைக்கு அருகில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
அவுஸ்திரேலியா | லண்டன்
Rs 800/- | Rs 600/-
(C-8934)
Parcel.lk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200

## ஞானசாரரை கைது செய்திருந்தால் கலவரம் ஏற்பட்டிருக்கும்

### புலனாய்வுத் தகவல்

(கொழும்பு)
பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், நீதிமன்றத்தில் சரணடைவது தாமதிக்கப்பட்டதன் பின்னணியில் புலனாய்வுப் பிரிவினரின் நடவடிக்கை ஒன்று இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஞானசார தேரரை பொலிஸார் கைது செய்திருந்தால், நாட்டின் சில இடங்களில் முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த 04

## இராணுவ தளபதி நியமனம் இழுபறியில்

(கொழும்பு)
அமைச்சர்கள் மற்றும் பௌத்த பிக்குகளுக்கு இடையிலான இழுபறியினாலேயே, புதிய இராணுவத் தளபதி நியமனத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக, கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தளபதி ஜெனரல் கிரிசாந்த டி சில்வா கூட்டுப் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள போதிலும், புதிய இராணுவத் தளபதியாக எவரும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பெண் சட்டத்தரணியை படம் எடுத்தவருக்கு ஒரு வருடச் சிறை!

ரயிலில் பயணித்த இளம் பெண் சட்டத்தரணி ஒருவரை தனது கைத்தொலைபேசியில் புகைப்படம் எடுத்தவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட 55 வயதுடைய திருமணம் செய்த நபருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார். அத்துடன், ஆயிரத்து 500 ரூபா தண்ட பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதவான், புகைப்படம் எடுத்த கைத்தொலைபேசியையும் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார். கோட்டை சிறுவர்கள் மற்றும் பெண்கள் பொலிஸ் பிரிவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. விசாரணையின் போது, குறித்த நபர் திறந்த நீதிமன்றில் குறித்த சட்டத்தரணியின் காலில் விழுந்து மன்னிப்பு கோரியுள்ளார். (மு-11)

# வாய்ப்பை இழக்கும் மகேஸ் சேனநாயக்க!

(கொழும்பு)



கூட்டுப்படைகளின் தளபதியாக பதவி உயர்த்தப்பட்டுள்ள போதிலும் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா இன்னமும் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகவில்லை என்று, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி பதவியில் இருந்து, ஜெனரல் கிரிசாந்த டி சில்வா விலகிக் கொள்ளாததால், அவர் வரும் ஓகஸ்ட் 21ஆம் திகதி வரை அந்தப் பதவியில் நீடிக்கலாம் என கொழும்புத் தகவல் தெரிவிக்கின்றது.

ஓகஸ்ட் 21ஆம் திகதி வரை, ஜெனரல் கிரிசாந்த டி சில்வா இராணுவத் தளபதி பதவியில் நீடிப்பாரேயானால், தற்போது, இராணுவத் தலைமை அதிகாரியாக இருக்கும், மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, அடுத்த இராணுவத் தளபதியாக நியமிக்கப்படும் வாய்ப்பை இழக்கக் கூடும் என்றும் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, 55 வயதை எட்டுவதால், வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதியுடன் ஓய்வுபெற வேண்டியிருக்கும் என்பதே அதற்கான காரணம் என்றும் கூறப்படுகின்றது. (மு-11)

# அமைச்சுக்களின் செயலர்களின் பொறுப்புக்களில் மாற்றம்!

வடக்கு மாகாணசபைக்கு இரண்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதை அடுத்து அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்புக்களும் மாற்றப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபையின் கல்வி, விவசாய அமைச்சர்கள் பதவி விலகியதை அடுத்து அந்த இரு அமைச்சுக்களையும் முதலமைச்சர் பொறுப்பேற்றிருந்தார். அதன் பின்னர் புதிதாக சர்வேஸ்வரன், அனந்தி ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

அமைச்சர் அனந்தியின் அமைச்சுச் செயலாளராக நியமிக்கப்பட்ட ஆர்.வரதீஸ்வரனின் பொறுப்புக்களும், வடக்கு முதலமைச்சரின் அமைச்சுச் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கத்தின் பொறுப்புக்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இதன்படி முதலமைச்சரின் அமைச்சுச் செயலரிடமிருந்து சமூக சேவைகள், மகளிர் விவகாரம், புனர்வாழ்வு, தொழில்துறை ஆகிய அமைச்சுப் பொறுப்புக்கள் ஆர். வரதீஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஆர்.வரதீஸ்வரனிடம் இருந்த விவசாயம், நீர்ப்பாசனம் ஆகியன முதலமைச்சரின் அமைச்சுச் செயலருக்கும் மாற்றப்பட்டுள்ளன. (மு-11)

தும்பளை வீதியில் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல உணவகம் ஒன்று குத்தகை அடிப்படையில் கொடுக்கப்படவுள்ளது.

தொடர்பு:
0778329477
(C-8947)

## விற்பனைக்கு

- கட்டிட இடிபாடு
- சுண்ணாம்பு மக்கி
- செம்பாட்டு மண்

என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
075 515 9089
(9655)

## வீடு வாடகைக்கு உண்டு

மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் பிரதான வீதியில் மேல்மாடி வீடு, கார் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு:
0764305877
(9654)

# மரண அறிவித்தல்



## திருமதி நித்தியலட்சுமி பாலசிங்கம்

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நித்தியலட்சுமி பாலசிங்கம் தெகிவளையில் காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - யோகம்மா தம்பதியினரின் இளைய மகளும், பொன்னம்பலம் - மாரிமுத்து தம்பதியினரின் மருமகளும், பாலினி, பாலேந்திரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜெபநேசன், விஜயா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆரணியா, அபிநயா ஆகியோரின் அம்மம்மாவும், அனுஷன், அனுஷியா, அபிஷன் ஆகியோரின் அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, அன்னலட்சுமி, விநாயகமூர்த்தி மற்றும் இராசலட்சுமி, காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராசையா, இராஜேஸ்வரி, நல்லையா, இலட்சுமி, தங்கமுத்து, வெற்றிவேலு மற்றும் பரமலிங்கம், இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று இரண்டு மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முகவரி: 1A, அல்பேட் பிளேஸ், தெகிவளை.

தகவல்: பொ.பாலசிங்கம் (கணவர்)
க.ஜெபநேசன் (மருமகன்)

## கறையான் தொல்லையா?



கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும் (Warranty)
ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :-
ந.ரூபகாந்த்
077 151 5897
21 499 3200
(9651)

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your Academic / General

## IELTS

Full time / Part time

Next exam date in Jaffna. 29 July 2017

idp www. idp.com/srilanka

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

## IELTS Life Skills A1 B1

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்

| | |
|---|---|
| ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி | Deutsch |
| நெதர்லாந்து மொழிப் பாடநெறி | Dutch |
| பிரான்ஸ் மொழிப் பாடநெறி | French |

(C-8942)

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

## VACANCIES

E-W Information Systems Ltd - Jaffna branch will entertain applications from suitably qualified applicant for the following posts,

1. **Computer Hardware Field Technician** - Male
   Location - Mannar / Jaffna / Mankulam
2. **Customer Support Coordinator** - Female
   Location - Jaffna (Office)
3. **Sales & Marketing Executive** - Male
   Location - Northern Province
4. **Executive** (Trainee ) - Female
   Location - Jaffna (Office)

**Eligibility Qualification:**

- An accepted professional qualification.
- Completed In English with excellent communication skill. (Sinhala /Tamil will have an added advantage.)
- One/Two years relevant experience (Except executive trainee).
- Age must be above 20.

If you are interested, Please send your resume with recent passport size photo & relevant educational certificates on or before 7th July 2017. (And also please mention your interesting post in your Resume)

**Manager,**
**E-W Information Systems Ltd,**
**No 61, Clock Tower Road,**
**Jaffna**

Web : www.ewisl.net / www.ewispc.com

(C-8931)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
01
❖
05
❖
1951

மறைவு
02
❖
06
❖
2017



எமது அன்புத் தெய்வம்

அமரர்

## அழகராசா தவமணி

**02.07.2017**

அன்புத் தெய்வம் நீ பிரிந்து மாதம் ஒன்று கரைந்ததம்மா
மாதம் ஒன்று போனாலும் பாசம் கொண்டு தேடுகிறோம் - உன்
ஓசை கேட்க ஓலமிட்டு தவிக்கின்றோம் ஓடோடி வந்திடம்மா
எம் ஆவி பதறியதே உன் ஆவி போன சேதி - காற்றில்
தாவி வந்து நம் காதில் கலந்த கணம் - ஈற்றில்
காலத்தின் நியதியில் காலனவன் கைப்பட்டு - நீ
காற்றில் கலந்தாயே தாயே நாம் தவிக்கின்றோம்
தாவி வந்து சேர்ந்திடம்மா தாயே நாம் காத்திருப்போம்
ஆவி பெற்று வந்திடம்மா அவனியில் நாம் சேர்ந்திருப்போம்

(C-8933)

குடத்தனை வடக்கு,
குடத்தனை.


**077 779 2997**

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆவது ஒருநாள் போட்டியில் இந்தியாவின் சுழலில் சிக்கி 158 ஓட்டங்களில் சுருண்டது மேற்கிந்தியத் தீவுகள்

## 93 ஓட்டங்களால் வென்றது இந்தியா



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது ஆட்டம் மழையால் பாதியில் கைவிடப்பட்டது. 2-வது ஒருநாள் போட்டியில் இந்தியா 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில், இந்தியா-மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான 3-வது ஒருநாள் போட்டி விவியன் ரிச்சர்ட்ஸ் ஸ்டேடியத்தில் நடைபெற்றது. நாணயற் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில களத்தடுப்பை தேர்வு செய்தது. இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான ரகானேவும், ஷிகர் தவானும் ஆட்டத்தை தொடங்கினர்.

ஆட்டத்தின் 3-வது ஓவரிலேயே மேற்கிந்தியத் தீவுகள் பந்து வீச்சாளர் கம்மின்ஸ் ஷிகர் தவானை 2 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்து இந்தியாவுக்கு அதிர்ச்சி அளித்தார். விராட் ஹோலி 9 வது ஓவரில் ஹோல்டர் பந்துவீச்சில் 11 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதனால் இந்திய அணி முதல் 10 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 34 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

அதன்பின், ரகானேவுடன் ஜோடி சேர்ந்த யுவராஜ் சிங் விக்கெட் வீழ்ச்சியை தடுத்து நிறுத்தினார். ஆட்டத்தின் 27வது ஓவரை வீசிய தேவேந்திர பிஷ்° யுவராஜ் சிங்கை 39 ஓட்டங்களில் வெளியேற்றினார்.

மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய ரகானே அபாரமாக விளையாடி அரைச்சதம் அடித்தார். 112 பந்துகளில் நான்கு பவுண்டரி ஒரு சிக்சர அடித்து 72 ஓட்டங்களை குவித்த போது கம்மின்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். இதன்பின் களமிறங்கிய தோனி மற்றும் கேதர் ஜாதவ் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இறுதி வரை களத்தில் இருந்த தோனி 79 பந்துகளில் 78 ஓட்டங்களை குவித்தார், கேதர் ஜாதவ் அதிரடியாக விளையாடி 26 பந்துகளில் 40 ஓட்டங்களை குவித்தார். இறுதியில 50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 4 விக்கெட் இழப்பிற்கு 251 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர், மேற்கிந்தியத் தீவுகள் 252 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கினர். தொடக்க வீரர்களாக எவின் லீவிஸ, கைல் ஹோப் களமிறங்கினர். முதல ஓவரை வீசிய புவனேஷ்குமார் 3 ஓட்டங்கள் விட்டு கொடுக்க, அடுத்து பந்து வீச வந்த உமேஷ் யாதவ் 2-வது பந்தில் லீவிஸை போல்ட் ஆக்கி வெளியேற்றினார்.

பின்னர், களமிறங்கிய ஷாய் ஹோப் (விக்கெட் கீப்பர்) கைல் ஹோப்புடன் இணைந்தார். இருவரும் நிதானமாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த முயற்சித்தனர். ஆனால் இந்தியாவின் சகலதுறை வீரரான ஹர்திக் பாண்டியா அவர்களை பிரித்தார்.

அடுத்து களமிறங்கிய ரோஸ்டன் சேஸ்சும் 2 ஓட்டங்களில் ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் 3 விக்கெட் இழப்புக்கு 58 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தது. அந்த அணியில் அதிகபட்சமாக ஜாசன் முகமது 40, ரோவ்மன் பவெல் 60 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அந்த அணி



38.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவியது.

இதனால், இந்திய அணி 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மேலும், இந்திய அணி 5 போட்டி கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

# ஒழுங்கீனமாக நடந்துகொண்ட டிக்வெல்லவுக்கு அபராதம்



சிம்பாப்வேக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட இலங்கை விக்கெட் காப்பாளருக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 30 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் காலி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர் முடிவில் 5 விக்கெட இழப்பிற்கு 316 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 317 ஓட்டங்கள் எடுத்தால வெற்றி என்ற இலக்குடன் சிம்பாப்வே களம் இறங்கியது. அந்த அணியின சாலமன் மிர் (112), வில்லியம்ஸ் (65), சிக்கந்தர் ரசா (67 ஆட்டமிழக்காமல்), வாலர் (40 ஆட்டமிழக்காமல்) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 47.4 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 322 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

சிம்பாப்வே அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும்போது, 7-வது ஓவரின் முதல் பந்தை மிர் சந்தித்தார். அப்போது பந்து லெக் சைடு சென்றது. பந்தை பிடித்த இலங்கை விக்கெட் காப்பாளர் டிக்வெல்ல உடனடியாக ஸ்டம்பிங் செய்யாமல், மிர் வெளியே செல்வார் என்று நீண்ட நேரமாக காத்துக் கொண்டிருந்தார். இருந்தாலும் மிர் காலை வெளிக் கொண்டு வரவில்லை.

டிக்வெல்லவின் இந்த செயல் வீரர்களின் நன்னடத்தை விதிக்கு மாறானது. இதனால் போட்டி நடுவரிடம் இந்த விவகாரம் குறித்து புகார் அளிக்கப்பட்டது. டிக்வெல்ல தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் போட்டி சம்பளத்தில் 30 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் போட்டி சஸ்பெண்டுக்கான இரண்டு புள்ளிகளையும் பெற்றுள்ளார்.

# தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு



தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான 12 பேர் கொண்ட இங்கிலாந்து அணியில் பேலன்ஸ், டோபி ரோலண்ட்-ஜோன்ஸ இடம்பிடித்துள்ளனர்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற இருக்கிறது.

முதல் டெஸ்ட் வருகிற 6ஆம் திகதி (வியாழக்கிழமை) லார்ட்ஸ் மைதானத்தில் தொடங்குகிறது. இதற்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிககப்பட்டது. அலஸ்டைர் குக் அணித் தலைவர் பதவியில் இருந்து விலகியுள்ளதால், ஜோ ரூட் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முதன முறையாக ஜோ ரூட் அணித் தலைவராக டெஸ்ட் கிரிக்கெட்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறார்.

தென்னாபிரிக்கா அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி வருமாறு,

ஜோ ரூட் (அணித் தலைவர்), மொயீன் அலி, ஜிம்மி ஆண்டர்சன, பேர்ஸ்டோவ், கேரி பேலன்ஸ், ஸ்டூவர்ட் பிராட், அலஸ்டைர் குக், லியம டவ்சன், ஜென்னிங்ஸ், டோபி ரோலண்ட்-ஜோன்ஸ், பென் ஸ்ரோக்ஸ், மார்க் வுட்.

பேலன்ஸ் கடந்த ஆண்டு பங்களாதேஷிற்கு எதிராக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றார். அப்போது நான்கு இன்னிங்சில் 24 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இதனால் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற கவுண்டி சம்பியன்ஷிப் சீசனில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 815 ஓட்டங்கள் குவித்தார். சராசரி 101.88 ஆகும். இதே சீசனில் குமார் சங்ககார



1086 ஓட்டங்கள் குவித்து முதல் இடம பிடித்தார். பேலன்ஸ் 2-வது இடத்தைப் பிடித்தார். இதனால் இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் மீண்டும் பேலன்ஸ்க்கு வாய்ப்பு கொடுத்துள்ளது.

குக், பேலன்ஸ் ஆகியோருடன் ஜென்னிங்ஸ் என்ற இளம் வீரரும் தொடக்க வீரராக சேர்க்கப்பட்டுள்ளார். இந்திய தொடரில் இவர் சதம் அடித்தவர்.

காயத்தால் நீண்ட நாட்களாக விளையாடாமல் இருந்த வேகப்பந்து வீச்சாளர் ஆண்டர்சனுக்கு இடம் கிடைத்துள்ளது. சம்பியன்ஸ் டிராபி தொடரின்போது காயம் அடைந்த சகலதுறை வீரர் கிறிஸ் வோக்ஸ் அணியில் இடம்பெறவில்லை.

### தமிழர் - சிங்களவர் ...

யத்தின் பணிப்பாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசாங்கம் சமகாலத்தில் முன்னெடுத்துவரும் விடயங்கள் மற்றும் ஜெனிவாத்தீர்மானம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னெடுப்புகள் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான விடயங்கள் தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அரசமைப்புப பணிகளுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்துவருகிறது' என்றாலும், காணாமல்போனோர் மறுசீரமைப்புச சட்டம் நிறைவேற்றப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை சிவில் அமைப்புகள் தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தம் கொடுத்த வண்ணம்தான் உள்ளன.

இதேவேளை, புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் சிவில் அமைப்புகள் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளன. அதாவது, சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாத அதிகாரப்பகிர்வு என்பது பொருத்தமற்றதாக அமையாது. சமஷ்டியா, ஒற்றையாட்சியா என்ற மோதல் இடம்பெறுகின்றது. தமிழ் மக்களும், சிங்கள மக்களும் இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய வகையில் அதிகாரப்பகிர்வு இடம் பெறவேண்டும் எனவும் பாக்கியசோதி சரவணமுத்து கூறியுள்ளார். [illegible]

### ஞானசாரரை கைது ...

தயார் நிலைமை காணப்படுவதாக கிடைத்த புலனாய்வு தகவலுக்கு அமையவே ஞானசார தேரர் நீதிமன்றத்தில் சரணடைவது தாமதம் செய்யப்பட்டதாக புலனாய்வு பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஞானசார தேரரை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பிக்குமமுன்னர் இருந்தே அவர் வந்து செல்லும் இடங்கள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் அறிந்து வைத்திருந்தனர்.

நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த போது அவர் எங்கிருந்தார் என் பதையும் புலனாய்வு பிரிவினர் தெரிந்து வைத்திருந்ததுடன் அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அதேவேளை ஞானசார தேரரை சந்திக்க வருவோர் பற்றியும் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களை திரட்டியுள்ளனர்.

[illegible] எதிர்க்கட்சியை சேர்ந்த சில அரசியல்வாதிகள், உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் மாத்திரமல்லாது அமைச்சுக்களின் செயலாளர்கள் சிலரும் ஞானசார தேரரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஞானசார தேரரை சந்திக்க சென்றவர்களின் பெயர் விபரங்கள், திகதி மற்றும் நேரம் என்பவற்றையும் புலனாய்வுப் பிரிவினர் குறித்து வைத்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர், நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த தினத்திற்கு முன்னர், குருநாகலில் நடந்த சம்பவத்தில் இருந்து சிங்கள - முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முறியடிக்கும் பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டிருந்தது.

நாட்டிற்குள் அப்படியான கலவரமான நிலைமை ஏற்படடிருந்தால், அது நாடு முழுவதும் பரவும் ஆபத்து காணப்பட்டது. ஞானசார தேரர் கைது செய்யப்படுவதை விட கலவரம் ஏற்படுவதை தடுப்பது முக்கியமானது என அந்த அதிகாரி கூறியுள்ளார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், ஞானசார தேரர் தான் வசித்து வரும் விகாரைக்கு பல முறை வந்து சென்றுள்ளதுடன், நீதிமன்றத்தில் செல்லாது தவிர்க்க விசேடமான இடமொன்றில் தலைமறைவாக இருக்க முயற்சிக்கவில்லை என புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

இதனிடையே ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு, அதன் பின்னர் ஏதோ ஒரு விதத்தில் கலவரமான நிலைமை ஏற்பட்டிருந்தால், இனவாதத்தை அடிப்படையாக கொண்டு அரசாங்கத்தை ஸ்திரமற்ற நிலைமைக்குள் கொண்டு செல்ல சில எதிர்க்கட்சி அணிகள் திட்டமிட்டதாகவும் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்திருந்தது. (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து இலங்கையர்களும் சுயமரியாதையுடன் வாழக்கூடிய தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்



## கனேடியத் தூதுவர் வலியுறுத்து

(கொழும்பு)

அனைத்து இலங்கையர்களும் சுயமரியாதையுடன் வாழக்கூடிய தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் ஷெல்லி வைற்றிங் (Shelley Whiting) தெரிவித்துள்ளார்.

150ஆம் ஆண்டு கனேடிய தின நிகழ்வுகளை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத, இன, பால் நிலை அல்லது மொழி அடிப்படையில் இலங்கையில் எவரும் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கைக்கும் கனடாவிற்கும் இடையில் மிக நீண்ட கால உறவுகள் நீடித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## துப்பாக்கிச் சூடு நடத்தி ஹன்டர் வாகனம் பறிமுதல்

### சட்டவிரோத மணலுடன் வந்தவேளை சம்பவம்



சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்து ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் ஒன்றினை பருத்தித்துறைப் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி மடக்கிப்பிடித்தனர்.

நேற்று சனிக்கிழமை அதிகாலையில் வல்லிபுரம் மணற்காடு பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ப்படுவதாக பருத்தித்துறைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்துள்ளனர்.

இந்நிலையில் மணலை ஏற்றிக் கொண்டு வேகமாக வந்த ஹன்டர் வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தினர். இருப்பினும் அதனைப் பொருட்படுத்தாமல் தப்பிச் சென்ற ஹன்டர் வாகனத்தை நோக்கி பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

வாகனத்தின் சக்கரங்கள் காற்றுப் போன நிலையில் அதில் இருந்த இருவரும் தப்பியோடியுள்ளனர். வாகனத்தை பொலிஸ் நிலையம் கொண்டு வந்த பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)

## அமைச்சர் விஜயதாஸவின் கருத்தை ஏற்கவேமுடியாது

### அமைச்சர் மனோ எதிர்ப்பு

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புக்களை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், பௌத்த விஹாரைகள் விவகாரங்களில் தலையிட முடியாது என்றும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தொடர்ச்சியாக தெரிவித்து வரும் கருத்துகளை ஏற்க முடியாது. இந்தக் கருத்துகள் சிறுபான்மை மக்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் நமது அரசாங்கத்தில் இருந்து அந்நியப்படுத்துகின்றன. கடந்த தேர்தல் காலங்களில் தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களையும் புறந்தள்ளிவிட்டு விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு விருப்பு வாக்குகளை அளித்த கொழும்பு வாழ் சிறுபான்மை வாக்காளர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இந்த விவகாரம் பற்றி அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகள் விவகாரம் எனது அமைச்சின் கீழ் வருகிறது. எனவே அமைச்சருக்கு எந்த ஒரு அரச சார்பற்ற சமூக அமைப்பு தொடர்பில் முறைப்பாடு இருக்குமானால் அதை அவர் என்னிடம் தெரிவிக்க வேண்டும். எவராவது சட்டத்தை மீறி இருப்பார்களேயானால், அதை நான் சட்டப்படி கையாள்வேன். அதைவிடுத்து எனது வரையறைக்குள் நுழைந்து, அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் நாட்டின் தேசிய ஐக்கியத்துக்கும் தேசிய நலனுக்கும் ஊறுவிளைவிப்பதாக பொதுப்படையாக கூற வேண்டாம் என்றும் உண்மையில் சில மத அமைப்புகளும் அரசியல்வாதிகளும்தான் தேசிய ஐக்கியத்துக்கு ஊறு விளைவிக்கிறார்கள் என்றும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கூறி வைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொழும்பிலுள்ள அமைச்சுகளுக்கு தீவிர பாதுகாப்பு

கொழும்பிலுள்ள அமைச்சுக்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிர்ப்பு வெளியிடும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் பாதிப்பு ஏற்படுத்தக் கூடும் என அடையாளம் காணப்பட்டுள்ள அமைச்சுகளுக்கு இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் பல்கலைக் கழக மாணவர்கள் சுகாதார அமைச்சிற்குள் புகுந்து சொத்துக்களை கடுமையாக சேதப்படுத்தினர்.

இந்த விடயம் குறித்து புலனாய்வுப் பிரிவு வழங்கியுள்ள அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சுகாதார அமைச்சு, உயர் கல்வி அமைச்சு, மின்சக்தி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு உட்பட சில அமைச்சிற்கு தடும் பாதுகாப்பு வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்கு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

## அமெ.தூதரகத்தை தாக்க திட்டமிடும் ஐ.எஸ்.ஐ.எஸ்.

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையத்தில் விமானம் ஒன்றை கடத்திச் சென்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை தாக்க ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என அமெரிக்க புலனாய்வு பிரிவு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறான நிலைமைக்கு இடமளிக்காது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்க பாதுகாப்புத் தரப்பு இலங்கை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த நிலைமை காரணமாக அமெரிக்க புலனாய்வுப் பிரிவு மற்றும் சிவில் அதிகாரிகள் இலங்கை வந்துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த காலத்தில் நல்லிணக்கத்திற்காகப் பாரிய பங்களிப்பை வழங்கி செயற்பட்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அத்துல் கேஷாப் கடந்த வருடம் ரம்ழானை முன்னிட்டு மூன்று இராபோசன விருந்துகளை நடத்தியிருந்தார்.

கடந்த வருடம் அமெரிக்கத் தூதுவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடத்தப்பட்ட ரம்ழான் இராபோசன விருந்து இம்முறை நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரச்சினைகளை தீர்க்க சக்தியான அடித்தளம் அவசியம்; பொன்சேகா



நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக சக்தி வாய்ந்த அடித்தளம் அவசியம் என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பேலியகொடை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## அமெரிக்கத் தூதரக அறிக்கை ஆட்டோவை முடக்கும் செயல்

(கொழும்பு)

கொழும்பில் சேவையில் ஈடுபடும் ஆட்டோக்கள் சம்பந்தமாக அமெரிக்க தூதரகம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் தேசிய கூட்டு ஆட்டோ சாரதிகள் மற்றும் கைதொழிலாளர்களின் சங்கம் என்பன எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

கொழும்பிலுள்ள ஆட்டோ சாரதிகள் தமது வண்டிகளில் பயணிக்கும் வெளிநாட்டு பெண்களை தேவையில்லாமல் தொடுவதாக அமெரிக்க தூதரகம் வெளியிடுள்ள அறிக்கையில் கூறியிருந்தது.

கொழும்பு நகரில் ஆட்டோக்களில் தனியாக பயணிக்க வேண்டாம் என இலங்கைக்கு வரும் அமெரிக்க பெண்களுக்கு அமெரிக்க தூதரகம் ஆலோசனை வழங்கியிருந்தது.

அமெரிக்காவின் இந்த அறிக்கையானது ஆட்டோ தொழிலை முடக்குவதற்கான அறிக்கை என தேசிய கூட்டு ஆட்டோ சாரதிகளின் சங்கத்தின் செயலாளர் ரோஹன பெரேரா தெரிவித் துள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கையில் ஆட்டோ தொழிலை கட்டுப்படுத்த வேலைத்திட்டங்கள் எதுவும் இல்லை எனவும் இதன் காரணமாக சில சம்பவங்கள் நடக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மின் கட்டணங்களை உயர்த்தும் நோக்கம் அரசிடம் கிடையாது

### ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய உறுதிமொழி

எவ்வித பிரச்சினைகள் வந்தாலும் பொதுமக்களின் மீது மேலதிக சுமைகளை ஏற்றும் விதத்தில் தற்போதுள்ள மின்கட்டணங்களை உயர்த்துவதற்கான நோக்கம் அரசுக்குக் கிடையாதென மின்சக்தி மற்றும் புதுப்பிக் கத்தக்க சக்திகள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய திட்ட வட்டமாகத் தெரிவித் துள்ளார்.

மின்கட்டணத்தை உயர்த்தும் நோக்கம் இருக்குமானால் அதைப் பகிரங்கமாக அறிவிக்குமாறு இலங்கை மின்சாரசபைத் தொழிற் சங்கங்கள் அமைச்சருக்கு அனுப்பியிருந்த கடிதத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

ருவன்வெல்ல ரணசிங்க வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடந்த வைபவமொன்றில் கலந்து கொண்டு அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் ஒருபகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளபோது மற்றொரு பகுதி கடுமையான வரட்சியில் அல்லல்படுவதாகவும், நீர்மின்சாரத்துக் கான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் திருப்தியாக இல் லாததால் மின்னுற்பத்திக்குப் பெருமளவு எரிபொருள் செலவு செய்யப்படுவதாகவும் எவ்வாறாயினும் தற்போதைக்கு மின் கட்டணங்களை உயர்த்தும் நோக்கம் அரசுக்குக் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மீண்டும் போராட்டம்

திருகோணமலை எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி தொடர்பில் இந்தியாவுடன் எவ்வித ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படாது என்ற அரசாங்கத்தின் உறுதிமொழி மீறப்படின் எதிர்வரும் வாரத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பெற்றோலிய தொழிற்சங்கத்தின் இணைப்பாளர் ராஜகருணா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை செயற்படுத்துவதனை அரசாங்கம் தாமதப்படுத்தி வருகின்ற நிலையிலேயே மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு ஒரு வாரகால அவகாசம் வழங்கப்படும். அடுத்த வாரத்திற்குள் தீர்வு கிட்டாத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் கூறினார்.

ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பிரதமரின் உத்தரவாதத்தின் பேரில் கைவிடப்பட்ட நிலையில், தற்போது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்த அமரவீரவின் கருத்துக்கு இராமேஸ்வர மீனவர்கள் கண்டனம்

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டால் 20 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்த கருத்துக்கு இராமேஸ்வர மீனவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்தை இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் அண்மையில் கூறியதாகவும் இந்த விடயத்தை கையாள தனிக்குழு அமைக்கப்பட்டு புதிய சட்ட விதிகள் வகுக்கப்படும் என்று அவர் தெரிவித்ததாகவும் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக் கருத்துக்கே இராமேஸ்வர மீனவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளதாகவும், தமிழக மீனவர்களை ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இலங்கை அரசாங்கம் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால் இந்திய - இலங்கை நாடுகளின் நல்லுறவில் பாதிப்பு ஏற்படும் என்றும் எனவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாது என இலங்கை அரசிடம் மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்றும் மீனவர்கள் கோரியுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் நேற்றுமுன்தினம் வடதிசை குபேர வாசல் கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் நிறைந்த பக்தர்களுக்கு மத்தியில் சிறப்பாக நடைபெற்றது.

# 16 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்




வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான 16 துவிச்சக்கரவண்டிகள் சுவிஸ் ஒன்றியத்தால் கடந்த 29ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் த.செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் கலந்து கொண்டார். மேலும் வடமராட்சிக் கிழக்கு



பிரதேச செயலக தலைமைக் கிராம அலுவலர் எம்.தவராசா, ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர் எஸ்.புத்திசிகாமணி மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், அரச உயர் அதிகாரிகள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(இ-5-64)

# நயினை நாகபூஷணியை தரிசிக்க வரும் பெண்கள் அதிகளவில் நகைகள் அணிந்து வருவதைத் தவிருங்கள்

## அறங்காவலர் சபைச் செயலாளர் அறிவிப்பு

சரித்திரப்பிரசித்தி பெற்ற புனிதத்தலமாகிய நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் உயர்திருவிழா 2017.06.25ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2017.07.09ஆம் திகதியன்று நிறைவு பெறவுள்ளது.

இவ்வுயர்த் திருவிழாக் காலத்தில் கோவிலுக்கு வருகை தரும் அடியார்கள் கோவிலின் அறங்காவலர் சபையின் சில வேண்டுகோள்களை ஏற்று அதற்கமைய நடந்து கொள்ள வேண்டுமென அறங்காவலர் சபை எதிர்பார்க்கின்றது.

கோவிலுக்கு வரும் ஆண்கள் அனைவரும் வேட்டி அணிந்து வருதல் வரவேற்கத்தக்கது. பெண்கள் கட்டாயமாக கலாசார உடை அணிந்து வரவேண்டும்.

உயர்திருவிழாவின் போது ஆலய உள்வீதியில் நெருக்கமாக பக்தர்கள் வழிபாடு செய்வதால் அம்பாள் வெளி வீதியுலா புறப்பட்டபின் உள் வீதியில் அங்கப் பிரதட்சணம் செய்யலா.ம் அதற்கு முன்னால் உள்வீதியில் அங்கப் பிரதட்சணம் செய்தலாகாது.

உயர்திருவிழாவின் போது திருட்டு போவதைத் தவிர்த்துக் கொள்ளுவதன் பொருட்டு பெண்கள் அதிகளவில் நகைகள் அணிந்து வருதலாகாது. சிறியவர்களுக்கு நகைகள் அணிவதையும் தவிர்த்து கொள்ளவும் என நயினாதீவு நாகபூஷணிஅம்மன்கோவில் அறங்காவலர் சபை செயலாளர் நா.யோகநாதன் அறிவித்துள்ளார். (இ

# சர்வதேச யோகாதின விழாவும் நூல் வெளியீடும் நல்லூரில் இன்று

யாழ். யோகா உலகம் நடத்தும் சர்வதேச மூன்றாவது யோகா தின விழாவும் பிரணாயாமமும் குண்டலினியும் என்னும் நூல் வெளியீடும் இணைந்த இரு நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவின் முதன்மைவிருந்தினராகபேராசிரியர் கு.மிகுந்தன், பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன் ஆகியோரும்சிறப்புவிருந்தினர்களாக வைத்திய கலாநிதி விவியன் சத்தியசீலன், கலாநிதி ஆறு. திருமுருகன், கலாநிதி திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மிகவும் எதிர்பார்ப்பு மிக்க கலை நிகழ்வுகளாக யாழ். பல்கலைக்கழக நடனத்துறையினரின் வரவேற்பு நடனமும் சித்த மருத்துவ மாணவர்களின் சித்த யோக அசைவுகளும் யாழ் யோகா உலகம் அமைப்பின் யோகா மாணவர்களின் சிறப்பு யோகா ஆற்றுகையும் நடைபெறும்.

ஆர்வமுடைய அனைவரும் இந்நிகழ்வில் இணைந்து பயனடைய முடியும் என்று யாழ். யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இவ் அமைப்பினரின் முதலாம்இ இரண்டாம் யோகாதின நிகழ்வுகள் யோகா ஆர்வலர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பை பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ

## பகிரங்க ஏலவிற்பனை

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பகிரங்க ஏலவிற்பனை 29.07.2017ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தில் நடைபெறும் என்பதனையும் அன்றைய தினம் ஏல விற்பனைக்கு விடப்படும் பொருட்களை பொதுமக்கள் 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிட முடியும் என்பதையும் குறிப்பிட்ட ஏதாவது பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதனையும் ஏலவிற்பனைக்கு விடப்படும் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கும் படியும் ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்களை உடனடியாக பணம் கொடுக்கப்பட்டு நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

எல்லா கொடுப்பனவு களும் ப்ணமாக செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட் டாது என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

# இராசி பலன்

02.07.2017
(ஆனி 18, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
நவமி பின்னிரவு 12.02 மணிவரை
சித்திரை பின்னிரவு 3.44 மணிவரை
சுபநேரம் 8.56-10.26 மணிவரை
இராகுகாலம் 4.26 - 5.56 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரட்டாதி பிற்பகல் 3.19 ற்கு துலா- சந் | | புத |
| | | | ராகு |
| | சனி | | குரு சந் |

**மீனம்:** புதிய விடயங்களை காலை நேரத்திலேயே செய்து முடிப்பது நல்லது, போசன சுகமுண்டு, கூட்டாளிகளிடம் விழிப்புணர்வு அவசியம்.

**மேடம்:** கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப் புண்டு, போசன சுகமுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், நினைத்த காரியங்கள் நிறைவேறும் நாள், பாராட்டும், புகழும் கூடும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**கும்பம்:** காலையில் தடைப்பட்ட காரியம் மாலையில் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களை ஏற்பது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்,தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**சிம்மம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**தனுசு:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தவர்கள் உங்களைப் புரிந்து செயற்படுவர்.

**துலாம்:** வழக்கமாக செய்யும் பணியை மாற்றியமைப்பீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் ஏற்படலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கன்னி:** மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசனசுகமுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தைப் பரப்ப அரசியல் தலைவர்கள் முயற்சிக்கக் கூடாது

## மகிந்த ராஜபக்ஷ அறிவுரை

(கொழும்பு)

மக்கள் மத்தியில் இன வாதத்தையும் மதவாதத்தையும் பரப்புவதற்கு அரசியல் தலைவர்கள் முயற்சிக்கக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

அரச்சாங்கம் நல்லிணக்கம் பற்றி பேசிக்கொண்டு இனவாதத்தை பரப்பி வருகிறது. தமது இயலாமையை மறைப்பதற்கு அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் ஏற்படுகின்ற அனைத்து நெருக்கடி நிலைகளுக்கும் தாமே காரணம் எனக் கூறப்படுவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

(இ-7)

**வேலை ஆட்கள் தேவை**

எமது ஐஸ்கிறீம் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையத்துக்கு நிரந்தர/ தற்காலிக பணியாளர்கள் தேவை. ஐஸ் கிறீம் கட்டிங் மற்றும் சப்பிளை செய்யக் கூடிய நபர்கள் தேவை. மாதாந்த அல்லது நாளாந்த சம்பளம் கிடைக்கும்.

தொடர்பு கொள்ளவும்

Sylo Ice Cream
No.446,Hospital Road, Jaffna.
077 771 0785 / 077 979 8053

**நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை**

கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
82/4 கலட்டி அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை.
077 784 1558 (சி. 8817)

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:ரேவதி
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/7502

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்:கேட்டை
கி.பா: 29
உயரம்: 175cm
தகைமை/தொழில்:O/L/சுவிஸ் PR
தொ.இ: B/7503

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா:24சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்
தொ.இ: B/7504

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 156cm
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7505

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 17செவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7501

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:கேட்டை
கி.பா:25செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:HNDM, B.COM
தொ.இ: G/7507

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:அனுசம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7508

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா: 9
உயரம்: 5'
தகைமை/தொழில்:BA/தனியார் தொழில்
தொ.இ: G/7509

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் கிழவன்காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலையில் மாணிக்கவாசகர் குருபூசை விழா கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற போது ... (காரைநகர் செய்தியாளர்)

# இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் பிறந்த நாள் விழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடத்தும் இந்து போர்ட் சு.இராசரத்தினம் அவர்களின் 133 ஆவது பிறந்த நாள் விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க ஆராதனை மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்க உபதலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி கே.சுதாகர், சிறப்பு விருந்தினராக இராமநாதன் இயக்குநர் சபைத் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# மறைத்து வைத்த மணல் பறிமுதல்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் அகழப்பட்ட ஒருதொகுதி மணல் துன்னாலைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தம்மால் கைப் பற்றப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலை வடக்கு மிசன் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள ஓர் இடத்தில் மணல் குவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் மணலை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு வந்துள்ளனர். (இ-60)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் பிரதி அதிபர் திருமதி. சிவந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக கணிதத்துறை வாழ்நாள் பேராசிரியருமான வே.தர்மரட்ணமும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் ஓய்வுநிலை வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-100)

# மஹா கும்பாபிஷேகம் நாளை

தெல்லிப்பழை கிழக்கு கோவிற்புல பேச்சி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.07 மணி முதல் 10.55 மணிவரை புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் இடம்பெறும். (இ-7)

❁❁❁❁❁❁

மீசாலை வடக்கு சீமாவளவு ஸ்ரீ ஞான பைரவர் ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை 3ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.01 முதல் பிற்பகல் 12.30 மணி வரை இடம்பெறும். (இ-7)

# மானிப்பாய் மத்திய சந்தை நவீன சந்தையாக மாற்றம்

வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் மத்திய சந்தை நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படவுள்ளது. பெருமளவானவர்கள் வந்து செல்லும் இச் சந்தையானது இட நெருக்கடியுடனும் உட் கட்டுமான வசதிகள் அற்ற நிலையிலும் காணப்பட்டது.

தற்போது சந்தைக்கு அண்மைய நிலப்பரப்பு கொள்வனவு செய்யப்பட்டு சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் நிதியில் நவீன சந்தையாக புனரமைக்கப்பட்டு வருகிறது. (இ-5-102)

# வடக்கு -கிழக்கை இணையவிடோம்

## நாமல் எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

கிழக்கு முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் வேற்றுமையை உருவாக்கி கிழக்கு முஸ்லிம்களை வடக்கு, கிழக்குத் தமிழர்களுடன் ஒற்றுமைப்படுத்தி வடக்கு, கிழக்கை இணைப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்கின்றது. இதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அதற்காகவே முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் தூண்டப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் பொதுபலசேனா தேரர்கள் மாத்திரமன்றி, எவராக இருந்தாலும் குற்றம் செய்திருந்தால் கைது செய்யமுடியும். நாங்கள் இனவாதத்தை முழுமையாக எதிர்க்கின்றோம். நாங்கள் தேசியவாதிகள், இனவாதிகள் அல்லர்.

பெரும்பான்மை இனத்தைத் தாழ்த்தி, சிறுபான்மை இனங்களை மகிழ்ச்சிப்படுத்த முடியாது. அவ்வாறு செய்தால் எந்த இனமும் நிம்மதியாக இருக்காது. தெற்கில் பள்ளிவாசல்கள் தாக்கப் படுகின்றன. கிழக்கில் பௌத்த விஹாரைகள் தாக்கப்படுகின்றன.

மகிந்த காலத்திலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றன. அவற்றுக்கு எதிராக



நடவடிக்கை எடுத்தபோது அதை எதிர்த்தவர்கள் இந்த அரசில் தான் உள்ளனர். அரசிலிருந்து விலகுவதாக அறிவித்தார்கள்.

அளுத்கமவில் அன்று பாதிக்கப்பட்ட மக்களின் கட்டடங்களைப் பூரணமாகப் புனரமைக்க முடிந்தது. ஆனால், அந்த மக்களின் உள்ளங்களைப் புனரமைக்க முடியவில்லை. அந்த இதயங்களை வெற்றிகொள்ள முடியவில்லை.

அளுத்கம சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துவதாக இந்த அரசு கூறியது. ஆட்சிக்கு வந்ததும் மறந்து விட்டது.

கிழக்கு முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் வேற்றுமையை உருவாக்கி கிழக்கு முஸ்லிம்களை வடக்கு, கிழக்குத் தமிழர்களுடன் ஒற்றுமைப்படுத்தி வடக்கு, கிழக்கை இணைப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்கின்றது. அதற்காகவே முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் தூண்டப்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இனங்களிடையே இவ்வாறு இனவாதத்தைத் தூண்டி அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்து தேர்தலை ஒத்திப்போடுவதற்கும் வடக்கு, கிழக்கை இணைப்பதற்கும் மகிந்தவின் பக்கம் வந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களைத் தடுப்பதற்கும் அரசு இவ்வாறு இனவாதத்தைப் பரப்பி வருகின்றது.

இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. மக்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும். நாம் இனவாதத்தை எதிர்த்துப் பேசுவோம். தேசியவாதத்தை ஆதரித்துப் பேசுவோம். புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சியை இல்லாமல் செய்யும் திட்டத்தை எதிர்ப்போம்.

வடக்கு, கிழக்கு இணைப்பை எதிர்ப்போம். இதனூடாக நாம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மொரட்டுவை பல்கலைக்கு இரண்டு வாரங்கள் பூட்டு

(கொழும்பு)

மொரட்டுவை பல்கலைக்கழகம் நேற்று முதல் இரு வாரங்களுக்கு மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விடுதியில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ள அச்சத்தின் காரணமாகவே இரு வாரங்களுக்கு பல்கலைக்கழகம் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 120 | 140 | 160 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 200 | 400 | 300 | 300 | 300 | 350 | 240 |
| தக்காளி | 120 | 200 | 140 | 160 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 80 | 80 |
| கோவா | 120 | 200 | 150 | 200 | 120 | 120 | 150 |
| கரட் | 230 | 400 | 250 | 300 | 300 | 400 | 300 |
| பூசணி | 80 | 100 | 80 | 110 | 100 | 80 | 100 |
| புடோல் | 80 | 120 | 50 | 80 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 50 | 80 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 400 | 300 | 320 | 400 | 400 | 360 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 140 | 150 | 160 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 | 80 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 50 | 140 | 160 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 150 | 100 | 140 | 160 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 150 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 120 | 100 | 140 | 120 | 140 | 100 |
| கறிமிளகாய் | 250 | 200 | 150 | 300 | 240 | 160 | 250 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 180 | 250 | 200 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 300 | 180 | 200 | 200 | 150 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 150 | 120 | 120 | 120 |
| கீரை-1பிடி | 40 | 40 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 50 | 80 | 80 | 80 | 120 | 100 | 100 |
| தேங்காய (ஒன்று) | 70 | 50 | 60 | 50 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 200 | 400 | 200 | - | 300 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | - | 240 | 200 | 200 |
| முள்ளங்கி | 60 | 120 | 50 | 80 | 120 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 100 | - | - | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை துறைமுகம்; சீனா -இலங்கை உடன்பாடு; அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றால் தள்ளுபடி

அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் அதனுடன் இணைந்த 15 ஆயிரம் ஏக்கர் காணியில் கைத்தொழில் பூங்காவையும் அமைப்பதற்கு, அரசாங்கம் இரண்டு சீனநிறுவனங்களோடு உடன்பாடு செய்து கொள்வதற்கு எதிராக, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சீன நிறுவனங்களுடன், கட்டமைப்பு உடன்பாட்டுக்கு செல்வதற்குத் தடை விதிக்குமாறு கோரி, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மூன்று பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் வாதத்தை அடுத்து, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இதையடுத்து, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிப்பது தொடர்பாக அரசாங்கத்துக்கு இருந்து வந்த சட்ட ரீதியான முட்டுக்கட்டை அகற்றப்பட்டுள்ளது. (இ-7)

# பொத்துவில், புத்தளத்தில் ராடர்களை பொருத்த ஜப்பான் பெருமளவு நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் கால நிலை பற்றிய தகவல்களை தரக்கூடிய ராடர் வலையமைப்பை நிறுவுவதற்கு, ஜப்பான் 3,422 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கவுள்ளது.

இதற்கான உடன்பாடு நேற்று முன்தினம் கொழும்பில் கையெழுத்திடப்பட்டது.



நிதியமைச்சில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகநுமாவும், நிதியமைச்சின் செயலரும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இந்த உதவியின் கீழ் பொத்துவிலிலும், புத்தளத்திலும் இரண்டு ராடர் நிலையங்கள் அமைக்கப்படும்.

இங்கு டொப்ளர் ராடர்கள் பொருத்தப்பட்டு துல்லியமான காலநிலைத் தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் இந்த ராடர் நிலையங்களுக்கும், வளிமண்டலவியல் திணைக்களத்துக்கும் தேவையான தொழில்நுட்ப உதவியும், ஜப்பானின் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது. (இ-7)

# நெவில் பெர்னாண்டோவிற்கு எதிராக வைத்திய அதிகாரிகள் முறைப்பாடு

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் தலைவர் டாக்டர் நெவில் பெர்னாண்டோவிற்கு எதிராக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் முறைப்பாடு செய்யவுள்ளனர்.



நாளை திங்கட்கிழமை பொலிஸ்மா அதிபரிடம் இந்த முறைப்பாட்டைச் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நெவில் பெர்னாண்டோ கருத்து வெளியிட்டு வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

வைத்தியர்களுக்கு எதிராக பொதுமக்களைத் தூண்டி விடும் வகையில் டாக்டர் நெவில் பெர்னாண்டோ கருத்து வெளியிட்டு வருவதாகத் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ-7)

# முஸ்லிம்களின் பிரச்சினையை தமிழர்களின் பிரச்சினையுடன் முடிச்சுப்போட வேண்டாம்

## அமைச்சர் றிசாத் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம்களின் மீள்குடியேற்ற பிரச்சினையையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட வேண்டாம் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

யாழ். முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் ஏற்பட்டுள்ள தடைகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பது தொடர்பான விசேட உயர்மட்ட கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அதில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் மீள்குடியேறத் துடிக்கும் யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டுக்கொண்டிருக்காமல் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த மாவட்டத்திலுள்ள சகல கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் முக்கியஸ்தர்களும் உதவ வேண்டும்.

முஸ்லிம்களை மீள்குடியேற்றுவது உங்கள் அனைவரதும் தார்மீகப் பொறுப்பு. மனிதாபிமான ரீதியில் அணுகப்பட வேண்டிய இந்தப் பிரச்சினையை வெறுமனே சட்டதிட்டங்களைப் பிரயோகித்தும் சுற்றுநிருபங்களை கையில் எடுத்துக் கொண்டு செயற்படுவதன் மூலமும் தீர்க்க முடியாது.

ஏற்கனவே துவண்டு போயுள்ள இந்த மக்களுக்கு தொடர்ந்தும் நோவினை உருவாக்குவதாகவே அது முடியும்.

மனச்சாட்சியின் அடிப்படையில் அரச அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் பணியாற்றினால் இந்தப் பிரச்சினை எப்போதோ முடிந்திருக்கும். யாழ்ப்பாண மாவட்டச் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது மீள்குடியேற முயற்சிக்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பமானதாகும்.



எனவே அதிகாரிகள் சாக்குப்போக்கு சொல்லிக் கொண்டு இருக்காமல் சகோதர இனம் என்ற உண்மையான எண்ணத்தில் இந்தப் பிரச்சினையை அணுகினால் இது ஒரு பெரிய பிரச்சினையே அல்ல. இல்லாவிட்டால் குடியேற்றுவதா? இல்லையா? என்ற முடிவை மேற்கொண்டு பகிரங்கமாக அறிவியுங்கள்.

முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் யாழ். கச்சேரியில் நான் பங்கேற்ற பல கலந்துரையாடல்களிலும் கூட்டங்களிலும் எடுக்கப்பட்ட முடிவுகளும் வழங்கப்பட்ட உறுதிமொழிகளும் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவிக்கின்றேன்.

மீள்குடியேற்றத்திலும் மாவட்டத்தில் காணிப் பற்றாக்குறை இருப்பதாக அதிகாரிகள் அப்போது சுட்டிக்காட்டிய போது ஏதாவது ஒரு குறித்த இடத்தை இனங்கண்டு தந்தால் அரசாங்கத்தின் உதவியுடனோ அல்லது அரபு நாட்டு நிறுவனங்களின் உதவியுடனோ அல்லது பரோபகாரிகளின் உதவியுடனோ மீள்குடியேற்ற முடியும் என கூறிய போதும் இன்று அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை. எந்த அறிக்கையும் தயாரிக்கப்படவுமில்லை.

நான் வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவன். யாழ்.மாவட்டத்தின் அரசியல் தலைமைகளும் அரச அதிகாரிகளும் திட்டமிட்டு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை முன்னெடுத்திருந்தால் இந்த மக்கள் எமது உதவியை நாடியிருக்கமாட்டார்கள்.

மீள்குடியேற்றச் செயலணியின் மூலம் வீடுகளை கட்டிக்கொடுக்க நாங்கள் பணம் ஒதுக்கிய போதும் அதற்கும்தடைபோடும்நிலையே இன்னும் இருக்கின்றது. அண்மையில் 200 வீடுகளை அமைத்துக் கொடுக்க நாங்கள் முன்வந்தபோது 69 வீடுகளுக்கே அனுமதி தரப்படும் என கூறப்பட்டு ஈற்றில் 29 வீடுகளே சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன.

இதுதான் இன்றைய முஸ்லிம்களின் நிலை. கூட்டிக் கழித்துப் பார்க்க போனால் சுமார் 700 குடும்பங்களே மீள்குடியேறத் தயாராகியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முஸ்லிம் மக்களின் எழுத்து மூலமான பல்வேறு கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு இதற்கான பொருத்தமான தீர்வுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், மாகாண சபை உறுப்பினர்களான அயூப் அஸ்மின், இமானுவேல் ஆனோல்ட் மற்றும் வடக்கு மீள்குடியேற்ற செயலணியின் பணிப்பாளர் யாசீன் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (இ-9)

# திருமலையில் நாளை மகிந்த அணி பேரணி

சீனக்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக, மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினர் நாளை திருகோணமலையில் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தவுள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பாக தகவல் வெளியிட்ட கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, நாட்டின் சொத்துக்களை விற்கும் அரசாங்கத்தின் முடிவை மீளாய்வு செய்வதற்கு அரசுக்கு எதிரான சக்திகள் அனைத்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சீனக் குடா எண்ணெய்க் குதங்களுடன், திருகோணமலை துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நிலங்களையும், இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு விற்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட அனைவரும் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க செயற்பாடுகளில் பாடசாலைகள் அதிக ஆர்வம்






பம்பலப்பிட்டி இந்து கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நல்லிணக்க நட்புத்தன்மை கொண்ட பாடசாலை நிகழ்ச்சித்திட் த்தில் 700 இற்கும் அதிகமான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒன்றிணைப்பிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சர் என்ற முறையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பல பாடசாலைகள் நாடளாவிய ரீதியில பங்குபற்றின. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற நல்லிணக்க நட்புத் தன்மை கொண்ட நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பிரைஸ் கட்சிசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் ஒன்றிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான இராஜாங்க அமைச்சர் பௌசியும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, ஐக்கிய நாடுகள் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வதிவிட பிரதிநிதி டிம் சுட்டான், ஒன்றிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி, இந்துக் கல்லூரி அதிபர் பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


இந்நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள் பாடசாலை ஆசிரியர்களையும் மாணவர்களையும் சமாதான தூதுவர்களாகவும் அறிவுரை வழங்குவோர்களாகவும் மாற்றுவதன் மூலம் நல்லிணக்கத்தை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுப்பதேயாகும் என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்தார்.

ஆற்றுப்படுத்தல், இழப்பீடு, நிலைமாற்றல் நீதி, மீண்டும் நடைபெறாமல் தடுப்பதற்கான ஒழுங்குகள் ஆகியவை நல்லிணக்க செயற்பாடுகளின் முக்கிய அம்சங்களாகும் என மாணவர்களினாலும் பங்குபற்றியவர்களாலும் எடுத்துரைக்கப்பட்டது. மதவாதம், இனவாதம், பிரதேசவாதம், நிறவாதம் மற்றும் பொருளாதார சமமின்மை என்பன தேசிய ஒருமைப்பாடு, சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பவற்றுக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. நம்பிக்கையின்மை, புரிந்துணர்வின்மை, வெறுப்புணர்வுகள் சமூகங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளன. குறுகியநோக்கம்கொண்ட அரசியல் இலாபம் தேடுபவர்கள் வெறுப்பான பேச்சுகள் மூலம் இன, மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவித்துள்ளனர்.

நல்லிணக்க நட்புத்தன்மை கொண்ட பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மாணவர்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி நம்பிக்கையை கட்டியெழுப்பி, புரிந்துணர்வை ஏற்படுத்தி அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதே இவ் விழிப்புணர்வின் நோக்கமாகும் என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். பாடசாலை ஒன்று கூடல் நிகழ்வுகளில் நல்லிணக்க பிரகடனம் உள்வாங்கப்படுவதுடன் இந்நிகழ்வுகளை பாடசாலைகளில் நிறுவனமயமாக்குவதற்கு பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் முன்மொழிந்தனர்.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அவுஸ்திரேலிய பூர்வீக மக்களின் நல்லிணக்க செய்முறையின் கற்றுக் கொண்டபாடங்கள் தொடர்பான வெற்றிகளை வெளிப்படுத்தினார். ஏனைய முக்கிய பிரமுகர்களும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான உபாயங்களையும் வழிமுறைகளையும் பற்றி கலந்துரையாடினர். (இ-7)

# நிழற்குடை சேதம் பயணிகள் அவதி



யாழ். தென்மராட்சி சங்கத்தானை திருப்புகழ் மண்டபச் சந்தியிலுள்ள பயணிகள் நிழற்குடையானது அண்மையில் வீசிய கடும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளது. இந் நிழற்குடையானது சில வருடங்களுக்கு முன்னர் தகரத்தினால் அமைக்கப்பட்டதனால் பாதுகாப்பற்ற நிலையில் சேதமடைந்து கடுங் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளது. இதனால் பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் கடும் வெயிலில் அவதிப்படுகின்றனர். எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து நிரந்தரமாக நிழற்குடையினை அமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-101)

# பண்டிதமணி கந்தையாவின் நினைவுக் குறிப்புக்கள்

சான்றோர் இனத்திருத்தலும் சிற்றினம் சேராதிருத்தலும் ஒருவனை நல்லோனாக்கும். நல்ல சேர்க்கையினால் சிந்தனை சிறக்கும் உயர் நெறியோடு வாழும் உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும். ஊர்கள் தோறும் இத்தகையோர் பெருக வேண்டும். அந்த வகையில் ஏழாலைக்குப் பெருமையை உண்டாக்கியவருள் பண்டிதமணி மு.கந்தையா சிறப்பிடம் பெற்றுள்ளாரெனக் கருதுகின்றேன். பெரியோர் ஓர் ஊருக்கு மட்டும் உரிமையானவர்களாக மாட்டார் என்பதும் ஒருதலை என்பதால் பெரியோருடன் பழகுதல் இன்பந்தருவதாகும்.

ஏழாலையூர் பண்டிதமணியின் வீட்டிற்கு ஒருநாள் பத்து மணியளவில்சென்றிருந்தேன். பண்டிதமணியின் மகளார் தேவி அவர்கள் முற்றத்தில் நின்ற என்னை வீட்டுக்குள் வருமாறு அழைக்கின்றார். உரையாடலில் என்குரலை இனங்கண்டு கிணற்றடிக்கு வரச்சொல்என்கின்றார். மலைநாட்டு உழவன் போன்று மிக நீளமான கௌபீனம் அணிந்த ஒருவராகக் கிணற்றடியில் நிற்கும் பண்டிதமணியை கண்ட எண் கண்கள் கிணற்றடிக்கு செல்லும் துணிவைத் தடுத்துன. அவர் இடையூறாக நினைக்காத போதும் என் கால்கள் தளர்நடைக்கு ஆட்பட்டுக் கொண்டன. உள்ளுணர்வாம் மேம்பாடுடைய ஐயா அவர் கள் நான் மட்டுந்தான்.. நீ ஆம்பிள்ளைதானேவாவென கலகலப்பாக அழைத்தார். நானும் சென்று கிணற்றுக்கட்டில் அமர்ந்தேன். வழமை போல இயல்பாகவே எமது உரையாடல் தொடர்ந்தது. பேச்சின் இடையே உடுப்புக்களைத் தோய்த்தலில் களைப்பில்லையா? யாரையேனும் உதவிக்குக் கேட்கலாமே எனத் தயங்கியவாறே கேட்கவும் செய்தேன். அனுதாபத்துடன் அவரிடம் எந்தவித சலனமும் இல்லை சிரித்த முகத்துடனே பதில் தந்தார்.

தன்னிடத்து வந்து சேரும் அழுக்குகளைத் தானே தான் துடைக்க வேண்டும் என் அழுக்கை யான் போக்காது யார் போக்குவது, புற அழுக்கைப் போக்க அகமும் தூய்மையும் பெறும் என்ற அந்தப் பதில்- எனக்கு-என் சிந்தனைக்கு விருந்தானது.

உடலின் இயல்பு அழுக்கை வெளியேற்ற முயல்வது -வியர்வையாக மலகோசமாகவெல்லாம் வெளியேற்ற முயல்வதும் புறத்தே படியும் வியர்வையைத் தாங்கிக் கொள்வதும் உடலின் இயல்பு தான். மனத்தது தூண்டுதலே படியும் அழுக்கைக் கழுவச் செய்வது அவ்வழுக்கைக் கழுவிக் கொள்ளாது விட்டால் நோயுண்டாகும். அழுக்கை மிகுதியாகச் சேராமற் தடுப்பது உடை-அது புற அழுக்கை உடலிற் சேரவிடாது தடுக்கும்- அந்த உடையானது தான் அழுக்கடைந்து உடலைக் காக்கும்.

அழுக்குகளைத் துடைக்காது விட்டால் அகமும் அழுக்காகும். புற அழுக்குகள் நீங்குமிடத்து அழுக்கும் நீங்கி மனமும் தூய்மை பெறும் என்ற கருத்தை மனம் சிந்தனையாற் பெற்றுக் கொண்டது.

பெரியவர்களோடு உரையாடும் போது முந்து கிளவாச் செறிவு -வேண்டும். முந்து கிளவாச் செறிவானது அவசரப்பட்டு ஏதேனும் சொல்லுதல். அவ்வாறு ஏதேனும் சொல்லி பெரியவர் வாயிலிருந்து வரும் நல்லறிவை- அந்த நல்லறிவான விளக்கத்தை இழந்து விடக் கூடாது. நன்றாகத் தெரிந்ததைச் சொல்கின்றால் என்றாலுங் கூட நாம் தெரிந்தவர் போலக் காட்டக் கூடாது. அவ்வாறு காட்டாதிருந்தால் சிலவேளை அதற்கூடாக மேலும் சில அறியலாமன்றோ! நான் செவிசாய்க்கின்றேன். கருத்துக்களைப் புரிந்துகொள்ளுகின்றோம். அகம் புறம் இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதனால் ஒருவர் தன்னழுக்கைத்தானே போக்கித் தூய்மை செய்தல் வேண்டும். உடலின் உள்ளே உள்ள கழிவுகளை அது வெளியகற்றும் போது ஈரப்பதனை உடை பெற்றுதான் அழுக்கடைந்து துர்மணத்தைப் பெறுகிறது. ஆக, புற அழுக்கை நீக்கப் புத்துணர்ச்சி ஏற்பட்டு நல்ல சிந்தனை வயத்ததாகி அகமும் தூய்மை பெறுகிறது. பொறாமை முதலிய அக அழுக்காயிருந்தாலும் புற அழுக்காயிருந்தாலும் தானே

> இலக்கிய கலாநிதி, பண்டிதமணி, சித்தாந்த சாகரம், ஏழாலை மு.கந்தையா அவர்களின் நூறாவது ஆண்டுத் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

முயன்று தம்மைத் தூய்மை செய்தல் அவசியம். இது போன்று எத்தனை எத்தனையோ அம்சங்களைப் பெரியோர் பலரிடமிருந்தும் எம்மாற் பெறமுடியும்.

இத்தகைய அறிவுக்களஞ்சியமாக பின்னாளில் விளங்கிய இவர் 1917-2002 வரை ஊன்றுகோலோடு நடமாடியவர். தன் ஆரம்பக் கல்வியைச் சைவ சன்மார்க்க வித்தியாசாலையிற் பெற்றார். இவரின் கல்வி விருத்திக்கான நல்ல அடித்தளம் இங்கே தான் உண்டானது. தான் கற்ற பாடசாலையிலேயே ஆசிரியர் பணியைத் தொடங்கிய இவர் 1938 தொடக்கம் 1951 வரை சேவையைத் தொடர்ந்தார். பின்னர் வேறு சில இடங்களிலும் பணி செய்து 1972 இல் 55 வயதில் ஓய்வு பெற்றார்.

ஓய்வின் பின்னர் நூலாராய்ச்சியிலும் சைவசித்தாந்த வகுப்புக்களை நடத்துவதிலும் நூல்களை எழுதுவதிலும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார். சைவ சிந்தாந்தத்தில் ஊறித் திளைத்த இவர் சைவம், இந்து இரண்டிற்கும் உள்ள இடைவெளியை ஓர்ந்துணர்ந்தார். சைவம் என்பதை நிலை நிறுத்தும் துணிவுடன் உழைத்தார்.

பண்டிதர் சைவத்தின் காவற்சிங்கம். யார் சைவக் கருத்துக்களுக்கும் மரபு வழிவந்த சைவானுஷ்டானத்துக்கும் மாறான கருத்துக்களை வெளியிடுகின்றார்களோ உடனே பாய்ந்து பண்டிதர் கர்ச்சிப்பார். அவர் நண்பரோ, உறவினரோ, பேராசிரியரோ,சமயப் பெரியாரோ என்றும் பார்க்க மாட்டார். அதனால் அநேக நண்பர்கள் பகையாளர்களாகிப் பேராசிரியர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார். பிராமணக்குலத்தினர் பலருடைய கோபத்துக்கும் ஆளானார். சுத்த சைவசித்தாந்த மரபொழுக்கத்துக்கு மாறான கடவுள் வழிபாடுகளை அவ்வப்போது கண்டித்துப் பல பெரியார்களின் வெறுப்பையும் ஈட்டிக் கொண்டார். அவர் தனது கண்டனங்களைக் கல்லச்சிட்டுப் பரப்புவார். இவ்வாறு தம் கருத்தில் உள்ள தெளிவும் உறுதியும் நம்மையெல்லாம் ஈர்க்கும் வகையின.

பண்டிதமணியவர்கள், முப்பத்தைந்து நூல்களுக்கு மேல் எழுதியவர். முடிந்த முடிவான கருத்துக்களை தர்க்க முறையில் எழுதியவர். சைவத்தமிழ் மாணவர் பலரை உருவாக்கியவர். என்னையும் ஒரு பொருட்டாக மதித்து நல்லை ஆதீனப் பெருவிழா ஒன்றில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஊடாக சித்தாந்தப் புலமைக்கான விருது தந்து சிறப்பித்தவர்.

இத்தகைய பெரியார் பண்டிதமணி அவர்கள் சிறந்த ஆசாரசீலர். என்றும் நினைவிற் கொள்ளத்தக்கவர். நாமும் அவரைப் போற்றி அவர் நூல்களில் திளைப்போமாக!

**கடம்பேசுவரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தகவல்



புதிய அரசியலமைப்பை உருவாக்கும் சகல நடவடிக்கைகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளன. பிரதான கட்சிகள் மத்தியில் உள்ளக கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்ற நிலையில் விரைவில் அரசியல் அமைப்பின் இறுதி திட்ட வரைவு கொண்டு வரப்படும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நல்லிணக்கத்தை உருவாக்குவது கடினமான ஒரு காரியம் அல்ல. ஆனால் அதை உருவாக்குவது அரசியல் தலைமைகளின் கைகளில் மாத்திரமே உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம், பண்டாரநாயக்க வெளிநாட்டு கற்கைகளுக்கான நிலையம் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் இணைந்து நடத்திய சமாதானத்தை கட்டியெழுப்பும் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு எட்டு ஆண்டுகள் கடந்துள்ளன. நாட்டின் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்ற பாதையில் நாம் தொடர்ந்தும் பயணிக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. இப்போது ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றமானது மிகவும் அவசியமான மாற்றமாகும். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்தும் எந்தவொரு மாற்றமும் இடம்பெறாது நல்லிணக்கத்துக்கான பாதை மூடப்பட்டிருந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றம் மூலம் இன முரண்பாடுகளில் இருந்து விடுபடும் நோக்கம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கான அரசியல் தலைமைத்துவம் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

ஆட்சி மாற்றத்தின் மூலமாக நாட்டின் பாதையை மாற்றவே பிரதான இரண்டு கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியன இணைந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளன. பொது உடன்படிக்கை ஒன்றின் மூலமாக இந்த பயணம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த பயணத்தில் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளும், சிவில் அமைப்புகளும் இணைந்து அரசாங்கத்தின் பயணத்தில் அங்கம் வகித்து வருகின்றன. இந்த பயணத்தில் பல்வேறு அவசியமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இதில் எதனை முதலில் மேற்கொள்வது என்ற கேள்வி உள்ளது. இப்போதிருக்கும் நிலைமையில் அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியமாகும். அரசியலமைப்பின் மூலமாக மக்களின் உரிமைகள், சுதந்திரம், அரசியல் நகர்வுகள், அதிகாரங்கள் என்ற அனைத்தையும் மாற்றியமைக்க வேண்டும்.

இந்த நாடு பௌத்த மத பிணைப்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் நாடாகும். எமது கலாசாரம் அரசியல் அனைத்தும் பௌத்த சிங்கள தன்மையில் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே எந்த சந்தர்ப்பத்திலும் புதிய அரசியல் அமைப்பு பௌத்த சிங்கள தன்மைக்கு அப்பால் சென்று உருவாக்கப்படப் போவதில்லை.

ஏனைய மதங்களும் தமது உரிமைகளை பாதுகாத்து சுதந்திரமாக செயற்பட அனுமதியும் வழங்கப்பட வேண்டும். இன்றும் சிறுபான்மை மக்கள் மீதான அழுத்தங்கள் மற்றும் தாக்குதல்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. ஒரு காலத்தில் யுத்தம் முடிவுக்கு வரும் வரையில் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறை காணப்பட்டது. ஆனால் அது இன்று முடிவுக்கு வந்துள்ள போதிலும் முஸ்லிம் மக்கள் மீதான அடக்கு முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் இருந்து முஸ்லிம் மக்கள் இலக்குவைக்கப்பட்டு வருகின்றனர். பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்றமை மற்றும் முஸ்லிம் இனத்தவர் மீதான இலக்கு வைக்கப்பட்ட அடைக்குறை நடவடிக்கைகள் என்பன சுட்டிக்காட்டத்தக்கன. அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை தடுக்க வேண்டும்.

ஆகவே புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் நோக்கத்தில் நாம் அனைவரும் செயற்பட்டு வருகின்றோம். பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு சபையின் மூலமாகவும் அதேபோல் மக்களின் கருத்துக்களை வினவியும் சிவில் சமூகங்களின் ஒத்துழைப்புகளை பெற்றும் மிகவும் தகுதியானதும் தரமானதுமான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கைகளில் சகலரதும் பங்களிப்பை உள்வாங்கி செயற்படுவதே பிரதான விடயமாகும். இப்போது புதிய அரசியல் அமைப்பு உருவாக்கும் சகல நடவடிக்கைகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளன. பிரதான கட்சிகள் மத்தியில் உள்ளக கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. விரைவில் அரசியல் அமைப்பின் இறுதி திட்ட வரைபை கொண்டுவர முடியும்.

மேலும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் மீண்டும் உரிய பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்ட வேண்டும். அதே போல் மொழி பிரச்சினையும் பிரதான பிரச்சினையாக உள்ளது. ஆகவே சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளை சம மொழியாக கொண்டு வரவும் அரச காரியாலயங்கள் மற்றும் அரச செயற்பாடுகளில் இரண்டு மொழிகளையும் முன்னெடுக்கவும் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

நல்லிணக்க செயலணியின் கடந்த ஒன்றரை ஆண்டுகால விழிப்புணர்வு செயலமர்வுகள் மற்றும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே நல்லிணக்கத்தை உருவாக்குவது என்பது கடினமான ஒரு காரியம் அல்ல. ஆனால் அதை உருவாக்குவது அரசியல் தலைமைகளின் கைகளில் மாத்திரமே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரட்டைக் குடியுரிமை கொண்ட எம்.பி.கீதா குமாரசிங்க மட்டுமே

இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க மட்டுமேயாகும் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இரட்டைக் குடியுரிமை கொண்டுள்ளதாக இதுவரையில் தெரிய வரவில்லை என அவர் தெரிவித்தார்.

எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படவுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினரான கீதா குமாரசிங்க சுவிட்சர்லாந்து குடியுரிமையையும் பெற்றுக் கொண்டுள்ளார் என குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குறித்த பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அமைய நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் நபர்கள் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்கக் கூடாது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இடைக்கால வாக்காளர் பட்டியல் தயாரிக்க ஆணைக்குழு திட்டம்

சப்ரகமுவ, வட மத்திய மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களின் தேர்தல் அல்லது உள்ளூராட்சி சபை தேர்தல் என்பன அறிவிக்கப்படும் தினத்தன்று 18 வயதை அடைந்துள்ள சகல இளைஞர், யுவதிகளுக்கும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு குறித்த தினத்தன்று 18 வயதை அடைந்துள்ள சகலருடைய பெயர்களும் அடங்கும் வகையில் இடைக்கால பெயர்ப்பட்டியல் ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இது தொடர்பான சட்ட ஒழுங்குகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடைபெற்றால் அதற்கமைய 2016 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படவுள்ளது. இதனால், கடந்த 2016 ஜூன் மாதம் முதல் இவ்வருடம் ஒக்டோபர் வரையில் 18 வயதை அடைந்துள்ள இளைஞர், யுவதிகள் வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிடுகின்றனர்.

இதற்கான ஒரு உடனடி தீர்வாக இடைக்கால பெயர்ப் பட்டியல் ஒன்றை தயாரிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)




### எம் துயர் போக்கும் தாயே...

நயினை எனும் ஊரினில்
நாகத்தின் மீது அமர்ந்து காட்சி தரும்
நாகபூஷணித் தாயே! விஷம் என
போற்றும் நாகத்தின் மீது அமர்ந்து
அருள் புரியும் நாகபூஷணி தாயே
நம் நாட்டில் உள்ள
விசமிகளை அழித்து எம் துயர்
போக்க எழுந்தருளி வா தாயே...

*ஜீ.சயுக்ஷிகன்,*
*நுவரெலியா.*

### நாயகியே நீ வருவாய்



வெள்ளியலை கரை வந்து
நுரை பொங்கித் தாலாட்ட
வெண்ணாகம் குடை பிடிக்க
நுழைவாயில் தான் திறக்க


அன்னை நீ வீற்றிருந்து
அனுதினம் அருள் மழை பொழிய
வருமடியார் உனை வணங்க
வாழ்வெல்லாம் நீயானாய்

நானிலம் போற்றி வணங்கும்
நாயகியே நீ வருவாய்
நம்பியோர்க்கு நலமருள்வாய்
நயினை நாமகள் தாயே

*சி.திவ்வியா*
*யா.ப.மெ.ம.வி*

### ஆண்டருள்வாள்!

பல்லவி
நாடி வரும் அடியவர்க்கு நாளுமருள் புரியவென்று
நயினை நற்பதியமர்ந்தாள் நாகபூஷணி !.... (நாடி)
அனுபல்லவி
கோடி நன்மைகள் தந்து குறைகள் களைந்திடுவாள்
குவலயத்தில் என்றும் அவளே எம் கண்மணி (நாடி)
சரணம்
அலைகடல் ஓரத்தில் அழகான கோவில் கொண்டு
அருள்மாரி பொழிகின்றாள் அகிலாண்டேஸ்வரி
நிலையான பேரின்ப நெறிகாட்டி அடியவர் தம்
நெஞ்சங்களில் உறைவாள் புவனேஸ்வரி... (நாடி)



நினைத்ததை நடத்தி வைப்பாள்!
நித்திலமாய் ஜொலிப்பாள்!
நினைவினில் நீங்காது நிலைத்து நிதம் இருப்பாள்!
அனைத்தையும் ஆளுகின்ற அன்னை நயினையிலே
ஆறுதல் தந்தெம்மை ஆண்டருள்வாள்!... (நாடி)

கீழ்கரவை.கி.குலசேகரன்
ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி, ஆதர் சிறிசேன மாவத்த
அப்புத்தளை.

### அன்புடனே எமைக்காக்கும் ஸ்ரீ நாகபூஷணி

உருவமானவள் அன்னை உணர்வுமானவள்
அருவமானவள் தேவி அபயமளிப்பவள்
ஏழு உலகமும் போற்றும் இறைவியானவள்
ஐந்து தலை சர்ப்பத்திலே வீற்றிருப்பவள்
சிவபெருமானின் இடபாகம் ஆயினாள்
ஆனைமுகன் ஆறுமுகன் அம்மையாயினாள்
அலைகடல் ஆர்ப்பரிக்கும் நயினையம்பதியில்
அன்புடனே எமைக்காக்கும் ஸ்ரீ நாகபூஷணி

த.அபிநாத்
*9B, யாழ். இந்துக் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மாவட்ட செயலக

# மாநாட்டு மண்டப புதிய கட்டடம் நேற்று வஜிர அபேவர்தனவினால் திறந்து வைப்பு





முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாநாட்டு மண்டப கட்டடத்தை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன நேற்றுக் காலை 9 மணியளவில் திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாநாட்டு மண்டபத்தின் பெயர்ப்பலகையை அமைச்சர் வஜிர அபேவர்தன திரைநீக்கம் செய்துவைத்து கட்டடத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து வளாகத்தில் அமைக்கப்பெற்ற சிற்றுண்டிசாலையை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், பொலநறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிட்ணி ஜெயரட்ண, வடக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், பிரதேச செயலாளர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (2-281)




## கிளிநொச்சியில் சர்வதேச புகைத்தல், போதைப்பொருள் எதிர்ப்பு ஊர்வலம்




கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகமும் கிளிநொச்சி சமுர்த்தி அபிவிருத்தி வங்கியும் இணைந்து சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் இருந்து நேற்று முன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்ட புகைத்தல் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு ஊர்வலம் கரைச்சிப் பிரதேச செயலக முன்றலை சென்றடைந்தது.

அங்கு மாதிரி சிகரெட் மற்றும் மதுப்போத்தல் என்பன எரிக்கப்பட்டு உறுதிமொழியும் எடுக்கப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் புகைத்தல்,மற்றும் போதைப் பாவனைக்கு எதிரான வாசகங்களும் எழுதப்பட்டிருந்தன.

இதில் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கிளிநொச்சி வாழ்வின் எழுச்சி திணைக்கள உதவிப் பணிப்பாளர், மதகுருமார்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (2-312)

## பொதுக் கூட்டம்

கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் வைரவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி நடத்த திட்டமிட்டுள்ளது.

அது தொடர்பான பணிகளை பிரித்துக் கொடுப்பதற்காகவும் கருத்துக்களை முன்வைப்பதற்காகவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி பொது மண்டபத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் அனைவரையும் வருகை தருமாறு கல்லூரி அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். (2)

## சமுர்த்திப் பயனாளிகளிடையே ஏப்ரல் மாத அதிர்ஷ்ட சீட்டுக்குலுக்கல் 14 பயனாளிகள் தெரிவாகினர்

(மல்லாவி)

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புதல் அமைச்சினால் நாடுதழுவிய ரீதியில் ஏழ்மை நிலையில் உள்ள சமூர்த்திப் பயனாளிகளுக்கிடையே மாதாந்தம் நடத்தி வரும் வீடமைப்பு அதிர்ஷ்டச் சீட்டுக் குலுக்கலில் ஏப்ரல் மாத சீட்டுக் குலுக்கலின் மூலம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 14 பயனாளிகள் வெற்றி பெற்றுள்ளதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புதல் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புதல் அமைச்சினால் நாடு தழுவிய ரீதியில் உள்ள சமூர்த்தி பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் வீடமைப்பு அதிர்ஷ்டச் சீட்டுக் குலுக்கலை மாதாந்தம் நடத்தி வருகின்றது.

இதற்கமைய, கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற குலுக்கலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து தலா ஒருவர் வீதம் 5 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

இதற்கமைய, மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் இருந்து, ஒருவரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் இருந்து, இருவரும், துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் இருந்து ஒருவரும், வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவில் இருந்து ஒருவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து 5 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

இதற்கமைய மடு பிரதேச செயலக பிரிவு, மன்னார் நகர் பிரதேச செயலக பிரிவு, மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவு, முசலி பிரதேச செயலக பிரிவு, நானாட்டான் பிரதேச செயலக பிரிவு ஆகியவற்றில் இருந்து தலா ஒருவர் வீதம் வெற்றி பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 4 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

இதற்கமைய கரைச்சி பிரதேச செயலக பிரிவு, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவு, பூநகரி பிரதேச செயலக பிரிவு ஆகியவற்றில் இருந்து தலா ஒருவர் வீதம் வெற்றி பெற்றுள்ளனர்.

வெற்றி பெற்றுள்ள வெற்றியாளர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபா பணப் பரிசு வழங்கப்படவுள்ளது.

இந்தப் பணப் பரிசைப் பயன்படுத்தி சமுர்த்தி அலுவலரின் ஒப்புதலுடன் புதிதாக வீடு ஒன்றை அமைத்து கொள்ளலாம். அல்லது காணி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம், அல்லது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சிகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். அல்லது உயர் கல்வி கற்று வரும் பிள்ளைகளின் எதிர்காலக்கல்விக்காக செலவு செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## இராணுவத்தினர், விவசாயிகள் ஒன்றிணைந்து தென்னியன்குளம் சிரமதானம் மூலம் துப்புரவு




(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள தென்னியன் குளத்தின் அணைக்கட்டு மற்றும் பிரதான கால்வாய்கள், கிளை வாய்க்கால்கள் உள்ளடங்கிய பகுதிகளை சிரமதானப் பணி மூலம் சுத்தப்படுத்தும் வேலைகளில் ஆயிரத்து 100 இராணுவ வீரர்களும் 200 விவசாயிகளும் இணைந்து மேற்கொண்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்நிகழ்வில் இலங்கைத் தரைப்படையின் 65 ஆவது படைப்பிரிவின் ஆயிரத்து 100 படை வீரர்களும் விவசாயிகள் 200 பேருமாக மொத்தம் ஆயிரத்து 300 பேர் பங்கு கொண்ட சிரமதானப் பணியின் போது, வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்திற்கு பின்னர் பெரும் பற்றைக் காடாக இருந்த 4 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பிரதான அணைக்கட்டின் இரு பக்கங்களும் துப்புரவு வேலைகள் நடைபெற்றுள்ளன.

அத்துடன் தென்னியன் குளத்தின் 2 பிரதான கால்வாய்கள் உட்பட கிளை வாய்க்கால்கள் சுமார் 12 கிலோ மீற்றர் தூரத்திற்கு துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சீமெந்துக் கலவை மூலம் அமைக்கப்பட்டிருந்த கால்வாய்களில் தேங்கி இருந்த கழிவு மண் சில ஆயிரம் மீற்றர் தூரத்திற்கு வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

இந்த சிரமதானப் பணிகளின் போது கழிவகற்றலுக்கு இராணுவத்தினரின் உழவு இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன படுத்தப்பட்டுள்ளன.

சிரமதானப் பணியில் கிளிநொச்சி / முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான இராணுவ கட்டளை அதிகாரி மற்றும் இராணுவ படைத் தளபதிகள், வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இது தொடர்பில் தென்னியன் குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக துப்புரவுப் பணி மேற்கொள்ளப்படாத நிலையில் இருந்த குளத்தின் அணைக்கட்டு மற்றும் பிரதான கால்வாய்கள், கிளை கால்வாய்கள் என்பனவற்றால் நீர் வீண்விரயம் ஏற்பட்டு வந்ததுடன், விவசாயிகள் தமது விளை நிலங்களுக்கு செல்லும் போது காட்டு விலங்குகள் மற்றும் நச்சுப் பாம்புகளுக்கு பயந்த நிலையில் சென்று வரவேண்டிய சூழ் நிலையுடன் காட்டு விலங்குகளினால் பயிரழிவையும் சந்தித்து வந்தனர். இச் சிரமதானப் பணி மூலம் சிறந்த நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறினர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமாலைக்காரனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்.

*~ தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீங்கள் மதிக்காததை அவர்கள் மதிப்பார்களா?

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழரசுக் கட்சியின் தலைமை கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மக்களின் கடும் எதிர்ப்பினால் பிசுபிசுத்துப் போயிற்று.

பரவாயில்லை முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள அபரிமிதமான நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அறிய முடியாதவர்கள் செய்த வேலை என்று விட்டுவிடலாம் என்றால் அதற்கும் உடன்பாடு இல்லாது உள்ளது.

தமக்கு ஏற்பட்ட தோல்வியை சகிக்க முடியாதவர்கள் தேவையில்லாமல் கதைத்து தங்களின் செல்வாக்கை இழந்து வருகின்றனர். இவ்வாறு கதைப்பவர்களால் தமிழரசுக் கட்சிக்கு மக்களின் ஆதரவு மிக வேகமாக குறைந்து வருகின்றது என்பதை கட்சியின் தலைமையால் இன்னமும் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

அவ்வாறான புரிதல் இருந்தால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்பிலோ அல்லது தமிழ் மக்கள் நடத்திய பேரணிகள் தொடர்பிலோ தமிழரசுக் கட்சியினர் வாய் திறக்கக் கூடாது என கடும் உத்தரவு பிறப்பித்திருப்பர்.

ஆனால் அதை அவர்கள் செய்யாதவரை தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு அதலபாதாளத்தை நோக்கி விழுந்து செல்கின்றது.

இந்த வீழ்ச்சி உண்மையில் கவலையளிக்கின்றது. எனினும் இதுபற்றி சிந்திக்க வேண்டியவர்கள் சிந்திக்காதபோது நமது கவலைகள் அர்த்தமற்றவை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு பழமையான கட்சி. தந்தை செல்வநாயகம் போன்ற தலைவர்களால் கட்டிக் காக்கப்பட்டது. தன் சொத்துக்களை விற்று கட்சியை வளர்த்தவர் தந்தை செல்வா.

என்ன செய்வது! இன்று அந்த நிலைமை இல்லையென்றாலும் பரவாயில்லை. கட்சியையாவது காப்பாற்றினால் போதுமென்றளவில் அது கூட சாத்தியமற்றது என்று கூறுமளவில் கட்சியின் சமகால நிலைமையிருக்கின்றது.

சரி இது ஒருபுறமிருக்க, வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக மக்கள் நடத்திய பூரண கடையடைப்பு போராட்டம், பேரணி என்பன குறித்து தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் விடுத்துவரும் கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த விமர்சனத்துக்குள்ளாகிறது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக பேரணி நடத்தியவர்கள் வெறும் நூறு பேர் என்று தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் கூறியுள்ளார். அவர் கூறியது பற்றி யாரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

அவர் அவ்வாறு கூறியது முதலமைச்சருக்கோ அல்லது உணர்வுபூர்வமாக பேரணி மற்றும் கடையடைப்பு நடத்திய ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கோ எந்த பாதிப்பையும் தரப்போவதில்லை. மாறாக இந்த கருத்தை கூறியவர் மீதும் தமிழரசுக் கட்சி மீதுமே மக்கள் விரக்தி அடைவர்.

இதை நாம் கூறும்போது, அப்படியானால் இந்த விடயத்தை ஏன் இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கின்றீர்கள் என்று நீங்கள் கேட்கவும் கூடும்.

அவ்வாறான கேள்விக்கு எங்கள் பதில் இது தான். அதாவது முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக வட மாகாணம் முழுவதும் கடையடைப்பு, பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதற்கு மேலாக பல்லாயிரக்கணக்கான மக்கள் நல்லூரில் திரண்டு முதலமைச்சருக்கான தங்களின் ஆதரவைத் தெரிவித்திருந்தனர். கோவில் வீதி வழியாக பேரணி நடத்தி முதலமைச்சரிடம் தங்களின் ஆதரவை வெளிப்படுத்தினர் எனும் போது அதற்கு தமிழரசுக் கட்சி உரிய மதிப்பைக் கொடுக்க வேண்டும் அல்லவா?

ஒரு பெரும் ஆதரவு போராட்டம் கண்முன் நடக்கும் போது அதனை கொச்சைப்படுத்தும் நீங்கள், இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், கடையடைப்புக்களை நடத்தும் போது அதற்கு அவர்கள் மதிப்பளிப்பார்கள் என்று நம்புகின்றீர்களே! உங்கள் நம்பிக்கை எந்தளவு தூரம் ஏற்புடை யது என்பதை ஒருக்கால் சிந்தியுங்கள்.

உங்களால் முடியாததை மற்றவர்களில் எதிர்பார்ப்பது மகா மடமைத்தனம் என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.

# போராடிப் பெற்றதால் பழிவாங்கப்படுகின்றோமோ!

## பிலவுக்குடியிருப்பு மக்கள் அச்சம்

முல்லைத்தீவு - பிலவுக்குடியிருப்புப் பகுதியில், மக்கள் மீள்குடியேறி நான்கு மாதங்களைக் கடந்துள்ள போதும், தமக்கான எந்த உதவிகளும் வழங்கப்படாது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக மேற்படி பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு - பிலவுக்குடியிருப்புப் பகுதியில், தங்களுடைய காணிகளை விடுவிக்கக் கோரி, கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 1ஆம் திகதி வரையான ஒரு மாத காலம், விமானப்படையினருக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து, கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி, குறித்த பகுதி விடுவிக்கப்பட்டு மக்கள் மீள் குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில், இப்பகுதியில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளோ அல்லது நிரந்தர வீடுகளோ வழங்கப்படாது அவர்களால் அமைக்கப்பட்ட தறப்பாள் கொட்டகைகளில் பெரும் சிரமங்களின் மத்தியில வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் மக்கள் மீள்குடியேறி நான்கு மாதங்களாகிய போதும், இதுவரை எந்த விதமான உதவிகளும் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் ஒரு மாத காலம் நிலத்துக்காகப் போராடியதன் பழிவாங்கலாகவே இவ்வாறு உதவிகள் மறுக்கப்பட்டிருக்கின்றனவோ என இப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

முகாமில் இருந்து மீள் குடியேற்றத்துக்காக கொண்டு வரப்பட்ட மக்களை சொந்த இடத்தில் குடியமர்த்தும் போது தற்காலிக வீடுகள் மற்றும் இதர உதவிகள் வழங்கப்படுவது வழமை. ஆனால், எங்களை கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் கட்டாயத்தின் பேரில் தங்க வைத்து விட்டு, இப்போது நாங்கள் உதவிகளைக் கேட்கின்ற போது, மாதிரிக் கிராமத்தில் சகல உதவிகளும் செய்யப்பட்டுள்ளதென அதிகாரிகளால தெரிவிக்கப்படுகின்றது.

நாங்கள் மாதிரிக் கிராமத்தில் எந்த உதவிகளையும் கேட்கவில்லை. எங்களுடைய சொந்த நிலத்தில் குடியேறுவதற்கும் அதற்கான அடிப்படை உதவிகளையும் தருமாறும்தான் கேட்டிருந்தோம். ஆனால், இன்று நான்கு மாதங்களாகியும் நிலத்தை போராடிப் பெற்றதன் பழிவாங்கலாக, எங்களுக்கான உதவிகள் புறக்கணிக்கப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (மு-281)

# கூட்டுறவு இயக்கம் வரியிலிருந்து விடுவிக்கப்படும்

## ஜனாதிபதி உறுதி

மக்கள் இயக்கமான கூட்டுறவு இயக்கத்தை பலப்படுத்துவதற்கு தேவையான அனைத்து தீர்மானங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, கூட்டுறவு இயக்கத்தை வரியிலிருந்து விடுவிப்பது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் குருநாகல மாலிகாபிடிய விளையாட்டரங்கில் நடைபெற்ற 95ஆவது சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் இதனைத் தெரிவித்தார்.

மக்களின் நண்பனாக செயற்பட்டுவரும் மக்கள் இயக்கமான கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்துவது நாட்டின் வறுமையை ஒழித்துக்கட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய அம்சமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வெளிநாட்டு சொத்துக்களை பலப்படுத்துவதைப் போன்று ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு கூட்டுறவு இயக்கத்திற்கு சொந்தமான பெரும்பாலான துறைகளை மேம்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஏற்கெனவே யுள்ள கைத்தொழில்களை மேம்படுத்தும் அதேவேளை புதிய கைத்தொழில்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

கூட்டுறவு இயக்கத்தில் உள்ள பிரச்சினைகளை தீர்த்து எதிர்காலத்தில் அதனை பலமான இயக்கமாக மாற்றி புதிய நிகழ்ச்சித் திட்டங்களுடன் முன் கொண்டு செல்வதற்கு அரசாங்கம அனைத்து நடவடிககைகளையும் மேற்கொள்ளும் என்பதுடன், கூட்டுறவு இயக்கதின் 2020 தொலை நோக்கை வெற்றிபெறச் செய்வதற்கு இத்துறையில் உள்ள அனைவரும் தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (மு)

# மயிலிட்டி துறைமுகத்தில் நாளை ஒன்றுகூடுங்கள்

27 வருடங்களின் பின்னர் மயிலிட்டி துறைமுகம் ஒருபகுதி நிலப்பரப்பு நாளை திங்கட்கிழமை விடுவிக்கப்படவுள்ளதால் இதில் மயிலிட்டி மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு குழுவின் செயலாளர் டா. அந்தோனிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படி துறைமுகமும் 59 ஏக்கர் நிலப்பரப்பும் விடுவிக்கப்படும் நிலையில் சகல மக்களும் சென்று வருவதற்கு ஏதுவான நிலையில் பருத்தித்துறை எரிஞ்ச அம்மன் கோவிலடியில் உள்ள மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கத்தில் இருந்து நாளைய தினம் காலை 7 மணிக்கு பேருந்துகள் புறப்படும்.

உணவு, குடிதண்ணீர், போக்குவரத்து வசதிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக மேற்படி சங்கம் அறிவித்துள்ளது. (இ-60)

# சாஸ்திரங்கள்

✦ செம்பருத்திப்பூவை உலர வைத்து பொடி செய்து தினமும் சாப்பாட்டில் சேர்த்து வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும். கறிவேப்பிலையை அரைத்து தயிருடன் சாப்பிட்டால் சீதபேதி நீங்கும்.

-வைத்திய சாஸ்திரம்

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பெயர் முதல் எழுத்தை வைத்து பொருத்தம் பார்க்கலாமா?**

பெயர் நட்சத்திர அடிப்படையில் தான் வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியாத பட்சத்தில் பெயத் மதுல் எழுத்தை வைத்துப் பார்ப்பது முற்றிலும் ஜோதிட சாஸ்திரத்திற்குப் புறம்பானதாகும். (தொடரும்)

# குழந்தைகளுக்கு உணவு ஊட்டும் போது

உணவு தயாரிக்கும்போது உறைப்பு, வாசனைப் பொருட்களைச் சேர்க்காதிருப்போம்

உள்ளூரில் பெறக்கூடிய உணவு வகைகளுக்கு முன்னுரிமை யளிப்போம்

சாப்பாட்டு வேளைகளுக்கிடையில் சொக்லேட், பிஸ்கட், இனிப்புப் பானங்கள் வழங்குவதைத் தவிர்ப்போம்.

சாப்பாட்டின் பின் வெட்டிய பழங்களையோ பழக்கலவையையோ வழங்குவோம்.

வலிந்து உணவூட்டுவதைத் தவிர்ப்போம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
[illegible]




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அரசன் அண்டியதுமே புற்றில் புகல் கொண்டிருந்த நாராயணன் நானிலத்தின் மேல் எழுந்து நின்றான். அவன் உச்சந்தலையில் ஈருந்து உதிரம் பெருகிக் கொண்டிருந்தது.

நாராயணனையே நானிலத்தில் பார்த்தவுடன் அரசின் அங்கமெலாம் பதறியது. இப்படி நிகழும் என்று எவர்தான் எதிர்பார்க்க இயலும்?

செங்கமலக்கண்ணன் சீறினான்.

மன்னவா! உன் குடிமக்களில் ஒருவனாய் உள்ள எனக்கு அரண்மனைப் பசு பாலை ஈந்துவிட்டதால் அது பஞ்சமா பாதகங்களில் ஒன்றா என்ன? அந்தப் பாலை அருந்தியதால் எனக்கு இப்படிப்பட்டதொரு தண்டனையா? உன் குற்றேவலர்களில் ஒருவன் இழைத்த குற்றத்தைக் கண்டாயா? குற்றமழைத்தது அவனாயினும் கொற்றவனான நீதான் அதற்கான அபராதத்தைச் செலுத்த வேண்டும். ஆதலால் நீ அவனி மக்கள் அருவருக்கும் பூதமாக மாறி அல்லற்படுவாயாக என்று சாபமிட்டான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வாய் மனோகராவை வெற்றிகொண்டு அரையிறுதிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன்



அல்வாய் நண்பர்கள் நடத்தும் அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 28.06.2017 அன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து விளையாடியது பலாலி விண்மீன் அணி. முதல் பாதியாட்டத்தில் அல்வாய் மனோகரா அணிக்கு கிடைக்கப்பெற்ற தண்ட உதையினை கோலாக மாற்ற 1:0 என்ற கோல் கணக்கில் முதல் பாதியாட்டம் முடிவிற்கு வந்தது.

இரண்டாம் பாதியாட்டத்தில் விண்மீன் வீரன் நிக்சனுக்கு கிடைக்கப்பெற்ற பந்தை தலையால் முட்டி கோலாக்க 1:1 என்ற நிலையில் ஆட்டம் முடிவிற்கு வந்தது.

நடுவர்களால் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன். (க)

# ஞானமுருகன் வெற்றி




உரும்பிராய் சென். மைக்கேல விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 30.6.2017 அன்று நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் அணி மோதியது. நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகத்தை 4-0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிகொண்டு அடுத்த சுற்றுக்கு தெரிவானது ஞானமுருகன் அணி.

ஞானமுருகன் அணி சார்பில் ஜெகன் இருகோல்களையும் சுபாஸ், தாரகன் தலா ஒரு கோலினையும் போட்டனர். (க)

# நட்சத்திர வீரர் கஜகோபன்,சயந்தன் அதிரடி அரையிறுதிக்குள் நுழைந்தது ஊரெழு றோயல்



வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வருகின்ற அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 30.06.2017 ஆட்டத்தில் கஜந்தன் தலைமையிலான ஊரெழு றோயல் அணி குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியுடன் மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஊரெழு றோயல் அணி 2 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

றோயல் அணி சார்பில் கஜகோபன் 1, சயந்தன் 1 கோல்களை பெற்றனர். (க)

# வவுனியா பிறீமியர் லீக் தொடரில் அரையிறுதியில் யங்ஸ்ரார் அணி

வவுனியா பிறீமியர் லீக் தொடரில் அண்மையில் நடைபெற்ற 4 ஆவது காலிறுதி ஆட்டத்தில் யங்ஸ்ரார் மற்றும் கோல்டன் பிறதர்ஸ் அணிகள் மோதின.

ஆட்ட நேரமுடிவில் யங்ஸ்ரார் அணி 7-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றதுடன் அணி சார்பில் யாழ்.வீரர்கள் நிதர்சன் 3 மற்றும் கலிஸ்ரன் 1, மயூரன் 2, யுவராஜ் 1 கோல்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு போட்டிகளில் நிதர்சன் அணிக்காக இதுவரை 7 கோல்களை பெற்றுக் கொடுத்தமை சிறப்பாகும்.

யங்ஸ்ரார் அணி அரையிறுதியில் யாழ்.ஹென்றீசியன் வீரர்களை உள்ளடக்கிய ஈஸ்வரன் அணியை எதிர்த்தாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(க)

# கூடைப் பந்தாட்ட போட்டி

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடைபெறும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

# கற்கோவளம் உதயதாரகை வி.க. நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## பொம்மர்ஸ்,அன்ரனிஸ் வெற்றி



அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 29.06.2017 அன்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் 4.1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற். ஆட்டநாயகனாக பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த உதயராஜ் தெரிவு செய்யப்பட்டார். பதக்கம் கற்கோவளம் உதயதாரகை கழகத்தின் நலன் விரும்பி துரைசிங்கத்தால் வழங்கப்பட்டது.

இரண்டாவது ஆட்டம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை (A) எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 7.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.ஆட்ட நாயகனாக சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த வினோ தெரிவு செய்யப்பட்டார்.

இதனை கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர் தூயவன் வழங்கி கௌரவித்தார். (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அணிக்கு 9 பேர் 8 பந்துப் பந்து பரிமாற்றம் கொண்ட போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நுழைவுக் கட்டணமாக 2000 ருபா அறவிடப்படுவதோடு சம்பியனாகும் அணிக்கு ஒரு பவுண் தங்கப் பதக்கம் (22 கரட்) மற்றும் பெறுமதி வாய்ந்த வெற்றிக் கேடயமும் இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு ரூ.10 ஆயிரம் பெறுமதியான காசோலை மற்றும் பெறுமதி வாய்ந்த வெற்றிக் கேடயம் என்பன வழங்கப்படும். தொடர்புகளுக்கு-076 897 4674. (க)

# இன்றைய போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்க அனுசரணையுடன் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்த சிறியை எதிர்த்து கைதடி விநாயகர் விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து நடைபெறும் போட்டியில் வைகறை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றது.

இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தினால் அமரர் யோன் கில்லறி அவர்கள் நினைவாக நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் விண்ணொளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னா கண்டல் வளர்மதி விளையாட்டுக்கழகமும் அதனை தொடர்ந்து மாலை 5 மணிக்கு நடைபெறும் போட்டியில் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாரதிதாசன் விளையாட்டுக்கழகமும் அதனைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வித்திய விளையாட்டுக்கழகமும் மோதுகின்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத் தளபதி...

நியமிக்கப்படவில்லை. இதனால் இரண்டு பதவிகளிலும் அவரே தொடர்கிறார்.

இந்த நிலையில், புதிய இராணுவத் தளபதி நியமனம் நாளை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி செயலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இராணுவத் தளபதி பதவிக்கு, மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஆகியோருக்கு இடையில், மும்முனைப் போட்டி காணப்படுகிறது. இவர்கள் மூவருக்கும் இடையில் கடும் போட்டி ஆரம்பித்துள்ளது.

இவர்களில் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க இராணுவத் தலைமை அதிகாரியாகவும், மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தொண்டர் படைகளின் தளபதியாகவும், மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க மேற்குப் படைகளின் தலைமையக தளபதியாகவும் பதவியில் இருக்கின்றனர்.

மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை இராணுவத் தளபதியாக நியமிக்குமாறு அமைச்சர்கள் பலரும், ஜனாதிபதியிடம் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அதேவேளை, பௌத்த பிக்குகள் பலரும், மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவுக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குமாறு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையிலான இழுபறிகளினால்தான், இராணுவத் தளபதி நியமனத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (மு-11)

## அரசியலமைப்புத்...

மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அரசியலமைப்பு சட்டவாக்க சபையின் செயற்பாடுகள் அரசியல் ரீதியாக இருக்கக் கூடாது. அரசியலமைப்பு மக்களின் அடிப்படை உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் பாதுகாத்துள்ளதா என்பதை மீண்டும் ஆராயுமாறும் மனித உரிமைகள் பேரவை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது. (மு-11)

## புறா பிடிக்க...

கட்டடம் ஒன்றில் ஏறியுள்ளார்.

இதன்போது தவறி வீழ்ந்து குறித்த இளைஞன் மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் கங்காரம றோட் வீரக்கர மொறனகமயைச் சேர்ந்த மகேஷ் சுமாத பெரேரா (வயது 28) என்பவரே மரணமடைந்தார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

## மிருசுவிலில்...

நேற்று மாலை 7 மணியளவில் இவ் மரணம் சம்பவித்துள்ளது.

துவிச்சக்கர வண்டியில் வந்த குடும்பஸ்தரை வாகனம் ஒன்று மோதித்தள்ளி அருகில் உள்ள வெற்றுக் காணியில் தூக்கி வீசிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் மரணமடைந்த கொடிகாமம் ஐயனார் கோவிலடியை சேர்ந்த ஐயாத்துரை சபாரட்ணம் (வயது 65) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரின் உடல் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (மு-85)

## ரவியிடம் ஏன்...

செய்யவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பின் ஒவ்வொரு அமைச்சர்களுக்கும் உரிய விடயதானங்களை ஒதுக்கிய நிதியில் இதுவரை நிதி அமைச்சுக்கு கீழ் இருந்த தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை வெளிநாட்டு அமைச்சுக்கு உள்வரும் வகையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை நிதியமைச்சின் கீழ் 1963 இல.11ஆவது நிதிச் சட்டத்தில் உள்ளது. அதேபோல் தேசிய லொத்தர் சபைக்காக அங்கத்தர்களின் நியமனமானது ஐந்து பேர் கொண்டது எனவும் அதில் ஒருவரை அமைச்சர் தலைவராக்குவார் என சரத்தில் கூறப்படுகிறது.

இதுவரை வெளிநாட்டு அமைச்சின் உட்கொண்டு வருவதானது தேசிய லொத்தர் சபை சட்டத்தை மீறும் செயலாகும். இதனை விளங்கிக் கொள்வதற்காக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார்.

ஆகவே வெளிநாட்டு அமைச்சுக்கு கீழ் வரும் இச் சபையை மீண்டும் நிதி அமைச்சுக்கு கொண்டுவருமாறு நாளை 3ஆம் திகதி உயா நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (மு-11)

## வடக்கு-கிழக்கு...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது வீட்டில் நேற்றைய தினம் காலை 10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை இந்த வருட முற்பகுதியில் வெளிவர வேண்டியிருந்த போதிலும் இதுவரை வெளியாகவில்லை. இதற்கு காரணம் அதில் உள்ள விடயங்கள் தொடர்பில் கட்சி குழுக்கூட்டத்தில் ஆராய வேண்டியுள்ளது என்பதாலேயே இடைக்கால அறிக்கை வெளிவருவது மேலும் தாமதமாகியுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளிலே நடவடிக்கை குழுவின் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து இடைக் கால அறிக்கை வெகு விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கின் றோம். இந்த அறிக்கையினை விரைவில் வெளியிட வேண்டும் என நாங்கள் கோருகின்றோம்.

யாருமே கூறாத 13ஆம் திருத்த சட்டத்தை பற்றி முதலமைச்சர் ஏன் பேசிக் கொண்டுள்ளார் என்பது கேள்விக்குறியாக உள்ளது. இடைக்கால அறிக்கை வரைபிலே 13 திருத்தம் பற்றி ஒருவசனம் கூட இல்லை. கொடுக்கப்படுகின்ற அதிகாரங்கள் அதியுச்ச அதிகார பகிர்வாக இருக்க வேண்டும் என சொல்லப்படுகிறது. இதனை பிரதம மந்திரியும் கூறியுள்ளார். ஆகவே இல்லாத விடயம் தொடர்பில் ஏன் முதலமைச்சர் இவ்வாறு பேசுகின்றார் என்று தெரியவில்லை.

சமஷ்டி என்ற பெயர்ப்பலகை இருக்காது. ஆனால் சமஷ்டியின் இரு அடிப்படை அம்சங்கள் இருக்கும் என தேர்தலுக்கு முன்னதாகவே நான் கூறியிருந்தேன். அதே நிலைப்பாட்டிலேயே நாங்கள் தற்போதும் உள்ளோம். சமஷ்டி என்றால் வழங்கப்படுகின்ற அதிகாரங்கள் மாகாணத்திற்கு கொடுக்கப்பட்டால் அந்த விடயங்களில் மத்தி அதிகாரங்கள் செலுத்த கூடாது. அடுத்து வழங்கப்பட்ட அதிகாரங்களை மாகாண சபையின் அனுமதியின்றி மீள பெற முடியாது.

இவை இரண்டுமிருந்தால் சமஷ்டி அதற்காக சமஷ்டி என்ற பெயர்ப்பலகை போட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. ஒற்றையாட்சி என்ற சொற்பதத்தை நீக்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ள அதேவேளை ஒருமித்த நாடு என்ற சொற்பதமே புதிய அரசியலமைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பிளவுபடாத நாடு என பொருள்படும்.

இதற்கு சிறிலங்கா சுதந்திர கட்சியும் தமது சம்மதத்தை தெரிவித்துள்ளார்கள். இதனைதான் முன்னேற்றகரமான நிலை என குறிப்பிட்டேன். சிங்களத்தில் ஒற்றையாட்சி என குறிப்பிடப்பட்டாலும் அது தமிழில் ஒற்றையாட்சி என பொருள்படாது. இதற்கு வேறு வரைவிலக்கணம் கொடுக்கப்படவுள்ளது. ஆகவே நாங்கள் பெயர்ப்பலகைகளை போட்டு முரண்பாடான அணுகுமுறையை கடைப்பிடிக்கவில்லை. சிலர் வேண்டுமென்றே அந்த முரண்பாட்டை தோற்றுவிக்கின்றனர்.

வடகிழக்கு இணைப்பு தொடர்பில் மாகாணம் அதிகாரப் பகிர்வின் அடிப்படை அலகு என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது இடைக்கால அறிக்கையில் வரவுள்ளது. இதனோடு சேர்ந்து வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு அலகாக இருக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடாகும். இது இடைக்கால அறிக்கையில் வரும். எனினும் இறுதியாக எவ்வாறு அமையும் என தெரியவில்லை. குறிப்பாக ஒவ்வொரு மாகாணங்களும் இணங்கினால்தான் மாகாணங்கள் இணைய கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. ஆகையால்தான் இது தற்போதைக்கு சாத்தியமில்லை என தனிப்பட்ட கருத்தை கூறுகின்றேன்.

மேலும் தமிழரசு கட்சியின் ஆதரவில்லாத புதிய அரசியலமைப்புச் சட்டம் அரசியலமைப்பு சட்டமாக இருக்க முடியாது. எங்கள் மக்களுடைய அபிலாசைகளை நிறைவேற்ற முடியாது என்ற அரசியலமைப்பு சட்டம் வரும் போது அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு விலக்கி கொள்ளும். இருந்த போதிலும் அவ்வாறான ஒரு நிலைமை தற்போது இல்லை. எனினும் முக்கிய விடயமொன்றுக்காக எமது ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கத்தை சிறு காரணங்களுக்காக கவிழ்ப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (மு-4)

## விக்னேஸ்வர...

ருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

நான் தொடர்ச்சியாக அந்த நிலைப்பாட்டில் உள்ளேன். இது எனது தனிப்பட்ட நிலைப்பாடு. கட்சி இதை இன்னும் ஏற்கவில்லை.

இவரை நீக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருந்தாலும் இவரை நீக்குவதற்காக நான் சதித்திட்டம் தீட்டி செயற்படவில்லை.

அவர் நாட்டுக்கு எதிராகவும் இன ஒற்றுமைக்கு எதிராகவும் செயற்படுகின்றார். அவரை நீக்க வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். ஆனால், அது சதி அல்ல என அவர் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## சுரேஷ் பிரேமச்...

அல்லது வேறு தேர்தலிலேயோ போட்டியிட்டு வெற்றி கொள்ளட்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சவால் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் அண்மையில் வடமாகாண முதலமைச்சரின் வீட்டிற்கு முன்னாலுள்ள வீதி ஒடுக்கமானது. அதில் நூறு பேரிருந்தாலும் பாரிய ஜனப்பிரளயம் போன்றே தென்படும்.

அதனைக் கண்டு தனக்கு மக்கள் சக்தியிருக்கிறது என முதலமைச்சர் நினைக்க வேண்டாம். அவ்வாறு நினைப்பாராகவிருந்தால் மாகாண சபையைக் கலைத்துவிட்டுத் தேர்தலை நடத்திப் பார்க்கட்டும் என தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்மக்களின் உரிமைகளை வலியுறுத்தியும், அரசாங்கம் மற்றும் கூட்டமைப்பினரை எதிர்த்து எழுக தமிழ்ப் பேரணியொன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் இடம்பெற்ற அந்த எழுக தமிழ்ப் பேரணியில் எத்தனை ஆயிரம் மக்கள் கலந்து கொண்டனர் என்பது சுமந்திரனுக்குத் தெரியும்.

வடமாகாண முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கெதிராக சமூக வலைத்தளங்கள் மூலமாக இளைஞர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க உடனடியாகவே முதலமைச்சரின் இல்லத்திற்கு முன்பாகக் கூடிய இளைஞர் கூட்டத்தையும்,

இரண்டாம் நாளில் வடமாகாணம் தழுவிய ரீதியில் வெற்றிகரமாகக் கடையடைப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டமையும், மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஒன்று கூடி முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்ததும் சுமந்திரன் போன்றவர்களுக்கு ஏற்றுக் கொள்வது கடினமாகத்தானிருக்கும்.

ஏனெனில், முதலமைச்சருக்கு ஆதரவான மக்கள் எழுச்சி அவர்களை மிரட்டியுள்ளது என்பதுதான் உண்மை.

இதனால்தான் வடமாகாண முதலமைச்சர் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். வடமாகாண சபையைக் கலைத்து விட்டு அடுத்த தேர்தல் நடத்த வேண்டும் என்றெல்லாம் சுமந்திரன் கூறுகிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் சுமந்திரன் முடிந்தால் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டு மாகாண சபைத் தேர்தலிலேயோ அல்லது வேறு தேர்தல்களிலேயோ போட்டியிட்டு வெற்றி கொள்ளட்டும்.

அவ்வாறு சுமந்திரன் வெற்றியடைந்த பின்னர் குறிப்பிட்டால் அவர் சொல்வதிலும் ஒரு அர்த்தமிருக்கும்.

எமது மக்களால் முற்று முழுதாக நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் சகல உரிமைகளையும் விற்றுப் பிழைப்பவர்கள் என்று பெயரெடுத்த சுமந்திரன் போன்றவர்கள் வடமாகாண மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற முதலமைச்சருக்கு எதிராகச் சவால் விடுவது அர்த்தமற்ற, சிறுபிள்ளைத்தனமான செயல் எனவும் கடுமையாகச் சாடினார். (மு-11)

## ரூ.30 ஆயிரம் கோடி...

நிதியமைச்சு வழங்கிய அறிக்கையில் கணக்காய்வாளர் பெற்றுக்கொடுத்துள்ள தகவல்கள் மூலம் இது தெரியவந்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தேசிய இறைவரி திணைக்களம் 18 ஆயிரத்து 208 கோடி ரூபாய் வரியை அறவிடவில்லை.

மதுவரி திணைக்களம் அறவிட வேண்டிய 11 ஆயிரத்து 322 கோடி ரூபாய் அபராதத்தை அறவிடவில்லை என தெரியவந்துள்ளது.

மேலும் வரி செலுத்த வேண்டியவர்கள் 254 கோடி ரூபாய் வரியை செலுத்தவில்லை எனவும் கூறப்படுகிறது. (மு-11)

## இரண்டு வருட...

பேரும் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்பின்னர், 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வரும் வரை, இவர்கள், நாடாளுமன்றத்தில் சுதந்திர உறுப்பினர்களாக செயற்படுவர் என்றும் அவர் மேலும் கூறினார்.

எவ்வாறாயினும், கூட்டு அரசாங்கத்திலிருந்து, இவர்கள் விலகவுள்ளமை குறித்து தான் அறிந்திருக்கவில்லை என்று, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார். சு.க மற்றும் ஐ.தே.கவுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை, செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்தாலும், அவ்வாறான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்த அவர், ஊடகங்கள் செய்தி தயாரிக்கின்றன என்றும் கூறினார். (மு-11)

## புலிகள்...

கின்றன என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற உத்தியோக பூர்வ ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய வேலைத் திட்ட நடமாடும் சேவை நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பில் இருந்து இயங்கியவர்களில் பலர் உயிர்நீத்துள்ளனர்.

யுத்தத்தில் உயிர்நீத்த அனைத்து வீரர்களும் கௌரவிக்கப்பட வேண்டும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது ஒன்றும் தவறில்லை.

மேலும், புனர்வாழ்வு பெற்ற போராளிகள், நான் விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்தேன் என்று கூறுவதற்கு அச்சப்படத் தேவையில்லை.

இவ்வாறான அச்சத்தில் இருந்து விடுபட்டு அவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கு முன்வர வேண்டும்.

மேலும் வடக்கு கிழக்கு மக்கள் திறமையானவர்கள் அவர்களில் அனேகமானவர்கள் துப்பாக்கியினால் சுடக்கூடிய பயிற்சி பெற்றுள்ளனர். உங்களால் தற்பொழுதும் துப்பாக்கியை இயக்கமுடியும்.

அத்துடன் கண்ணிவெடி பிரதேசங்களை இனங்கண்டு நீங்கள் விலத்திச் செல்லக்கூடியவர்கள். இவ்வாறான திறமையுள்ள வடக்கு கிழக்கு மக்கள் ஜனநாயக வழியில் ஒன்றிணைந்து இந்த நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு முன் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை

- அச்சக வேலைக்கு கணனி அனுபவம் வாய்ந்தவர்கள்
- புத்தகம் கட்டுபவர்கள். (முன் அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புபவர்கள்)

குமார் பிரிண்டர்ஸ் &டியிற்றல் பிரிண்டர்ஸ்
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம், யாழ்ப்பாணம். தொடர்பு : 077 392 0797 (9652)



# வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதான வீதியில், பிரதேசசபை அலுவலகத்திற்கும்,இ.போ.ச. டிப்போவிற்கு எதிரில் 2 பரப்பில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 011 267 4599, 071 830 2697 (9610)


# ஜனாதிபதி...

ஜனாதிபதி செயலாளர் பி.பீ.அபேகோன் தனது பதவியை, நேற்று முன்தினம் இராஜினாமா செய்திருந்தார்.

இந் நிலையில், தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இன்று அல்லது நாளை ஜனாதிப்தி செயலராக பதவியேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-11)


# காணி விற்பனைக்கு

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை (ஓடை லேன்) 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 076 877 5014 (9648)



# Northern Technical Institute

YMCA Building, 107, 2/1, Kandy Road, Jaffna.

வழங்கும் பயிற்சிநெறிகள் காலம் ஜூலை, ஆகஸ்ட் நேரம் 8.30am- 12.30pm திங்கள் – வெள்ளி.

- நுண்திறனும் தொழில் வழிகாட்டியும்.
- வியாபாரம்சார் ஆங்கிலம்.

இரண்டு நெறிகளுக்கும் கட்டணம் ரூபாய் 4000/- புலமைப்பரிசில் 50%, 100% உண்டு.

நேரடித் தேர்வுக்கு புதன் 05.07.2017- 10am வரவும்.

இயக்குநர் NTI- 0776505580 (9612)



# விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-8920)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



# பணியாளர் தேவை

வன்னியில் இயங்கி வரும் உணவகத்திற்கு

- சமையல் உதவியாளர்
- ரொட்டி வேலை செய்பவர்
- உபசரிப்பாளர்
- றைஸ் தயாரிப்பாளர் தேவை

தொடர்புகளுக்கு:- 0771711215 (கி-8943)



# காணி விற்பனை

மானிப்பாய் மத்திய சந்தை அருகாமையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு 076 311 0929 (C-8912)



# வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500 (C-8905)

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா



# விற்பனைக்கு

தனிப்பாவனை Scooty, Pleasure உம், Motor, Water Pump விற்பனைக்குண்டு.

071 531 5500 (9650)



# வேலையாள் தேவை

நல்லூரில் இயங்கும் அச்சகம் ஒன்றில் கமடா மெஷின் இயக்குநர் உடன் தேவை.

தொடர்பு : 0777 165 589 (9553)



# வீடு வாடகைக்கு

குப்பிளான் தெற்கு மடத்தடியில் 3 அறைகள் உள்ள உடனடியாக தங்கக்கூடிய நிலையில் வீடு வாடகைக்கு.

தொடர்பு : 077 057 5455 (9581)



# வாடகைக்கு

அல்ரோ (Alto) கார் சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:- 0765862250 (கி-8947)



# காணி விற்பனைக்கு

இராசாவின் தோட்ட வீதியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 167 1174, 0777 286 061 (9649)



# VACANCIES

LARA VISION

கொழும்பில் இயங்கிவரும் பிரபல ஊடக முகவர் நிலையத்தில் பின்வரும் பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.



- ஒப்புநோக்குனர்கள்
- சந்தைப்படுத்தல் முகாமையாளர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
- ஆங்கிலத்தில் சரளமாக கையாளக் கூடிய முன் அனுபவமுள்ள காரியதரிசி

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு

தொலைபேசி: 0773168583

Email: laravisions@gmail.com


# எம்.பி...

சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடற்றொழிலாளர் இணையத்துக்கும் இடையிலான சந்திப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் திருத்தச் சட்டவரைபு, எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னதாக, வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும், வடக்கு மாகாணக் கடற்தொழிலாளர் இணையத்தினர் சந்தித்துப்பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டவரைபு நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் எடுத்துரைக்கவுள்ளனரெனவும்அறியமுடிகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-11)


# பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள SMART KINGS (PVT) LTD நிறுவனத்திற்கு அனுபவமுள்ள

- Heavy Vehicle Driver (AD LICENCE)

தேவை. சுயவிபரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமூகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்

SMART KINGS (PVT) LTD 12, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 021 454 6699 (C-8990)



# CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us: cnrworldwideexpress (C-8929)



# திருமுருகனின் இவ்வருட விசேட சலுகை

மண்டபம், மேளம், குருக்கள், பூமாலை 6, உணவு, கூல்சோடா, பூந்திலட்டு, ஐஸ்கிறீம், வாசல் வாழை, தானங்கள் யாவும் ஒன்று சேர 500 பேர்களாயின் ஒரு நபருக்கு 400/= ரூபா வீதம் எடுக்கப்படும். கீழ் மண்டபம் பிறந்தநாள் விழா, விவாகப்பதிவு, கருத்தரங்கு நடாத்த ரூபா 10000/=, மேல் மண்டபம் ரூபா 30000/= விசேட உணவு கொண்டு வந்தால் உணவு மண்டபத்துக்கு ரூபா 10000/= செலுத்த வேண்டும்.

(500ற்கு மேல் விசேட கழிவு உண்டு)

A/C தனி விசேட தேவைகள் ஒழுங்கு செய்து தரப்படும். உங்கள் விருப்பத்திற்கு செய்து கொள்ளலாம் தேவையற்றவை விடப்படும். (கி-8939)

தொடர்புகளுக்கு:- 0776660211

திருமுருகன் நீர்வேலி.



# முன்பள்ளி கல்வி நிலைய வேலைவாய்ப்பு

9 கிளைகளைக் கொண்டு இயங்கி வரும் கல்வி நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் கோரப்படுகின்றனர்.

- முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்
- கணினி நிலைய போதக ஆசிரியர்
- தரம் 1 தொடக்கம் தரம் - 5 வரை கல்வி கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள்
- முன்பள்ளி தமிழ் ஆசிரியர்
- சிங்கள ஆசிரியர்

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு புத்தூர், இணுவில், மல்லாகம், தெல்லிப்பளை, மாவிட்டபுரம், புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றது.

| | |
|---|---|
| நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி: | 03.07.2017 திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறும் |
| நேர்முகத்தேர்வுக்குரிய இடம்: | Little Master's Montessori, Institute of Computer Studies கே.கே.எஸ்.றோட், மல்லாகம் தெற்கு, மல்லாகம். (காங்கேயன் பேக்கரிக்கு முன்பாக) |



நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும் போது தவறாது சுயவிபரக்கோவையும் கல்வித் தகைமை சான்றிதழ்களும் கொண்டு வருதல் வேண்டும் (9617)

தொடர்புகளுக்கு:- 077 747 4741



# வேலைவாய்ப்பு

உலகளாவிய ரீதியில் விஸ்தரித்துள்ள எமது American Company ஆனது இலங்கையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு (வட பகுதியில்) 08 புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளதால் அவ் கிளைகளிற்கு 45+ வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

**தகைமை + வேலை**

10, O/L படித்தவர்கள்
விற்பனை பிரதிநிதிகள், மேற்பார்வையாளர்கள், அலுவலக பாதுகாவலர்.

A/L மற்றும் A/L சித்தியடைந்தோர்
உதவி முகாமையாளர், அலுவலகர், களஞ்சியப் பாதுகாவலர்.
Diploma, மேல் தகுதியுடையவர்கள். முகாமையாளர்கள். (9647)

தொடர்பு:-0770621631, 0772986763


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 124

வள்ளுவர் ஆண்டு 2048 02.07.2017 தொலைபேசி : 021 222 3378

# 100 பேராம்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபாகரனைவிட தமிழ் மக்கள் பேரவை ஆபத்தானது

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகனை விட தமிழ் மக்கள் பேரவை ஆபத்தானது என பொது பல சேனாவின் தலைவர் ஞானசார தேரர் கூறியுள்ளார். இவ்வாறு கூறுவது இது இரண்டாவது தடவை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஏலவேயும் ஒரு தடவை இதே கருத்தை ஞானசார தேரர் பதிவு செய்துள்ளார்.

பிரபாகரனைவிட தமிழ் மக்கள் பேரவை ஆபத்தானது என ஞானசார தேரர் யாரிடம் கூறினார் என்றால் அங்கவீனமுற்ற படையினர் முன் என்பது இங்கு கூர்ந்து கவனிக்கத்தக்கது.

சரி விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைவிட தமிழ்மக்கள் பேரவை ஆபத்தானது எனக் கூறுவதற்கு ஞானசார தேரர் எடுத்துக் கொண்ட காரணங்கள் என்னவாக இருக்கும் என்றாராய்வதும் கட்டாயமானதாகும்.

இந்த ஆராய்வின் அடிப்படையில் தமிழ்மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக உள்ள தென்பதே ஞானசாரதேரரின் முடிவுக்குக் காரணமாக அமையலாம். அதாவது தமிழ் மக்கள் பேரவை வடக்கின் முதலமைச்சரை இணைத் தலைவராகக் கொண்ட ஓர் அமைப்பு. அந்த அமைப்பு தமிழ் மக்களிடம் அதீத செல்வாக்குப் பெற்றுள்ளது.

அதாவது தமிழ்மக்கள் பேரவையை ஆரம்பித்த கையோடு மிகக்கூடுதலான விமர்சனங்கள் எழுந்தன. அந்த விமர்சனங்களுக்கு அப்பால் தமிழ்மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த போது மண்டபம் நிறைந்து வெளியிலும் சனக் கூட்டம் என்பதாக மக்கள் திரண்டிருந்தனர். இது கண்டு பலரும் திகைத்ததுண்டு.

தவிர பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்மக்கள் பேரவை வடக்கு கிழக்கு தழுவிய ஹர்த்தால் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. இதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கி கடையடைப்புப் போராட்டம் நூறுவீதம் வெற்றி என்பதாக முடிவு கிடைத்தது.

கூடவே வடக்கு மாகாணத்தில் மிகப்பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணியும் நடைபெற்றது. சுமார் நாற்பதாயிரம் மக்கள் கலந்து கொண்ட பேரணியாக இது இருந்த போது அது கண்டு அதிசயிக்காதவர்கள் இல்லை என்றே கூறலாம்.

அந்தளவிற்கு எழுக தமிழ் எழுச்சிப்பேரணி தமிழ் மக்களிடம் உச்சமான விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது.

இது தவிர வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைப் பதவி நீக்கவேண்டும் என்ற ஒரு கூட்டுச் சதித்திட்டத்தைக் கொண்டு வந்த போது ஓர் இரவுப் பொழுது அறிவிப்போடு வடக்கு மாகாணம் முடங்கிப் போனது என்றால் தமிழ் மக்கள் பேரவை சாதாரணமான அமைப்பல்ல என்ற முடிவுக்கு ஞானசார தேரர் வருவதில் தவறில்லை என்றே சொல்லமுடியும்.

தவிர, தமிழ்மக்களுக்கு அரசாங்கம் கிள்ளித் தெளிக்கும் தீர்வுத் திட்டத்தை முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஏற்கப் போவதில்லை.

முதலமைச்சர் விக்னேஸ்வரனைமீறி அரசு தரும் தீர்வுத்திட்டத்தை ஏற்றுக் கொள்கிறோம் என்று தமிழரசுக் கட்சி கூறுமாக இருந்தால் அதனை தமிழ்மக்கள் பேரவை ஒருபோதும் ஏற்காது.

ஆக, வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அவரை இணைத்தலைவராகக் கொண்ட தமிழ் மக்கள் பேரவையும் இருக்கும் வரை, அரசாங்கத்துடன் சேர்ந்து மிக எளிமையான தீர்வுத் திட்டத்தை பெயரளவுக்கு கொண்டுவந்து விடலாம் என்று நினைக்கும் தமிழரக்கட்சியின் பருப்பெல்லாம் இனி அவியமாட்டாது என்ற அடிப்படையிலேயே ஞானசார தேரர் தமிழ்மக்கள் பேர வையை புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைவிட ஆபத்தானது என்று கூறினார் எனலாம்.

எது எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி ஓர்அணியில் திரட்டி; நமக்கான உரிமை விடயத்தில் நாமே விழிப்பாக இருக்க வேண்டும் என்ற உண்மைக் கருத்தை நிலை நிறுத்திய பெருமை தமிழ் மக்கள் பேரவையையே சாரும்.

தமிழ் மக்களின் எழுச்சி முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இருக்கக்கூடிய மக்கள் ஆதரவை அதிலும் தமிழ் இளைஞர்களின் ஒட்டுமொத்த ஆதரவை வெளிக்காட்டி நிற்கின்றது. இதுபற்றி தமிழரசுக்கட்சி அறிந்திருந்தாலும் செட்டுக்கதை விடுவதில் இன்னமும் அவர்கள் தளர்ந்தார் இல்லை.

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அரசியல் தீர்வுத்திட்ட வெளியீடு, எழுக தமிழ் எழுச்சிப் பேரணி, கிழக்கு மாகாணத்தில் நடந்த முத்தமிழ்விழா, முதலமைச்சர் விக் னேஸ்வரனுக்கு ஆதரவாக நடந்த பேரணி என்பன தமிழ் மக்கள் பேரவையின் ஆதரவை காட்டி இருக்கும் போது,

பொருத்தமற்ற கதைகளை தமிழரசுக் கட்சியின் தலைமைசார்ந்த சிலர் வெளியிடுவது அவர்கள் மீதான நம்பிக்கையீனத்தை மக்கள் மத்தியில் தொடர்ந்தும் ஏற்படுத்தும்.

இந்த நிலைமை அந்தக் கட்சிக்கு மிகப்பெரும் பாதகமாக அமையும் என்பதும் சர்வ நிச்சயம்.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை . வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வழமையில் கலகலப்பாக இருக்கும் விதானையார் விசுவலிங்கம் ஏதோ யோசனையுடன் அமர்ந்திருந்தார்.

**கங்காணி:** என்ன விதானையார் ஐயா அமைதியாக இருக்கிறியள். என்ன சங்கதி?

**விதானையார்:** வித்தியாவின் வழக்கு விசாரணை யாழ்ப்பாணத்தில நடக்குதல்லோ. அந்தச் சாட்சியங்கள் சொல்லுற சம்பவங்களைக் கேட்கவே நெஞ்சு வெடிக்கும் போல இருக்குது. அந்தளவுக்கு மிகப் பெரிய கொடூரம் நடந்திருக்கு.

**மூப்பர்:** உண்மைதான் விதானையார். நானும் சாட்சியங்கள் சொன்ன விடயங்களை ஊடகங்களில பார்த்துக் கொண்டுதான் இருக்கிறன். என்ன மாதிரியாக இருந்த எங்கட தமிழினம் இப்ப என்ன மாதிரியா மாறிப் போய்ச்சுது. மிருகத்தனம் எண்டுதான் சொல்லவேணும்.

**சாத்திரியார்:** இது கலியுகம் பாருங்கோ. அதர்மம் தலைவிரித்தாடுகிற காலம். எங்கட வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தவியள் எண்டால் அதர்மம் எந்தளவுக்கு உச்சம் பெற்று நிற்குது என்பது தெரியுது தானே!

**விதானையார்:** அது சரி வடக்கு மாகாண சபையைக் கலைத்துப்போட்டு தேர்தலில நிண்டு வெற்றி பெற்றுக்காட்டட்டும் எண்டு சுமந்திரனார் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு சவால் விட்டிருக்கிறார்.

**வாத்தியார்:** இதைத்தான் பாருங்கோ சொல்லுறது அரசியல் இராஜதந்திரம் எண்டு.

**கங்காணி:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தபோது மக்கள் திரண்டெழுந்தவியள் அல்லோ. அந்த வெப்பாரம் தாங்கமுடியாமல் இருக்குது.

சிலவேளை முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா தனிக் கட்சி ஆரம்பித்துப் போடுவாரோ எண்ட பயம். அதோட இப்படிச் சவால் விட்டால் விக்னேஸ்வரன் ஐயா வடக்கு மாகாண சபையைக் கலைக்கலாம். அது தமிழரசுக் கட்சிக்கு வெற்றியல்லோ. அதுதான்.

**கங்காணி:** அட!சங்கதி அப்படியோ. அப்ப முதலமைச்சருக்கு சவால் விட்டு அவரைக் கொண்டு வடக்கு மாகாண சபையைக் கலைப்பித்துப் போட்டு பார்த்தியளோ! தமிழ் மக்களுக்குக் கிடைத்த மாகாண அரசை முதல்வர் விக்னேஸ்வரன் கலைத்துப்போட்டார் எண்டு பிரசாரம் செய்யலாமல்லோ.

**மூப்பர்:** அட சமாச்சாரம் அப்படிக் போகுது. நாசமறுந்த அரசியல் எப்படியெல்லாம் வேலை செய்து எண்டு. இப்பதானே எங்களுக்குத் தெரியுது.

**பண்டிதர்:** யார் என்ன தான் சொன்னாலும் எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா அரசியலைச் சரியாய்ப் படிச்சிட்டார். இனி அவரை ஒருத்தரும் ஒண்டும் செய்ய ஏலாது.

**விதானையார்:** பண்டிதர் ஐயா சொல்லுறது நூறு வீதம் உண்மை. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் (30.06. 2017) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின்ர சிலையை திறந்து வைத்த முதலமைச்சர், அங்க உரையாற்றும் போது சதித்திட்டம் தீட்டிச் சறுக்கியவியள் இப்ப சவால் விடுகினம் எண்டு சொல்லியிருக்கிறார்.

**மூப்பர்:** நானும் பேப்பரில பார்த்தனான். உச்சி அடி. அதுமட்டுமல்ல தன்னட்ட ஒரு நண்பர் கேட்டவராம்.

ஏன் ஐயா நீங்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாதிரி விடாப்பிடியா நிற்கிறியள். சம்பந்தர் ஐயாவைப் போல விட்டுக் கொடுத்துப் போனால் என்ன எண்டு.

**கங்காணி:** இந்தக் கேள்விக்கு விக்னேஸ்வரன் ஐயா என்ன பதில் சொன்னா வராம்.

**விதானையார்:** சதித்திட்டம் தீட்டி சறுக்கியவியள் இப்ப சவால் விடுகினம் எண்டு பதிலடி கொடுத்த முதலமைச்சருக்கு நாங்கள் என்ன சொல்லியோ கொடுக்க வேணும். ஒற்றையாட்சியின் கீழ் 13 இற்கு குறைவான அதிகாரங்களை எடுத்துப்போட்டு எங்கட இனம் என்ன? கந்தறுந்து காவடி எடுக்கிறதோ எண்டு கேட்டவராம்.

**வாத்தியார்:** அதுதான் சரி.

**பண்டிதர்:** அது சரி முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழரசுக் கட்சி கொண்டுவந்தபோது தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து தங்கட எதிர்ப்பைக் காட்டினவியள் அல்லோ. அவ்வாறு கிளர்ந்தெழுந்த சனம் நூறு பேருக்குள்ள் தான் வரும் எண்டு தமிழரசுக் கட்சி எம்.பி. ஒருத்தர் சொல்லியிருக்கிறார்.

**மூப்பர்:** என்ர பரமபிதாவே. இந்த எண்ண எண்ணுறதிலும் பிரச்சினை எண்டால் எங்கட அரசியல் என்ன மாதிரியாப் போகப் போகுது.

**விதானையார்:** மற்றவர்களிட்டக் கேட்டெண்டாலும் சொல்லியிருக்கலாம். சரி முதலமைச்சருக்கு ஆதரவாக வந்த சனம் நூறோ அல்லது , பல்லாயிரமோ எண்டு உலகத்திற்குத் தெரியும்.

**கங்காணி:** அதுமட்டுமல்ல விதானையார். நல்லூர் கோயில் வீதி மிகவும் ஒடுக்கமான வீதியாம். அதனாலதான் வந்த சனங்களைக் கூடப்போலக் காட்டியிருக்காம்.

**வாத்தியார்:** அட இப்பிடியும் ஒரு காரணம் கண்டு பிடிச்சிருக்கினம். அப்ப நாங்கள் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வாசஸ்தலம் உள்ள நல்லூர் கோயில் வீதியை அகலிக்க வேணும் எண்டு ஒரு கோரிக்கையை முன்வைப்பம்.

**சாத்திரியார்:** யாரிட்ட அந்தக் கோரிக்கையை முன்வைக்கிறது.

**பண்டிதர்:** முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா விட்ட அந்தக் கோரிக்கையை முன்வைக்க முடியாது. ஏனெண்டால் அவர் சொல்லுறார் நல்லூர் கோவில் வீதி நல்ல அகலமாத்தான் இருக்குது எண்டு.

**மூப்பர்:** நல்லூர் கோவில் வீதி ஒடுங்கிய வீதி எண்டு யார் சொன்னவர்களோ அவர்களிட்ட தான் கோயில் வீதியை அகலிக்கும்படி கேட்க வேணும்.

**வாத்தியார்:** சரி சரி அப்ப இலங்கைத் தமிழரசுக் கட்சியிட்ட நல்லூர் கோயில் வீதியை அகலிப்புச் செய்விக்கக் கேட்பம்.

**விதானையார்:** ஏன் எண்டு அவர்கள் கேட்டால்...

**வாத்தியார்:** அது முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா இருக்கிற இடம். நீங்கள் அவரோட அடிக்கடி சோலிக்குப் போவியள். அது கண்டு மக்கள் கொதித்தெழுகினம்.

அதுதான் வீதியை அகலிச்சால் நல்லது எண்டு சொல்லுவம்.

ஆலடி மாநாட்டில் நல்லூர் கோயில் வீதியை அகலிக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்தை நிறைவேற்றும் அதே சமயம் அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## ஒடுங்கிய நல்லூர் கோயில் வீதியை அகலிக்க ஆலடியில் அவசர தீர்மானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் வரவேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.




# உழவனின் வேதனை



ராஜேஷ் கோடை விடுமுறைக்காகப் பெற்றோருடன் அந்த மலைப்பிரதேசச் சுற்றுலாத்தலத்துக்கு வந்திருந்தான். வானை எட்டிவிடுவதுபோல உயர்ந்து நிற்கும் மரங்கள், மெல்லிய பனிப்படலம், திரும்பிய திசையெல்லாம் பசுமை என அந்த இடமே ரம்மியமாக இருந்தது. அதற்கு இணையாகக் கூட்டமும் இருந்தது. தங்கை ஷாலினியின் கையைப்பிடித்துக்கொண்டு பல இடங்களை உற்சாகமாகச் சுற்றிப்பார்த்தான். ஆங்காங்கே விற்ற சூடான தின்பண்டங்கள், குளிர்ந்த பானங்களை இருவரும் வாங்கிப் பருகினார்கள். அங்கே ஒரு கடையில் கரட் கட்டுகள் ப்ரெஷ்ஷாக இருந்தன.

"அப்பா... அப்பா... கரட்" என்றாள் ஷாலினி.

"வீட்டிலே வேண்டி வேண்டிக் கொடுத்தாலும் சாப்பிடறதில்லே. இப்போ பாரு" என்றார் அம்மா.

"ஒரு கட்டு கொடுங்க" என்று அப்பா வாங்கிய போது, "எனக்குத் தனியா ஒரு கட்டு வேணும்" என்றான் ராஜேஷ்.

அப்போது பக்கத்தில் வந்துநின்ற ஒருவர், "தம்பி ஒரு கட்டுலேயே நிறைய இருக்கு. அதுக்கும் மேலே சாப்பிடுவீங்கன்னா இன்னொரு கட்டு வாங்குங்க. இல்லே, ஒண்ணே போதும்" என்றார்.

அவர் குரலில் கொஞ்சம் அதிகாரமும் உரிமையும் இருந்தன.

"விற்கிறவர் அவர், காசு கொடுக்கப்போவது நான். நீங்க யாரு?" எனக் கேட்டார் அப்பா.

"நான் ஒரு விவசாயி. ஒரு விதையை முளைக்கவைக்க எவ்வளவு கஷ்டப்படணும்னு தெரிஞ்சவன்" என்றார் அவர்.

எல்லோரும் சில நொடிகள் அமைதியாக, "ஒரு கட்டு வாங்குங்க போதும்ப்பா" என்றான் ராஜேஷ்.



நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன; ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.

# பலூன் சிற்பங்கள்



பலூன் என்றால் எல்லோருக்குமே பிடிக்கும். பலூனை ஊதி காற்றில் பறக்கவிடுவதே தனி குஷிதான். அதேபோல பிறந்தநாள் விழா, பாடசாலைகளில் நடக்கும் விழாக்களிலும் அலங்கரிக்க வண்ண வண்ணப் பாலூன்களைப் பயன்படுத்துவதுண்டு. "டெக்ரேஷனுக்கு மட்டுமல்ல, பலூன்களைக்கொண்டு அழகழகான சிற்பங்களையும் உருவாக்க முடியும்" என்கிறார் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பலூன் கலைஞர் மாசயோஷி மட்சுமோட்டோ (Masayoshi Matsumoto).

இவருக்கு வனவிலங்குகள் என்றால் அவ்வளவு ஆசை. விலங்குகளைச் சிற்பங்களாக உருவாக்க ஆசைப்பட்டார். அதற்காக பலூன்களைத் தேர்வு செய்தார். ஏழு வருடங்களுக்கு முன்பு தொடங்கியது இந்தப் பலூன் 'சிற்பச் செதுக்கல்'.

முதலில் செய்த பலூன் சிற்பங்கள் அவருக்கே திருப்தி அளிக்கவில்லை. முயற்சியைக் கைவிடாமல், தொடர்ந்து உருவாக்கினார். இப்போது அவர் உருவாக்கியிருக்கும் சிற்பங்கள், பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. விலங்குகள், பறவைகள், பூச்சிகள் என இவர் உருவாக்கியுள்ள பலூன் சிற்பங்களுக்கு சோஷியல் மீடியாக்களில் பராட்டுக்கள் குவிகின்றன.

மார்க்கர், பசை, பேனா என ஒரு பொருளையும் கூடுதலாகப் பயன்படுத்துவதில்லை. கண்கள், இறக்கை என எதுவாக இருந்தாலும் எல்லாவற்றையும் பலூன்களாலேயே செய்துவிடுகிறார் என்பதுதான் இதன் ஸ்பெஷல். "ஒரு பலூன் சிற்பத்தை உருவாக்கக் குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் பிடிக்கும். நுணுக்கமான உருவங்கள் என்றால், ஆறு மணி நேரம்கூட ஆகும். ஒரு உருவத்தை உருவாக்குவது என முடிவுசெய்து பலூன்களைக் கையில் எடுத்ததும் நேரம், சுற்றுப்புறம் என எல்லாவற்றையும் மறந்துவிடுவேன்" எனப் புன்னகைக்கிறார் மட்சுமோட்டோ.

# கண்ணீர்



பிறந்த குழந்தைகள் அழும்போது கண்ணீர் வடிவதில்லை. மனிதருக்குக் கண்ணீர் நாளங்கள் முழுமையாக உருவாகப் பல வாரங்கள் ஆகின்றன. அதன் பிறகே, கண்ணீர் வடிகின்றது. அதுவரை, கண்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஈரப்பசையை இயற்கை கண்களில் கொடுத்துள்ளது. அடிப்படை கண்ணீர் (Basal Tears), எதிர்வினைக் கண்ணீர் (Reflex Tears), உணர்ச்சி சார்ந்த கண்ணீர் (Emotional Tears) என கண்ணீர் வெளிப்பாட்டை மூன்று வகையாகப் பிரிக்கலாம். கண்ணீர் மிகச் சிறந்த கிருமிநாசினி. இதில் இருக்கும் 'லைனோசம்' என்ற இரசாயனம், கண்களைத் தாக்க நினைக்கும் பல நோய்க்கிருமிகளைக் கொல்கிறது.

# கலரில்லாத கோப்பி




கோப்பியின் மணத்துக்கும் சுவைக்கும் மயங்கி டம்ளர் டம்ளராகக் குடிப்பவர்கள் உண்டு. இவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்வதற்காகவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, CLR CFF என்ற நிறமற்ற கோப்பி. ஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த டேவிட் மற்றும் ஆடம் நேகி என்ற சகோதரர்கள் இந்த கோப்பியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அரேபியன் கோப்பி கொட்டைகள் மூலம் செயற்கை இனிப்புச் சேர்க்காமல் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, சீனியோ, பாலோ சேர்க்காமலே இதைக் குடிக்கலாம். அதிகம் கோப்பி பருகுவதால் பற்களில் கறை படிவது போன்றவையும் இந்த கோப்பியால் தவிர்க்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## இந்தியா– பாகிஸ்தானிடம் தோற்றது பற்றி?

**அருட்கதிர்** — துன்னாலை

**தாங்கள் போராட்டத்தில் குதித்ததனால் தான் மக்கள் ஆதரவு தருகிறார்கள் என்று தேர்தலில் போஸ்டர் ஒட்டும் தமிழ் தலைமை பற்றி?**

நீங்கள் இதைச் சொல்லும் போது சிரிப்புத் தான் வருகிறது. காணாமல் போனவர்களின் உறவுகளின் போராட்டம் நூறு நாட்களைக் கடந்து விட்டது. சொந்த நிலங்களை மீட்க மக்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நான் போராட்ட வழியில் வந்தவன்... என்று அடித்து விடுவது வெறும் அறிக்கைக்குத் தான். தலையில் சிவப்புத் துண்டு கட்டியவர்கள் எல்லோரும் புரட்சி வாதிகளாகவோ, போராட்டக் காரர்களாகவோ ஆகிவிட முடியாது. மாடமாளிகைகள் கட்டுவதை நிறுத்தி விட்டு மக்களுக்கு சேவை செய்ய முற்படுவீர்களாயின் கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**லோகிதா** — பருத்தித்துறை

**இலங்கை காதலனுக்காக சீனாவில் இருந்து இங்கு வந்த யுவதி பற்றி?**

சீனாவுக்கும் இலங்கைக்கும் உள்ள நெருக்கத்தைக் காட்டுவதற்கான நல்ல உதாரணம்.

**டெனிஸ்** — வளலாய்

**காணாமல் போனவர்களுக்கு நீதி கிடைக்குமா?**

எம் தமிழ் அரசியல்வாதிகளின் நெருங்கிய சொந்தங்கள் யாரும் காணாமல் போயிருந்தால் இன்று முண்டியடித்து தம் சொந்தங்களை மீட்டிருப்பார்.

என்ன செய்ய போராட்டங்கள் போராட்டங்களாகவே இருக்கிறது. தேர்தல் நெருங்கும் போது கூல்றிங்குடன் வருவார்கள் இளித்துக் கொண்டு.

**ரமணிதரன்** — முல்லைத்தீவு

**காதலிப்பது சரியா? தவறா?**

தவறு நடக்காத வரை சரி. தவறு நடந்து விட்டால் காதலின் கதை சரி.

**அனுராம்** — மானிப்பாய்

**இந்தியா– பாகிஸ்தானிடம் தோற்றது பற்றி?**

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த போட்டியில் சிம்பாவேயிடம் இலங்கை தோற்றது பற்றி.

**சுதன்** — குப்பிளான்

**கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் மேல் தமிழ் மக்கள் கடுப்பாக காரணம் என்ன?**

முதலமைச்சர் வாசஸ்தலம் இருக்கும் வீதி ஒடுக்கமான வீதி. அந்த வீதியில் ஒரு நூறு பேர் சென்றால் அது சனத்திரள் போலத்தான் காட்சியளிக்கும்.

இந்த கதையைக் கேட்டால் கடுப்பாகாமல் இருக்க முடியுமா?

## கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் மேல் தமிழ் மக்கள் கடுப்பாக ...

**மதுஷன்** — காரைநகர்

**கடவுள் ஏன் கல்லானான்?**

கல்லாய் இருப்பதால் தான் அவன் பெயர் கடவுள்.

**சுகந்தினி** — சுன்னாகம்

**தற்போதைய தமிழ் அரசியல் தலைவர்கள் பற்றி?**

முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களை மட்டும்தான் மக்கள் தங்கள் மாண்புமிகு தலைவராக பார்க்கிறார்கள். அதைப் பொறுக்காத, அடுத்த தலைமைக்கு பேராசை கொண்ட சிலரின் சூழ்ச்சியால் முதல்வரை வீழ்த்த நினைத்தவர்களுக்கு மக்கள் தகுந்தபாடம் புகட்டுவர்.




**செந்தூரன்** — யாழ்ப்பாணம்

**நடுநிலை காப்பவர்களில் சிலரின் நிலை பரிதாபத்துக்குரியதாகிவிட்டதே?**

என்ன செய்ய கிடைத்த பதவியை செவ்வனே செய்யாமல் சதி செய்வதில் முழுமூச்சாய் நின்றவர். அடுத்த தேர்தல் பற்றி எனி அவர் நினைத்தும் பார்க்கமாட்டார்.

**தக்ஷி** — யாழ்ப்பாணம்

**தமிழனை தமிழன் ஆட்சி செய்ய ஒரு நாடு கிடைத்தால்?**

வீட்டை ஒழுங்குபடுத்துங்கள். அதன் பின் நாட்டை ஆள்வதைப் பற்றிப் யோசிக்கலாம்..

**டிலக்ஷன்** — நவாலி

**ஹிட்லரின் போர் முறைபற்றி?**

உலக நாடுகளை தன் பலத்தினால் தன் காலடியில் கொண்டுவந்தாலும் அவர் ஒரு சர்வாதிகாரி என்பதில் இன்று வரை மாற்றமில்லையே.

## ஹிட்லரின் போர் முறைபற்றி?

**மது** — களபூமி

**மாணவன் மாணவிக்கு எழுதும் காதல் கவிதை ஒன்று சொல்லுங்கள்?**

கணக்கு பாடம் போலத்தான் நீ. கணக்கும் புரியவில்லை. உன்னைக் கணக்குப் பண்ணவும் தெரியவில்லை.

**இராசதுரை** — தையிட்டி

**பார்த்துக் கொண்டிருக்க பச்சை இனவாதம் பேசுபவர்களைப்பற்றி?**

இனவாதமும் மதவாதமும் தான் இப்போது இலங்கை அரசியலை ஆட்டிப்படைக்கிறது. இந்த முறைமை ஒழிக்கப்பட வேண்டும். இல்லையேல் சிறுபான்மையினருக்கு இது பெரும் ஆபத்தைக் கொடுக்கும் என்பது உண்மை.

**வேல்நந்தன்** — புலோலி

**அடுத்த ஆண்டிலாவது தமிழர் எம் சபதங்கள் மெய்ப்படுமா?**

முதலில் தமிழ் மக்கள் நரிகளையும் பரிகளையும் வித்தியாசம் காணப்பழகிக் கொள்ள வேண்டும். நரிகளுக்கு பட்டாபிஷேகம் செய்வதை நிறுத்தி நல்லவர்களை இனங்கண்டு அவர்களை அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்புவோம். அதன் பின் எல்லாம் சரிவரும்.

**வேல்நந்தன்** — புலோலி

**காதலித்து ஏமாற்றியவர்களுக்காக வாழ்வை வெறுக்கும் ஆண்கள் பற்றி?**

மிஸ்டர் காதலர்களே! உங்களை ஒருவர் ஏமாற்றினால் அவர்கள் உங்களை ஏன் இழந்தோம் என கவலை கொள்ளும் அளவுக்கு வாழ்ந்து காட்டுங்கள். அதுதான் வாழ்வின் வெற்றி. அதைவிடுத்து உங்களையே நீங்கள் அழித்துக் கொள்வது முடிவே தவிர ஆரம்பமில்லை.

**தனுஷ்** — வயாவிளான்

**அழகான பெண்கள் பற்றி?**

பேஸ்புக்கில் படித்ததைப் பகிர்கிறேன். அன்பான பெண்களே! உங்களை நண்பராக ஏற்றுக் கொள்ளும்படி அதிகமாக ஆண்கள் தொந்தரவு செய்தால் நீங்கள் உங்களது நிஜமான புகைப்படத்தை உங்கள் பேஸ்புக்கில் பதிவு செய்யுங்கள். இருந்தும் தொல்லை இருந்தால் முகத்தைக் கழுவிவிட்டு எடுத்த படத்தை திரும்பவும் பதிவு செய்யுங்கள் நிச்சயம் பலன்கிட்டும்.

(சிரிப்பதற்காக மட்டும்)

**கிருஷா** — வரணி

**உங்கள் மனைவி நீங்கள் எதிர்பார்த்த அனைத்தையும் செய்கிறாராமே?**

ம்ம்ம்... செய்வாள். சில நேரங்களில் நான் எதிர்பார்க்காததையும் செய்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## வேலியே பயிரை மேய்வதா...?

சோதனைச் சாவடிகளிலும்
வேதனை வாழ்வதிலும்
வேரூன்றி வாழ்ந்த இனம்
வேலியே பயிரை மேய்வதால்
நொந்து நூலாகிப் போகின்றது
எம் பிரதிநிதிகள் நீரல்லோ
எம் வேதனையில் குளீர் காய்வதா?
எரிகின்ற வீட்டில் பிடுங்கியதில்
உம் வீடு கட்டுவதா?
நியாயம் கேட்ட நீதிபதிக்கே
நம்பிக்கையில்லாப் பிரேரணையா?
நீதி என்பது இதுதானா...?
நீதிகள் பலதந்த நீதி நாயகனாம்
வினை தீர்க்கும் விநாயகனுக்கே
வியப்பைத் தந்திட வந்தீரோ...?
குற்றவாளிகள் சேர்ந்து நீதிபதிக்கே
தண்டனை கொடுப்பதா?
தமிழர் விரும்பித் தெரிந்த நீதியரசரை
பதவிக்கு ஆசைப்படும் சிலர்
பகடைக்காய் ஆக்குவதா?
பதவியார்வலரே நீங்கள்
விதிக்கு முன் இறந்தவர்
விழிமூடாக் கனவுகளைக் காண்பித்து
ஓட்டுப் பெற்று வந்தீர்கள்...!
எமக்காக என்ன செய்தீர்கள்...!
காணாமல் போனவருக்காக
ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டீரோ?
வாழ்வாதாரத்தை இழந்தவருக்கு
ஏதேனும் வாழ்வளித்தீரா?
இல்லவே இல்லை
எமது குருதியால் தோய்ந்த பணத்தால்
உமது குடும்ப வாழ்வு சிறப்பதை அறிவீரோ
உம்மைக் கும்பிட்டுக் கேட்கின்றேன்
வாழவிடும் எம்மை
எமது ஓட்டுக்களால் அமைச்சர்களானீர்
எம்மை வளர்ப்பது உம் கடனல்லவா...?
எம்மை வளர்க்காவிட்டாலும்
ஒன்றாய் வாழப் பழகிக்கொள்ளும்
எமது வாழ்வு சிறந்திடும்

**கு.யசிதீபன்**
**அரியாலை**

## எச்சரிக்கை

இது போன்ற
கோலங்கள்
வேறெங்கு நிகழும்

பொய் சொல்லி
வாக்குகள் வாங்கி
வட்டத்தை விற்று
மக்களை ஏய்த்து
மடி நிரப்பும்
அரசியல்தான்!

இவர் போல
ஐயாக்கள் இருக்கும் வரை
நமது விடியலும்
விற்பனைக்கு
விடப்பட்டுக் கொண்டேயிருக்கும்

**தேன்நிலா**
**நல்லூர்**

## தாய்க்கு நிகர் தரணியில் ஏதும் இல்லை

மூன்றெழுத்துக் கவிதை கொண்ட
என் மூவுலகமே– அம்மா
மூச்சுக்கு நூறு தடவை தமக்கையின்
ஈகை விளக்க அழைத்திடுவேன்– மாதா
உடலையும் உயிரையும் இணைத்துக்
கொடுத்தவளே– அன்னை
என் இதயத்தில் என்னென்ன வேட்கை
என்பதை நீ அறிந்து தீர்ப்பாய்– அம்மை
நான் கருவில் இருந்தபோது உன்
தூக்கத்தை தொலைத்த சூரியனே–யாய்
என் குற்றங்கள் அனைத்தையும்
மன்னிக்கும் ஒரே நீதிபதியும்– ஆய்
என் உள்ளத்தில் உள்ளே வாழும்
உன்னதமான தெய்வமே–மாய்
உன்னை நிதமும் தவறாது
தொழுவேன்– நான்

**சி.அபிகாசினி**
**வவுனியா**

## அந்தநாள்!

அதோ அந்த அழகிய காலம்
பால் போல் நிலவெறிக்க
முற்றத்து மணலில்
பாட்டி மடியில் நானிருந்தேன்
பாட்டி கூறுகிறாள்
நிலவில் பாட்டி வடை சுட்ட கதை

சோற்றில் பாலூற்றி
கடைந்த அமிர்தத்தை
ஆ காட்டி அன்னை
எனக்கூட்டுகிறாள்

சாய்மனைக் கட்டிலிலே
சாய்ந்து படுத்திருந்து
விண்ணழகை ரசிக்கிறார் என் தந்தை

அதோ அந்தக் காலம்– இன்று
வெறும் நினைவுதான்
நாளைய சந்ததிக்கு–அது
வெறும் கற்பனைக் கதையாகும்

இதோ இன்று!
என் முற்றத்தில்தான்
முட்கம்பி வேலி இருக்கிறது
நான் ஓடி விளையாடிய முற்றம்
மண்டையோட்டுக் குறியுடன்
மிரட்டுகிறது

ஐயகோ இறைவா!
கனவாய்ப்போன– என்
சொந்த ஊர்க்கனவை
நினைவாக்கமாட்டாயா?

**மாவை. நா.கஜேந்திரன்**



## உறவுக்கும் உரிமைக்கும்

ஒளி மிளிர்ந்து நிழல்
பதியும் மாடிகளும்
தெருவிழியும் தூங்காத
முழுப்பகலும்
களியாட்டக்கூத்துகளும்
கும்மாள போதைகளும்
வாழ்வை ரசித்தது ஓரினம்
ஏழைக்கிராமம் எங்கணும்
இனவாதம் விதைத்து
வாரி அனுப்பினர்
வடக்கிலும் கிழக்கிலும்
வான்பிளந்து வாயலறிய
குண்டுகளும்
வதைபட்டு மூச்சடைக்கும்
நஞ்சுகளும்
நெஞ்சைப் பிளக்கப் பீரங்கிகளும்
பின்தளத்தில் வாசல் வந்து
எம்மினத்தை அழித்தது
அந்நியத்தில் விற்ற தன்மானம்
தமிழ் ஆத்மாவையும் அழித்தது
நட்புடன் வாழ்கிறோம் நாமென
தேடிப்போய் செய்தி சொன்னவர்
செத்தவர் குருதியும் சிதைந்த
உடல்களுமாய்
வித்துடல் மேலே விடிவரை இருந்தோம்
வதைபட்டு வட்டிழந்த
பனைகளும் வனமும்
எம் கண்ணீர் கதை சொல்லும்
தெருக்களிலும் கருகலிலும்
மீதி உயிர் தெருவோரம்
தேம்பி அழுகிறோம்
உறவுக்கும் உரிமைக்குமாய்

**யாழ்.வாகீஷ்**
**ஒட்டுசுட்டான்**

## ஒருபோதும்

நீதியிங்கு சாகாது
நியாயங்களும் சோராது
சூழ்ச் சதி செய்யும்
கூட்டங்கள் வாழ்ந்தாலும்
தேடி அலைந்திங்கு
தீங்குகள் செய்தாலும்
நீதியிங்கு சாகாது
நியாயங்கள் சோராது
பழிதீர்க்கும் படலங்கள்
பகல் இரவாய் உறங்காமல்
பல நாளாய் விழித்திருந்தும்
பயனொன்றும் இல்லாமல்
பரிகாசமாய் ஆனதிங்கே
நீதியிங்கு சாகாது
நியாயங்கள் சோராது
உண்மையுடன் உரசிப் பார்த்தால்
பொய்மையிங்கு சுருங்கிவிடும்
பொறுமையினைச் சுரண்டிப் பார்த்தால்
போர்க்களமாய் மாறிவிடும்
வேண்டாத செயல்கள் தனை
விவேகத்துடன் ஒதுக்கிவிட்டு
விடியலொன்றை தோற்றுவிக்க
வினைதிறனுடன் நடை போடு

**இளவரசு**
**ஒட்டுசுட்டான்**

## புழுதிப்புயல்

நம்பிக்கையில் பலம் குன்றியவர்கள்
கொண்டுவந்தனர் நம்பிக்கையில்லாப் பிரேரணை
குற்றம் எதுவென கண்டனர்
பெரும் ஆதரவு அணிகலன் கண்டு
(விக்கி)த்து போய் உள்ளனர்
விரோதங்கள் பல வகை
பொய்க்குற்றமும் அதிலொன்றோ
தனது தலை மீது மண்போடும்
யானை போல் ஆகிவிட்டது சிலர் நிலை
பாவம் யார் பெத்த பிள்ளைகளோ!
புழுதி என்று நினைத்துத்தான்
பிடுங்கி எறியப் பார்த்தார்களோ
இப்போது புரிந்திருக்கும்
புழுதி மண்ணிலும் பெரும்
புயல் வீசும் என்பது...

**முல்லை [illegible]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பைத் தவறவிடப் போகிறதா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?




"ஏக்க ராஜ்ய" என்ற சிங்களச்சொல்வரப்போகும் புதிய அரசியல் யாப்பில் தமிழிலும் "ஏக்க ராஜ்ய" என்றே இடம்பெறவுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலகில் முன்னேற்றமடைந்த நாடுகள் பல தமது பெயரிலேயே சமஷ்டி என்ற சொற்பதத்தைக் கொண்டிருந்தாலும் இலங்கையைப் பொறுத்தமட்டில் பெரும்பாலான சிங்கள அரசியல்வாதிகளுக்கும் சிங்கள மக்களுக்கும் சமஷ்டி என்ற சொல் வேப்பங்காயாகவே காணப்படுகிறது.

**United States of America, United Soviet Socialist Republic, Federal Republic of Germany...** இவ்வாறு வளர்ச்சியடைந்த நாடுகள் பல தமது பெயரிலேயே சமஷ்டி என்ற சொல்லையும் இணைத்துள்ளன.

இலங்கைத் தமிழர்களின் துரதிர்ஷ்டம் சமஷ்டி என்றால் பிரிவினை அல்லது தனிநாடு என்ற ஒரு தோற்றப்பாடு சிங்கள அரசியல்வாதிகளால் சிங்கள மக்களிடையே விதைக்கப்பட்டு விட்டது. சிங்கள மக்களின் மனதிலிருந்து சமஷ்டி என்பதன் அர்த்தம் பிரிவினையல்ல என்ற எண்ணத்தை மாற்றுவதும் இலகுவான காரியமல்ல. அதற்கு சிங்கள இனவாதிகளும் இடமளிக்கப் போவதில்லை.

கடந்த அறுபது ஆண்டுகளாக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடியும் தமிழர்கள் இழப்புகளைத் தவிர வேறெதையும் பெற்றுக் கொள்ளவில்லை.

இவ்வளவு இழப்புகளுக்குப் பின்னரும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கத் தயாராக இல்லை என்பதே யதார்த்தம். தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கினால் தமது அரசியல் எதிர்காலம் அஸ்தமனமாகி விடுமோ என்ற அச்சமே சிங்கள அரசியல்வாதிகள் அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு பின்னிற்பதற்கான அடிப்படைக் காரணம்.

இலங்கை சுதந்திரமடைந்த போது, சுந்தரலிங்கம் என்பவர் விட்ட தவறுக்காக தமிழர்கள் தங்களை நொந்து கொள்வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

"நாங்கள் ஒருமித்த இலங்கைக்குள் ஒற்றுமையாக வாழ்வோம்" என சுந்தரலிங்கம் சுதந்திர உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளார்.

பின்னர் தனது தவறை உணர்ந்து தனிநாடு கோரியது கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒப்பானது.

**( If I didn't signed the document Solbury never grant Independent to Ceylon )** என சுந்தரலிங்கம் தனது **Eylom Beginnings** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படியோ இதுவரை காலமும் தமது உயிர்களைத் தியாகம் செய்த போராளிகளினதும் பொதுமக்களினதும் இழப்புகள் வீண் போகக் கூடாது.

இப்போது தமிழர்களுக்குத் தேவை அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வே ஆகும்.

அதையே சம்பந்தனும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் வலியுறுத்தி வருகிறார்.

தமிழர்களுக்கு வழங்கப்படும் அதிகாரப்பகிர்வு என்ன பெயரில் அழைக்கப்பட்டாலும் அதைப் பற்றிப் பிரச்சினையில்லை.

அது மாநிலமா, மாகாண சபையா, மாவட்ட சபையா, பிரதேச சபையா,பிராந்திய சபையா என்பதல்ல பிரச்சினை.

மீளப்பெறப்பட முடியாதவாறு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பேரம் பேசுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

"நீங்கள் தமிழிலும் "ஏக்க ராஜ்ய" என்ற சொல்லையே பயன்படுத்துங்கள். எமக்கு அதில் எந்தவித பிரச்சினையுமில்லை. நாங்கள் இந்த விடயத்தில் உங்களுக்கு பரிபூரண ஒத்துழைப்பு வழங்குகிறோம். அதற்குப் பதிலாக நீங்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு உச்சபட்ச அதிகாரப் பகிர்வை வழங்குங்கள்" என்ற கோரிக்கையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கலாம்.

இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சிக்கு சம்மதித்து விட்டது என்ற தோற்றப்பாட்டையும் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கலாம்.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சிக்கு சம்மதித்து விட்டது என்ற பிரமையை உருவாக்கினால் அதிகாரப் பகிர்வு தொடர்பாக இனவாதிகள் சிங்கள மக்களிடையே பிரசாரம் செய்தாலும் அதை இலகுவாக முறியடிக்கலாம்.

இல்லை நாங்கள் **Unitary SriLanka** என்ற பதத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என முரண்டு பிடித்தாலோ அல்லது அதை வைத்து தமிழ் மக்களை ஏமாற்ற முயற்சித்தாலோ நடக்கப் போவது எதுவுமில்லை.

உண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கச் சொல்லி அழுத்தம் கொடுத்து தீர்வு கண்டிருக்க வேண்டும். அப்போது முன்னாள் ஜனாதிபதியோ ஏனைய சிங்கள இனவாத சக்திகளோ தற்போது உள்ளது போன்று பலமான நிலையில் இருக்கவில்லை.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை கூட்டமைப்பு சரியாக பயன்படுத்திக் கொள்ளுமா?

# உமா ஓயா: ஓர் அவலக் குரல்

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த நாள் முதல் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட பாவச் சுமைகளை சுமக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது என எவராவது சொன்னால் அதனை யாராலும் மறுத்துரைக்க முடியாது. ஏனெனில் அதில் நூறு வீதம் உண்மையே.

சைட்டம் யாரால் முன்வைக்கப்பட்டது. முழுமையான ஆதரவு மகிந்த ஆட்சிதான் வழங்கியது. இன்று அது தேசியப் பிரச்சினையாக மாற்றம் பெற்றுள்ளது. எயார் லங்கா நிறுவனம் எமது நாட்டில் நல்ல இலாபமீட்டும் நிறுவனமாக இருந்தது. அதன் நிர்வாகத்தை தான் தோன்றித்தனமாக மாற்றியமைத்து நட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. இது இரண்டாவது கைங்கரியம்.

அடுத்தது நாட்டுக்கு பொருத்தமற்ற விதத்தில் வெளிநாட்டுக் கடன்களை அள்ளிக் கொட்டிக் கொண்டதும் மகிந்த ஆட்சிதான். இன்று அந்தக் கடனை வட்டியும் சேர்த்து திருப்பி செலுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக நாடு பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. இப்படி மகிந்த ஆட்சியின் ஊழல் நாடகங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

புதிய நெருக்கடியாக உருவெடுத்திருப்பது உமா ஓயா திட்டமாகும். இதனை ஆரம்பித்ததும் மகிந்த ராஜபக்ஷ அரசுதான். இந்தத் திட்டம் காரணமாக ஊவா மாகாணம் முழுமையாக சூடாக மாற்றம் கண்டுள்ளது. போதிய மழை பெய்யாத காரணத்தால் பிரதேசத்தில் வறட்சி வேறு தாண்டவமாடுகின்றது. அனைத்து நீர் நிலைகளும் வற்றிப் போயுள்ளது. விவசாயத்துக்கோ அத்தியாவசிய தேவைகளுக்கோ பாரிய தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மாகாணம் முழுவதும் கிணறுகள் வற்றிப் போயுள்ளன. நிலம் கூட வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதேசமெங்குமுள்ள வீடுகள் உடைந்து விழவும், பூமிக்குள் அமிழ்வதற்குமான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனால் பிரதேச மக்கள் பெரும் அச்சத்துடன் காணப்பிடுகின்றனர். மக்கள் என்னதான் செய்வது என்று அங்கலாய்த்த வண்ணம் அடுத்த கணத்தில் எதுவும் நடக்கலாம் என்ற பீதியுடன் காணப்படுகின்றனர்.

இது ஒரு புறமிருக்க உமா ஓயாவின் சுரங்கப் பாதை வழியாக நீர் கசிய ஆரம்பித்துள்ளது. நாளாந்தம் 8 இலட்சத்துக்கும் கூடுதலான கலன் தண்ணீர் வெளியேறிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தண்ணீர் கசிவு காரணமாக இப்பகுதியில் பாரிய மண் சரிவுகள் ஏற்படக்கூடிய அபாயம் கூட உருவாகியுள்ளது. அப்படி யில்லாவிட்டால் பாரிய விபத்தொன்றுக்கு பிரதேச மக்கள் முகம் கொடுக்க நேரிடலாம் என அச்சுறுத்தப்பட்டுள்ளது.

இப்போது இந்த உமா ஓயா பிரச்சினைக்கும் தீர்வு தேட வேண்டிய கட்டாயம் நல்லாட்சி அரசு மீதே சுமத்தப்பட்டுள்ளது. அவசரமாக தீர்வு காணுமாறு வலியுறுத்தி பிரதேச மக்கள் அணிதிரண்டு எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர். புதன்கிழமை பண்டாரவளையில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக பண்டாரவளை நகரமே மனிதத் தலைகளால் நிரம்பி வழிந்தது. இன,மத,மொழி பேதம் பாராது அனைத்து வர்த்தக நிலையங்களும் கடையடைப்புச் செய்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். கறுப்புக் கொடி ஏற்றி கண்டனத்தைக் காட்டினர். பாடசாலைகள் கூட இயங்கவில்லை. போக்குவரத்துச் சேவை முற்றாக ஸ்தம்பிதமடைந்து போனது.

ஊவா மாகாண மக்களின் குடியிருப்புகள், வீடுகள், சொத்துக்களை பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் அரசு தள்ளப்பட்டுள்ளது. விவசாய நிலங்களையும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும். அத்துடன் இந்த உமா ஓயா திட்டம் காரணமாக காணிகளை, வீடுகளை இழந்தவர்களுக்கு உரிய இழப்பீட்டைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி திட்டத்தின் சுரங்கப் பாதை மீதமுள்ள பணிகள் நிறைவடைவதற்குள் பிரதேச சூழல் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு கால்களும் உடைக்கப்பட்டன கைவிரல்கள் நொருக்கப்பட்டன

## குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை

இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளரான போத்தல ஜயந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளை வான் தன்னைக் கடத்திய சம்பவம் தொடர்பாக விபரிக் கிறார்.

இவர் பின்னர் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்திருந்தார். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் தான் வெள்ளை வானில் கடத்தப்பட்டு பல மணி நேரங்கள் அந்த வானிற்குள் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளானதாகவும் ஊடகவியலாளர் கூறினார்.

இவ்வாறான சித்திரவதைகளின் போது இவரது இரண்டு கால்களின் எலும்புகள் உடைக்கப்பட்டன. இவரது விரல்கள் நொருக்கப்பட்டுள்ளன. இவருக்கு சூடு வைக்கப்பட்டது. இவரது தாடி மற்றும் தலைமுடி போன்றன வெட்டப்பட்டன. இவரது வாய்க்குள் பொருட்கள் திணிக்கப்பட்டன. இவ்வளவு சித்திரவதைகளின் பின்னர் இவர் வெள்ளைவானிலிருந்து வீதியோரத்தில் தூக்கி வீசப்பட்டிருந்தார்.

ஆட்டோ சாரதிகள் சிலர் வீதியில் வீசப்பட்டிருந்த போத்தல ஜயந்தவைக் கண்டனர். பின்னர் இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பல பத்தாண்டுகால உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வந்த போதிலும் ஜயந்தவின் வழக்குடன் தொடர்புபட்ட சந்தேகநபர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை.

தற்போது இலங்கைக்குத் திரும்பி வந்துள்ள ஜயந்த தனக்கு நீதி கிடைக்க வேண்டும் எனக் கோரி வழக்குத் தொடுத்துள்ளார். ஆனால் இவருக்கான நீதி விரைவில் கிடைக்குமா என்பது சந்தேகமே.

தற்போது 52 வயதாகும் ஜயந்த இலங்கையிலுள்ள உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவராக பணியாற்றியிருந்தார். இந்தச் சங்கமானது இந்த நாட்டின் மிகப் பெரிய அமைப்பாகும். ஜயந்த இந்த அமைப்பின் தலைவராக இருந்த போது ஊடக அடக்குமுறைக்கு எதிராக தனது கருத்துக்களை வழங்கியிருந்தார். அத்துடன் அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களை வழங்கினால் ஆபத்து ஏற்படும் என்பதைத் தெரிந்து கொண்டபோதிலும் ஜயந்த ஊடக அடக்குமுறைக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டப் பேரணிகளை ஒழுங்குபடுத்தியிருந்தார்.

தன்னைக் கடத்தியவர்கள் யார் என்பது ஜயந்தவிற்குத் தெரியாது. ஆனால் முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்புச் செயலராகவும் பணியாற்றிய கோத்தபாய ராஜபக்ஷ தன்மீது கோபம் கொண்டிருப்பதாக ஜயந்த தெரிவித்தார். ராஜபக்ஷவிற்கு எதிராக ஊடகங்களில் விமர்சனங்கள் வெளியிடப்பட்டமையே இதற்கான காரணம் என ஜயந்த தெரிவித்தார்.

ராஜபக்ஷவின் ஆட்சியில் பல ஊடகவியலாளர்கள் இலக்கு வைக்கப்பட்டனர். ஆனால் ஊடகங்களுக்கு எதிரான வன்முறைகளில் தான் ஈடுபடவில்லை என ராஜபக்ஷ மீண்டும் மீண்டும் தெரிவித்திருந்தார். போரின் போது இலங்கை அரசாங்கத்தால் இலக்கு வைக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் சரியான எண்ணிக்கை என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் போதும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளிலும் பல எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். குறிப்பாக இவர்கள் இராணுவத்தினர், அரசாங்கத்திற்கு ஆதரவான குழுக்கள் அல்லது புலிகள் அமைப்பால் கொல்லப்பட்டதாக குற்றம் சுமத்தப்படுகிறது.



அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் மார்ச் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம், இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னரும், கடந்த கால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுவதாக வாக்குறுதியளித்து நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன ஆட்சிப் பீடம் ஏறிய பின்னரும் இவ்வாறான ஊடக அடக்குமுறைகள் மற்றும் பல்வேறு மீறல்கள் இடம்பெறுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கையானது பல்வேறு சாட்சியங்களைத் திரட்டியுள்ளது.

பல்வேறு சித்திரவதைகளுக்கு முகங்கொடுத்த பின்னர் இலங்கையை விட்டுத் தப்பிச் சென்று பிரித்தானியா மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்த 46 இலங்கைத் தமிழர்களிடமிருந்து பெறப்பட்ட சாட்சியங்களைக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சாட்சியங்களை வழங்கிய தமிழர்கள் இலங்கையின் பாதுகாப்புப் படைகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் சிலர் வெள்ளை வானில் கடத்தப்பட்டிருந்தனர். இவர்கள் பல மாதங்கள் அல்லது பல ஆண்டுகள் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் இல்லாது தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்ட காலப் பகுதியில் இவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். புலிகளின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்ட இடங்களைக் காண்பிக்குமாறு கோரியே தம்மீது சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும் மீறல்கள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் நீதியை எட்டவில்லை. ஒரு சில உயர் மட்ட வழக்குகள் மாத்திரமே நீதிமன்றுகளில் விசாரணை செய்யப்படுகின்றன. ஆனாலும் இவையும் மிகவும் மெதுவாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

ஊடகவியலாளர் ஜயந்த கடத்தப்படுவதற்கு ஒரு சில மாதங்களின் முன்னர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட ஊடகவியலாளர் கீத் நொயார் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட ஆறு இராணுவத்தினர் கடந்த வாரம் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இவ்விரு ஊடகவியலாளர்களும் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டிருந்தனர். சித்திரவதைகளின் பின்னர், ஊடகவியலாளர் நொயார் அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியிருந்தார்.

இவ்வாறான வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக தண்டனை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் தயக்கம் காண்பிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றவாளிகள் இலங்கை இராணுவத்தை அல்லது ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தவர்களாவர்.

இலங்கையில் புதிய ஆட்சி ஏற்பட்டதன் பின்னர், தனது வழக்குத் தொடர்பாக பொலிஸாருக்கும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இழப்பீட்டு ஆணைக் குழுவிற்கும் கடிதம் எழுதிய போதிலும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என ஜயந்த தெரிவித்தார்.

குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இலங்கை இராணுவ வீரர்களைக் கைது செய்வதைத் தான் எதிர்ப்பதாக ஜனாதிபதி மைத்திபால சிறிசேன வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

போர்க் கதாநாயகர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள் எனக் கூறுவது வேடிக்கையானது.

இவ்வாறான அறிக்கைகளை வெளியிடும் போது, நீங்கள் விசாரணையாளர்களுக்கு என்ன செய்தியைக் கூறுகிறீர்கள்? என நேர்காணல் ஒன்றின் போது ஜயந்த வினவியிருந்தார்.

இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட்ட இராணுவத்தினரைத் தண்டிப்பதன் மூலம் இலங்கை இராணுவம் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்' என ஊடகவியலாளர் ஜயந்த தெரிவித்தார்.

ஜயந்தவின் சொந்த இடமான மிரிஹானவில் பொலிஸ் அதிகாரி ஒருவர் இவரைக் கடத்திய வெள்ளை வானின் இலக்கத்தைக் கூறுமாறு கேட்டிருந்தார்.

ஆனால் வாகனத்தின் இலக்கத்தைத் தன்னால் பார்க்க முடிய வில்லை என ஜயந்த கூறினார்.

இதன்பின்னர், குற்றப் புலனாய்வுத்திணைக்களத்திடம் பொலிஸ்மா அதிபர் ஜயந்தவின் வழக்குத் தொடர்பாக விளக்கியிருந்தார்.

இதன் பின்னர் ஜயந்தவிடம் புலனாய்வாளர்கள் இரண்டு நாட்களுக்கு மேல் விசாரணை மேற்கொண்டனர்.

தற்போது ஜயந்தவின் வழக்கானது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரிக்கப்படுகிறது.

ஆனாலும் விரைவில் தீர்வு கிடைக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

இராணுவத்தினர் ஒத்துழைக்காததால் நீதிமன்றங்களால் விரைவாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை என ஊடகச் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

எந்தவொரு வெள்ளைவானைப் பார்க்கும் போதும் தான் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவதாகவும் இவ்வாறான வடுவுடன் வாழ்வதை விட இறந்திருக்கலாம் என சில வேளைகளில் தான் நினைப்பதாகவும் ஜயந்த தெரிவித்தார்.

உடைந்த தனது கால் எலும்புகளைப் பொருத்துவதற்காக உலோகத் தகடுகள் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது மிகவும் வேதனையைத் தருவதாகவும் அமெரிக்காவில் குளிர் காலநிலையின் போது இந்த வலியை தான் அதிகம் உணர்ந்ததாகவும் ஜயந்த தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகின்ற போதிலும் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்களை நீதியின் முன்னிறுத்துவதற்கு அரசாங்கம் இழுத்தடிப்பதாக உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் தற்போதைய தலைவர் லசந்த றுகுணுஜ் தெரிவித்தார்.

நாங்கள் அதிருப்தியடைந்துள்ளோம். இரண்டு ஆண்டுகளாக விசாரணையை மேற்கொள்ளுமாறு நாங்கள் கோரிக்கை விடுத்து வருகிறோம். குற்றவாளிகள் சமூகத்தில் சுதந்திரமாகத் திரிகிறார்கள்.

இதனால் இந்த நாட்டில் ஜனநாயகம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு உங்களால் உத்தரவாதம் அளிக்க முடியாது என றுகுணுஜ் தெரி வித்தார்.

ஜயந்த கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் அமெரிக்கத் தூதுவர் வைத்தியசாலையில் சென்று இவரைப் பார்வையிட்டிருந்ததுடன் அமெரிக்காவில் தங்குவதற்கான வசதிகளையும் வழங்கியிருந்தார்.

முதலில் இதனை ஜயந்த மறுத்திருந்தார். ஆனாலும் தொடர்ந்தும் சில மாதங்களாக அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டதால் அமெரிக்காவிற்குச் செல்வதென ஜயந்த தீர்மானித்தார். தற்போது ஜயந்த அமெரிக்காவின் குடியுரிமையைப் பெற்றுள்ளார்.

ஆங்கிலத்தில் – KRISHAN FRANCIS
வழிமூலம் – ASSOCIATED PRESS
மொழியாக்கம் – நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழும் இதயம்



டாண்! டாண்!! டாண்!!!

அருகிலிருந்த மாரியம்மன் தோயிலின் பத்து மணி பூசைக்கான ஆயத்த மணி ஒலித்துக் கொண்டிருந்தது. மணியோசை காதில் விழுந்ததும் கமலா பரபரப்படைந்தாள்.

'மணி ஒன்பதே முக்கால் ஆகிவிட்டுது. இன்னும் சமையலுக்கு வாற மனுசியைக் காணேல்ல. அதுவும் பிள்ளையள் வந்து நிக்கிற இந்த நேரத்தில கடவுளே! நான் என்ன செய்வன்.'

ஏங்கித் தவித்தது நெஞ்சம்.

' அம்மா! ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்ததால கொஞ்சம் சுணாங்கிப் போய்ச்சுது. நீங்கள் என்ன சமையல் எண்டு சொல்லுங்கோ. ஒரு நொடியில சமைச்சிடுறன்'

தேவகியின் குரல் கேட்டதும்தான் கமலாவுக்கு சற்று நிம்மதி ஏற்பட்டது. வெளிநாட்டிலிருந்து மகன் செந்தூரன் மனைவி பிள்ளைகளோடு வந்திருந்தான். முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்ட அவளால் குனிந்து நிமிர்ந்து வேலை செய்ய முடிவதில்லை. என்ன செய்வது ஒரு காலத்தில் பம்பரமாய்ச் சுழன்று வீட்டு வேலைகளைக் கவனித்தவள், முதுமை தந்த பரிசாக ஒரு ஊன்றுகோலுடன் வீட்டுக்குள் நடமாடித் திரிகிறாள்.

மகனுக்குப் பிடித்தமான கறி வகைகளைச் சமைக்குமாறு தேவகியிடம் உத்தரவிட்டவள், தானே மரக்கறிகளை நறுக்கித் தருவதாகக் கூறி சமையலறையில் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள். தேவகி மரக்கறிகளை எடுத்து அவளுக்குக் கிட்டவாகக் கொடுக்க அவளும் நறுக்கத் தொடங்கினாள். வெங்காயத்தை உரித்துக்கொண்டே தேவகியின் முகத்தை அவதானித்தவள் அதில் தேங்கிக் கிடந்த சோகத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றாள்.

"தேவகி! ஏன் பிள்ளை சோகமாய் இருக்கிறாய்? என்ன பிரச்சினை எண்டு என்னட்டைச் சொல்லலாம் தானே"

கமலாவின் கருணையுள்ளத்தைக் கண்டு நெகிழ்ந்து போனவளாய் தேவகி தன் மனப்பாரத்தை அவள் முன் கொட்டினாள்.

" அம்மா என்ரை பிள்ளைக்கு வருத்தம் எண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனால் அவை ஏதேதோ சொல்லுகினம். சிறுநீரகம் இரண்டும் பழுதாய்ப் போச்சுதாம். வேறை சிறுநீரகம் பொருத்துறதெண்டால் ஊரிப்பட்ட காசு வேணுமாம். அம்மா! நீங்களே சொல்லுங்கோ என்னட்ட என்ன கிடக்குது. அவங்கள் சொல்லுற தொகைக்கு நான் எங்கை போவன்?"

உணர்ச்சி வசப்பட்டவளாய் கண்ணீா மல்கக் கூறினாள். அவள் சொன்னதைக் கேட்ட கமலாவுக்கோ அதிர்ச்சி தாங்க முடியவில்லை.

"என்ன! அந்தச் சின்னப்பிள்ளைக்கே கிட்னி வருத்தமோ?"

"ஓமம்மா. அவ்வளவு காசு தேடுறதெண்டால்... நான் எங்கை போறது. என்னமாதிரி படிச்சுக் கொண்டிருந்த என்ரை பிள்ளைக்கு இப்பிடியொரு வருத்தம் வந்துதே"

அரிசியை உலையில் போட்டுவிட்டு வெளியே போய் மூக்கைச்சீறி விட்டு வந்தாள் தேவகி. பச்சாதாபத்தினால் மனமுருகி நின்றாள் கமலா.

"என்ரை பிள்ளை அடிக்கடி சொல்லுவான். நான் நல்லாய்ப் படிச்சு பெரிய உத்தியோகம் பாத்து உங்களையும் அக்காவையும் காப்பாத்துவான் எண்டு. இப்ப... எல்லா ஆசையும் மண்ணாய்ப் போச்சு"

கண்ணீர் விட்டு அழுதவளைத் தேற்றினாள் கமலா.

"தேவகி! நீ ஒண்டுக்கும் கவலைப் படாதை பிள்ளை. கடவுளை நம்பு. அவர் ஒருபோதும் கைவிடமாட்டார்.

வெறும் வாய்ப்பேச்சு அவளது உள்ளத்தின் கவலைகளைப் போக்கிவிடுமா என்ன... மௌனத்தைத் தழுவிக் கொண்டவளாய் மும்முரமாக சமையலில் ஈடுபட்டாள். அங்கு சமையலை முடித்துவிட்டு அவள் மற்றுமொரு வீட்டிற்குப் போய் சமையலைக் கவனிக்க வேண்டும். ஆசிரியத் தொழிலுக்குப் போகும் அந்த வீட்டு எஜமானியும் அவளது குழந்தைகளும் பாடசாலை விட்டு வருவதற்குள் சமையல் செய்து வைக்க வேண்டும். இப்படியாக ஓடியாடி உழைத்தால் தான் அவளது வீட்டில் அடுப்பு எரியும். தேவகி அவளுடைய அம்மா, குழந்தைகள் இருவர் என நால்வரின் வயிற்றுப் பிழைப்புக்கு அவளே உழைப்பாளி.

அன்றைய இரவு. உள்ளத்தின் வேதனைகள் தந்த வலியினால் அவளது உறக்கம் தொலைந்து போனது. வழமையாக் அவளருகில் படுத்துக்கிடக்கும் அவளது மகன் அங்கே ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிழித்துப்போட்ட நாராகச் சுருண்டு போய்க்கிடந்தான். என்ன சாபக்கேடோ. அவர்களது குடும்பத்தில் ஆண் உறவுகள் நிலைப்பதில்லை. இளவயதில் அம்மா கணவனை இழந்தாள். அத்துடன் இளந்தாரி வயதில் மகனையும் இழந்தாள். வன்னியில் வாழ்ந்த காலத்தில் தேவகியும் அவளது தங்கையும் ஏககாலத்தில் எல்லைக் காவலுக்கெனப் புறப்பட்டுப் போன கணவன்மாரை இழந்தனர். இறுதிக்கட்டப் போரில் தேவகியின் தங்கை ஷெல்குண்டு பட்டு குற்றுயிராய்க்கிடந்த காட்சி இப்போதும் அவள் கண்முன் விரிகிறது.

இரத்த வெள்ளத்தில் கிடந்தவனைக் கண்டு துடித்துப் போகிறாள் தேவகி. உயிர் பிரியும் சமயத்தில் அவள் திக்கித் திணறி சொன்ன வார்த்தைகள் மட்டும் இன்றும் அவள் மனதில் பசுமையாய்ப் பவனிவர... கண்கள் கட்டுக்கடங்காமல் நீரைச் சொரிகின்றன.

'அக்கா! நான் தப்பமாட்டன். தமிழன்பன் இனி உன்ரை பிள்ளை. பாத்துக்கோ' அரைகுறை வார்த்தைகளுடன் அவளது கண்கள் செருகிக் கொண்டன.

தமிழன்பன் இப்போது அவளது பிள்ளை. இந்தக் குடும்பத்தின் ஒரே ஆண் வாரிசு. ' நான் எப்படியும் பிள்ளையைக் காப்பாற்றியே ஆகவேண்டும்' உள்ளம் ஓர்மம் கொள்கிறது. சிந்தனைச் சிதறல்கள் புயலாக உருவெடுத்து சுழலத் தொடங்கிய போது மின்னலென ஒரு கூற்று மன்த்திரையில் தோன்றி மறைந்தது.

'இப்போது என்னிடம் உள்ளதெல்லாம் இந்த இரண்டு பரப்புக் காணி தான். ஏதோ வீட்டுத் திட்டம் கிடைத்த புண்ணியத்தால் ஓலைவீடு கல்வீடாக மாறியிருக்கிறது. இந்த வீடு வளவை அடைமானம் வைத்தாவது தேவையான பணத்தைப்புரட்டிவிடலாம் ஆனால்.. எவரிடம் போய்க் கேட்பது?'

நீண்ட நேர போராட்டத்தின் பின் கமலா அம்மாவிடம் கேட்டுப் பார்க்கலாம் எனமுடிவெடுத்தவள், தன்னையறியாமலே கண்ணயர்ந்து போய்விட்டாள்.

அன்றைய இரவு. கமலாவுக்கும் நித்திரை வரவில்லை. கண்ணை மூடினால் அன்றையபொழுது தன் கண் முன்னால் கண்ணீாவடித்து நின்ற அந்த அபலையின் முகம் வந்து தோன்றி அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. கருணையுள்ளம் படைத்த அவளது இதயத்தில் ஓர் நெருடல் தோன்றி சித்திரவதை செய்யத் தொடங்கியது. ஏதாவது உதவி செய்து எப்படியாவது அந்தத் தாயின் வேதனையைப் போக்கவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. அத்தருணத்தில் மகன் செந்தூரனது நினைவு வந்து அவளைத் தட்டிக் கொடுத்தது.

இரண்டு நாட்களின் முன் நடந்த சம்பவமொன்று அவளது நினைவில் வந்து மோதியது. நண்பர்களுடன் ஊர் சுற்றி பார்க்கப் போயிருந்த செந்தூரன் பொழுது கருகும் வேளையில் வீடு திரும்பியிருந்தான். அம்மாவைக் கண்டதும் ஆவலுடன் அவளிடம் வந்தவன் " அம்மா! எங்கட மாரியம்மன் கோயிலில ஒரு திருவிழாவை நான் செய்யலாமென்று யோசிக்கிறன்" என்றான்.

" ஏனப்பு திடீரென்று உனக்கு இந்த யோசனை வந்தது?"

"இல்லையம்மா. ஏழாம் திருவிழா செய்யிற உபயகாரர் திருவிழா செய்யிறதுக்கு பின்னடிக்கிறாராம். அது தான் என்னைச் செய்யச் சொல்லி முதலாளி கேட்டவர். நான் அம்மாட்டைக் கேட்டிட் டுச் சொல்லுறன் எண்டு சொன்னனான்"

" அது சரி நீ வெளிநாட்டில இருக்கிறனி. இஞ்சை என்னெண்டு திருவிழாச் செய்யிறது. உனக்கு விருப்பமெண்டால் கோயிலுக்கு ஏதும் வாங்கிக்குடு. அதை விட்டுட்டு வருசாவருசம் திருவிழாச் செய்யிறது சாத்தியமில்லாத கதை"

"சாய்! நீங்கள் என்ரை பிளான் எல்லாத்தையும் கெடுத்துப் போட்டியள். நான் நினைச்சன் நாலு கூட்டம் மேளம் பிடிச்சு, பாட்டுக்காரரையும் கூப்பிட்டு திருவிழாவை ஒரு அசத்து அசத்தலா மெண்டு"

சலித்துக்கொண்டாலும் அம்மாவின் ஆணையை மீறாதவன் அவன். கமலா அத்தனை கட்டுப்பாடாக அவனை வளர்த்திருந்தாள்.

"தம்பி! உனக்கேன் புத்தி உப்பிடிப் போகுது. உப்பிடி ஆடம்பரமாய் சுயவிலாசத்துக்காக செலவழிக்கிற காசை ஆரும் ஏழைகள், இல்லாததுகளுக்குக் கொடுத்தால் புண்ணியமாவது கிடைக்கும். கடவுளும் இரங்குவார்"

"சரி அம்மா.உங்கட விருப்பத்தை நான் மீறமாட்டன்"

அந்த மீள் நினைவுகள் தந்த சுகத்தில் அவள் உறங்கிப் போனாள்.

மறுநாட்காலை. வற்றாத கண்ணீருடனும் கையில் காணியின் உறுதியுடனும் வந்து காலில் விழுந்த தேவகியைப் பார்த்து விக்கித்து நின்றாள் கமலா. பதறிய உடலை சகஜ நிலைக்குக் கொண்டுவர சிறிதுநேரம் எடுத்தது.

"அம்மா! உங்களைத்தான் மலை போல நம்பியிருக்கிறன். இல்லை என்று மட்டும் சொல்லிப் போடாதையுங்கோ. எப்பிடியாவது என்ரை பிள்ளையின்ரை உயிரைக் காப்பாத்துங்கோ"

கவலையில் தோய்ந்து கிடந்தவளைத் தடவிக் கொடுத்து ஆசுவாசப் படுத்தினாள் கமலா.

"தேவகி! நீகவலைப்படாதை பிள்ளை. உன்ரை பிள்ளையின்ர வைத்தியச் செலவைத் தான் ஏற்றுக்கொள்ளுறதாய் தம்பி சொல்லிப்போட்டான். இந்த உறுதியை நீயே வைச்சுக் கொள்"

சோர்ந்திருந்த தேவகியின் முகத்தில் ஓர் பிரகாசம். கரம் குவித்த அந்த ஏழைத்தாயின் சிரிப்பில் ஒரு கணம் கடவுளைக் கண்டாள் கமலா.

" அம்மா! என்னால நம்பவே முடியவில்லை. தாய் தகப்பன் இல்லாத அந்தப் பிள்ளைக்கு உதவி செய்ய முன் வந்த நீங்கள் தெய்வப்பிறவிதான்"

தேவகியின் வார்த்தைகள் கமலாவைத் திடுக்கிட வைத்தன.

"தேவகி! நீ என்ன சொல்லுறாய்?"

"உண்மைதானம்மா. அவன் நான் பெத்த பிள்ளை இல்லை. என்னுடைய தங்கச்சி ஷெல்பட்டு சாகேக்க என்னட்ட ஒப்படைச்ச பிள்ளை. குழந்தையாய் இருந்த அவனுக்கே இது விசயம் தெரியாது"

ஆச்சரியத்துடன் இருவரும் ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்தனர். கருணை பொங்கும் உள்ளங்களில் தான் கடவுள் வாழ்கிறார். இதுதான் உண்மை.

**மலரன்னை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போயஸ் கார்டன் யாருக்கு?

வேதா நிலையம் போயஸ் கார்டன்

கடந்த வாரம் போயஸ் கார்டனைக் கலங்கடித்தது ஜெயலலிதாவின் அண்ணன் வாரிசுகளான தீபா, தீபக் மோதல். இதேபோல் கடந்த இரு மாதங்களுக்கு முன் காலை 6 மணிக்கு போயஸ் கார்டனுக்கு வந்தார் தீபா.

தனியார் செக்யூரிட்டி ஆட்கள் அவரை உள்ளே விட மறுத்தார்கள். இது எங்க வீடு எங்க அத்தைக்குப் பிறகு எங்களுக்குத்தான் சொந்தம். நீங்க யாரு என்னை தடுக்க? எனக் காரசாரமாக சத்தம் போட்டார் தீபக். யாராலும் அவரை சமாதானப்படுத்த முடியவில்லை.

உடனே இது குறித்து ஜெயலலிதாவின் உதவியாளர் பூங்குன்றனுக்கு தகவல் சொல்லப்பட்டது. பூங்குன்றன் தீபக்கிடம் சமரசம் பேச விவகாரம் இழுத்துக் கொண்டே போனது ஊடகங்களுக்குத் தெரிந்து விடக்கூடாது எனப் பதறிய செக்யூரிட்டி ஆட்கள் இப்போ உங்களுக்கு என்ன தான் சேர் வேணும்? எனக் கேட்டார்கள். கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் தீபக் சொன்னார். பாகுபலி படத்துக்கு 10 டிக்கெட் வேணும் அதைக் கொடுத்தால் இப்பவே இந்த இடத்தை விட்டுக் கிளம்பிப் போயிடறேன்!

அடுத்த கால் மணி நேரத்தில் பாகுபலி படத்துக்கான டிக்கெட்டுக்கள் கொடுக்கப்பட அதன் பிறகே அங்கிருந்து நகர்ந்தார் தீபக். இல்லையேல் அன்றே போயஸ் கார்டன் சர்ச்சை பூதாகரமாகி இருக்கும்.

அமைச்சர்களையும் அதிகாரிகளையும் தீர்மானித்த போயஸ் கார்டன் இல்லம் இப்போது பாகுபாலி படத் துக்கான டிக்கெட்டுக்களைப் பரிசீலிக்கிற இடமாக மாறி நிற்கிறது.

வேதா நிலையம், 81 போயஸ் கார்டன் என்கிற முகவரி சுமந்த கம்பீரம் இப்போது காணாமல் போய்க் கொண்டிருக்கிறது. பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் முற்றிலும் அகற்றப்பட தனியார் செக்யூரிட்டி டீம் கண்காணிப்பு வேலைகளைச் செய்கிறது. கட்சி நிர்வாகி களோ மன்னார் குடி குடும்ப உறவினர்களோ இப்போது கார்டன் பக்கம் வருவதே இல்லை. போயஸ் கார்டனைக் கவனிக்கும் பொறுப்பு இள வரசி மகன் விவேக் ஜெய ராமனிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஜெ. இன் உதவியாளர் பூங்குன்றன் தினமும் கார்டனுக்கு வருகிறார். சசிகலாவின் உதவியாளர்களான கார்த்திகேயன், நந்தகோபால் இருவரும் போயஸ் கார்டனின் கணக்கு வழக்குகளைக் கவனிக் கிறார்கள். ஜெ. இன் அம்மா சந்தியாவால் கார்டனுக்கு அழைத்து வரப்பட்ட சமையற்காரப் பெண் மணி ராஜம்மாள் முழுநேரமும் கார்டனிலேயே தங்கிவிட்டார்.

போயஸ் கார்டனை ஜெயலலிதாவின் நினைவு இல்லமாக மாற்ற வேண்டும் என்கிற கோரிக்கை ஆரம்பத்திலேயே எழுந்தது அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்ற உடனேயே அதனை அறிவிக்கவும் தயாரானார் சசிகலா. அவர் தங்குவதற்காக போயஸ் கார்டன் பகுதியிலேயே வேறொரு வீடு பார்க்கப்பட்டது. ஆனால் கட்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான இடமாக கார்டன் இருந்தால் நன்றாக இருக்கும். ஒரு வருடம் கழித்து போயஸ் கார்டனை விட்டு வேறிடம் செல்ல யோசிக்கலாம் எனச் சொல்லப்பட அதை ஆமோதித்து ஏற்றுக்கொண்டார் சசிகலா.

கார்டன் யாருக்கு? எனக் கிளம்பியிருக்கும் களேபரம் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கும் அடிபோட வாய்ப்பிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்த நிமிடம் வரை கார்டனின் முழுப் பராமரிப்புக்களையும் செய்பவர்கள் சசி உற வினர்கள் தான். 51 வேதா நிலையம் என்கிற முகவரி கொண்ட ரேசன்கார்டில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, விவேக் ஜெயராமன் ஆகிய நால்வருடைய பெயர்கள் இடம் பெற்று இருக்கின்றன.

போயஸ் கார்டன் யாருக்கு என்கிற விபரத்தை ஜெ. வெளிப்படையாக சொல்லவில்லை. அவர் பெயரில் உள்ள சொத்து அவர் வழி உறவினர்களுக்கு சேர்வது தான் சட்டரீதியான தீர்வு. ஆனால் ரேசன் கார்டின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகுவதன் மூலமாக சசிகலா உறவினர்கள் முழு உரிமை கோரவும் வாய்ப்பு இருக்கிறது.

## கிளம்பும் புதிய சர்ச்சை

ஜெ. இற்கு சொந்தமான பல சொத்துக்கள் கூட்டு அடிப்படையில் வாங்கப்பட்டு உள்ளன. அதில் சசிகலா மற்றும் அவருடைய உறவினர்களின் பெயர் இருக்கிறது. அந்த அடிப்படையிலும் சசிகலா தரப்பு கார்டனை நிர்வகிக்க உரிமை கோரலாம். ஆனாலும் இதற்கு முந்தைய வழக்குகளின் அடிப்படையில் இத்தகைய இக்கட்டான நேரங்களில் இரத்த உறவுகளின் பக்கமே சட்டம் நிற்கும் என்கிறார்கள். போயஸ் கார்டன் விவகாரத்தை தொடர்ந்து கவனிப்பார்கள்.

சசிகலாவுக்கு நெருக்கமான உறவினர்கள் தரப்பில் இது குறித்துக் கேட்டோம். ஜெ. மறைவுக்கு பிறகு சசிகலா கார்டனை நிர்வகித்த வரை எந்தப்பிரச்சினையும் இல்லை. இப்போது பிரச்சினை கிளப்பும் தீபக் ஜெ. இன் சொத்து குறித்த எந்த விவகாரத்திலும் தலையிடமாட்டேன் எனக் கையெழுத்தே போட்டுக் கொடுத்திருக்கிறார். சசிகலா சிறைக்குப் போன பிறகு கார்டனில் யார் தங்குவது என்பதில் பலத்த போட்டி உருவானது. ஜெ. இருந்த போது கார்டனில் அதிகம் தங்கியது இள வரசி மகன் விவேக் மட்டும் தான். திருமணத்துக்குப் பிறகு தான் தி.நகரில் தங்கினார். அதனால் அவரைக் கார்டனில் தங்க வைக்க முடிவானது. ஆனால் சசிகலாவால் துணைப் பொதுச் செயலாளரான டி.டி.வி தினகரன் தன் மனைவி அனுராதா உடன் கார்டனில் தங்கினார். அதற்கு சசிகலாவின் தம்பி திவாகரன் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தார். குடும்ப ரீதியான இந்த மோதல்களுக்கு மத்தி யில் ஆவி குறித்த பீதியும் கிளம்பியது.

தினகரன் தங்கிய இரண்டாவது நாளே அவர் தங்கியிருந்த அறையில் யாரோ சத்தம் போடுவது போல் பரபரப்பானது. அடுத்த நாள் இரவு மறுபடியும் சத்தம் கேட்க கார்டனில் இருந்த குழந்தைகள் அழ ஆரம்பித்து விட்டார்கள். இதில் ரொம்பவே பயந்து போன தினகரன் அடுத்த நாளே தன் மனைவியை அழைத்துக்கொண்டு அடையாறு வீட்டுக்குக் கிளம்பி விட்டார். அவர் போன பிறகு கார்டனில் எந்த சத்தமும் இல்லை. இன்னொரு நாள் திவாகரனின் மகள் ஜெய் ஆனந்த் கார்டனில் ஜெ உட்காரும் அறையில் அமர்ந்து பேசியிருக்கிறார்.

அன்று இரவு கார்டனில் கடுமையான சத்தம் கிளம்ப அதன் பிறகு சசிகலா உறவினர்கள் யாருமே கார்டனில் தங்குவது இல்லை. இதற்கிடையில் கார்டன் ஜாதகத்தில் ஆண்களுக்கு ஆகாது என யாரே கிளப்பி விட மன்னார் குடி உறவினர்களை அதுவும் கடுமையான அச்சத்தில் ஆழ்த்தி விட்டது. அதனால் கார்டன் யாருடைய நிர்வாகத்துக்குப் போனாலும் பரவாயில்லை என்கிற நிலைப்பாட்டுக்கு உறவினர்கள் வந்துவிட்டார்கள். ஆனால் சசிகலா மட்டும்தான் தன்னுடைய அக்கா வாழ்ந்த வீடு என்பதால் அதனை யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கிறார். அதற்கான சட்ட முயற்சிகளையும் தீவிரமாக்கிச் சொல்லி இருக்கிறார் என்கிறார்கள் விளக்கமாக.

இதற்கிடையில் தீபா மற்றும் தீபக்கை அழைத்துப் பேசி சமாதானப்படுத்தும் முயற்சிகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புக்கள் கைநழுவிப்போனால் கார்டனை ஜெ இன் நினைவு இல்லமாக மாற்றுகிற முடிவுக்கு சசிகலா சம்மதிப்பார் என்றும் சொல்கிறார்கள்.

இது குறித்து நாம் தீபக்கிடம் பேசினோம். நானும் என் அக்கா தீபாவும் அடிக்கடி கார்டனுக்கு போய் வருகிறோம். அங்கே யாரும் எங்க்ளைத் தடுப்பது இல்லை. சம்பவம் நடந்த அன்னிக்குக்கு கூட நாங்க இரண்டு பேரும் உட்கார்ந்து தோசை சாப்பிட்டபடியே பேசிக்கிட்டு இருந்தோம். தீபா உடன் வந்த வேண்டாத ஆட்களால் தான் பிரச்சினை உருவானது. இப்பவும் சொல்றன் போயஸ் கார்டன் எனக்கும் தீபாவுக்கும் தான் சொந்தம். சசிகலாவும் அவருடைய உறவினர்களும் இதை முதல்ல புரிஞ் சுக்கனும். எங்க அத்தை யோட சொத்து எங்களுக்கு சேருவதுதானே நியாயம்! என்றார்.

போயஸ் கார்டனை அரசு நினைவு இல்லமாக மாற்ற நீங்கள் சம்மதிப்பீர்களா? எனக் கேட்டோம். அது நியாயமான கோரிக்கை தான். அது குறித்து நிச்சயம் பரிசீலனை செய்வோம்! என்றார்.

இந்திய அரசியலையே தீர்மானித்த வேதா நிலையம் இப்போது சொத்து தகரா றின் காரணமாக சர்ச்சை வளையத்தில் சிக்கி தவிப்பது காலக் கொடுமைதான்.

-புதிய தலைமுறை-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனர்கள் இப்படியா? நம்ப முடியாத உண்மை



சீனர்கள் என்றாலே வினோதம் தான். உயரத்தில் குட்டையாக இருப்பதால் இவர்களை குறைத்து எடையிட முடியாது. ஆள் பலத்திலும், இராணுவ பலத்திலும் உலகை அச்சுறுத்தக் கூடிய அளவில் இருக்கிறார்கள் சீனர்கள்.

ஆனால், உணவுப் பழக்கத்திலும், வாழ்வியல் முறையிலும் இவர்கள் செய்யும் காரியங்கள் பெரும்பாலும் உலக மக்களை முகம் சுளிக்க தான் வைக்கிறது. உலக மக்கள் விரும்பி சாப்பிடும் பால் உணவுப் பொருட்கள் என்றால் சீனர்களுக்கு அலர்ஜி. ஆனால், எலி, பூனை, நாய் என்றால் இவர்களுக்கு உயிர்.

இதுபோல, சீனாவை பற்றி யாராலும் நம்ப முடியாத அதிர்ச்சிகரமான தகவல்கள் ஏராளம் இருக்கின்றன...

### 80வீதமான மரங்களை சாப்பிட அழிக்கும் சீனா

சீனர்கள் உணவு உண்ண பயன்படுத்தும் சாப்ஸ்டிக்ஸ் தயாரிக்க மட்டும் 80வீதமான மரங்கள் அழிக்கப்படுகின்றன வருடா வருடம். இந்த சாப்ஸ்டிக்ஸ் களை ஒருமுறை பயன்படுத்திய உடனேயே எறிந்து விடுகிறார்கள். பெரும்பாலும் இது மக்கும் பொருளாக இருப்பினும் இதற்காக மட்டும் 80வீதமான மரங்களை வெட்டுவது அநியாயம்.

### போலிகளை சிறைக்கு அனுப்பும் வினோதம்

சீன மக்கள் பெரும்பாலும் பார்க்க ஒரே மாதிரி இருப்பது அனைவரும் அறிந்ததுதான். இதை வைத்து, பெரிய பணக்காரர்கள் தண்டனை பெறும் போது தங்களை போலவே இருக்கும் வேறு நபர்களை சிறைக்கு அனுப்பி விடுகிறார்கள்.

### பூனைகளை விரும்பி உண்கிறார்கள்

உலகம் முழுக்க பூனைகளை செல்லப்பிராணியாக தான் வளர்க்கிறார்கள், சீனாவை தவிர. ஏனெனில், சீனாவில் பூனை விரும்பி உண்ணப்படும் உணவு. சீனா முழுவதிலும் ஓர் நாளுக்கு ஆயிரக் கணக்கான பூனைகள் உண்பதற்காகவே கொல்லப்படுகின்றன.

### வளர்ப்பு பிராணிகளுக்கு வர்ணம் பூசுதல்

சீனா ஒரு வண்ணமயமான நாடு தான். ஆனால், இவர்கள் தங்களது செல்லப்பிராணிகளின் மீது, தங்களுக்கு பிடித்த மிருகங்களை போல பெயின்ட் அடித்து விடுகிறார்கள்.

### வேலை செய்யும் எந்திரங்கள்

வால்-ஈ, ஐ- ரோபாட் போல நீங்கள் சீனாவில் சில உணவகங்களில் வேலை செய்யும் ரோபாட்டுகளை பார்க்க முடியும். இந்த எந்திரன்கள் சமையல் செய்யும், பரிமாறும்.

### பால் உணவுப் பொருட்களை அதிகம் உண்பதில்லை

எலி, பூனை, நாய் என அனைத்தையும் ஒரு கை பார்க்கும் சீனர்களுக்கு பால் உணவுப் பொருட்கள் என்றால் அலர்ஜியாம். எனவே, பால் உணவுப் பொருட்களை அதிகம் இவர்கள் உட்கொள்வதில்லை.

குகையில் வாழும் மக்கள் இன்னமும் கூட நிறைய சீன மக்கள் குகைகளில் வாழ்ந்து வருகிறார்கள். மலைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் இவர்கள் மிகவும் ஏழ்மையில் வாடி வருகிறார்கள்.

### இருபது வயதை கடந்த பெண்கள்

சீனாவில் இருபது வயதை தாண்டியும் திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்களை எஞ்சியவர்கள் "leftOvers" என்று குறிப்பிடுகிறார்கள்.

### சட்டை கொலரில் ஊசிமுனை

சீன இராணுவ வீரர்களின் சட்டை கொலரில் ஊசி முனை வைத்திருக்கப்படும். இதனால் அவர்கள் எப்போதும், தலை நிமிர்ந்து காணப்படுவார்கள் எனக் கருதப்படுகிறது.

### வீதி நெரிசல்


சீனாவில் தான் அதிகமாக பெரும் வீதி நெரிசல்கள் ஏற்படுகின்றன. ஒருமுறை 62 மைல் தூரம் ஏற்பட்ட வீதி நெரிசலால், 12 நாட்கள் வீதியிலேயே காத்திருக்க நேரிட்டனர் மக்கள்.

### சிறுநீரில் முட்டையை வேகவைப்பது

சிறுவர்களின் சிறுநீரில் முட்டையை வேக வைத்து சாப்பிடுவதை சுவை மிகுந்ததாக கருதுகிறார்கள்.

நமக்குத் தெரிந்த விடயங்கள்தான் இது. இன்னும் தெரியாத விடயங்கள் எவ்வளவு இருக்கோ சாமி. நினைக்கவே முடியல்ல..





# உங்கள் வாகனம் புகைக்கிறதா? ஏன், எதற்கு யோசிக்கிறீர்களா?

சிலர் மோட்டார் சைக்கிள் அல்லது காரில் செல்லும்போது, தங்களது ரியர்வியூ மிரரில் கறுப்புப் புகை தெரிவதைப் பார்த்து, 'யாரோட வண்டினு தெரியலை.... ரோட்டையே கறுப்பாக்குது' என்று முன்னேறிச் செல்வார்கள், ஆனால், அது தங்கள் வாகனத்தின் புகைதான் என்பது அவர்களுக்கு லேட்டாகத்தான் உறைக்கும். 'புகைப்பது கேடு... நமது உடம்புக்கு மட்டுமல்ல வாகனங்களுக்கும்தான்!' இந்தப் புகைக்குப் பின்னால் ஒரு சின்ன எஸ்டிடி.. அதாங்க வரலாறு இருக்கிறது.

### ஏன்?

மோட்டார் சைக்கிளோ, காரோ - புகை இரண்டு வகைப்படும். வெள்ளை அல்லது கறுப்பு. சில மிகப் பழைய டீசல் கார்களில் வெள்ளையோடு சேர்த்து நீல வண்ணமும் கலந்து கட்டி வரும். சில புது கார்களில் இருந்து எப்போதாவது புகை வருவது ஆச்சர்யமாக இருக்கும். ஆனால், அதிக பாரம் ஏற்றிச் செல்வதும் அதற்குக் காரணமாக இருக்கலாம். மற்றபடி எந்த கலரில் புகை வந்தாலும், இன்ஜினில் ஏதோ கோளாறு என்பதுதான் இதன் பொருள். பல நேரங்களில் இது இன்ஜினையே பாதித்துவிடும்.

### எதற்கு கறுப்புப் புகை?

பொதுவாக, டீசல் இன்ஜின்களில்தான் கரும்புகை அதிகமாக வரும். எரிபொருள் சரியாக எரியவில்லை என்பதுதான் இதன் உட்பொருள். எரிபொருள் சரியாக எரியாததற்குப் பல காரணங்கள் உள்ளன. இதற்கு முக்கிய காரணியாக இன்ஜின் ஹெட்டில் இருந்து எக்ஸாஸ்ட் வரை படியும் காபன் டெபாஸிட்களைக் கை காட்டலாம். அதாவது, எயார்ஃபில்டரில் அடைப்பு இருக்கலாம் ஃப்யூல் இன்ஜெக்டர்கள் அழுக்கடைந்து காபன் படிமங்கள் அளவுக்கதிகமாக சேர்ந்து அடைப்பை ஏற்படுத்தியிருக்கலாம். இதனால் எரிபொருள் ஒழுங்காக எரியாமல் இருக்கலாம். மேலும், கரும்புகை வருவதற்கு இன்னும் பல காரணங்கள் இருக்கின்றன. இன்ஜின் ஓவர்லோட் ஆகும்போது, ஃப்யூல் இன்ஜெக்ஷன் சிஸ்டத்தின் செட்டிங் தவறாக இருக்கும்போது, கம்பஷன் சேம்பர்களில்,

## மோட்டார் மன்னன் பக்கம்



எக்ஸாஸ்ட் வால்வுகளில் அளவுக்கதிகமான காபன் படிமங்கள் படியும்போது, பிஸ்டன் ரிங்குகள் இயங்காமல் ஸ்ட்ரக் ஆகி நிற்கும்போது... என்று காபன் டெபொஸிட்கள்தான் இதற்குப் பெரும் காரணமாக இருக்கின்றன. இவை தவிர, இன்ஜின் ஓயில் விஸ்காஸிட்டி (அடர்த்தி) தன்மை குறைவதாலும், கரும்புகை ஏற்படும். ஃப்யூல் இன்ஜெக்ஷன் மோட்டார் சைக்கிள் என்றால், இவற்றையெல்லாம் தாண்டி இன்ஜெக்ஷன் டைமிங், ஸ்பார்க் டைமிங்கில் வேறுபாடு இருந்தாலும் இது நடக்கும்.

### வெள்ளைப் புகை

ஒரே குடும்பம்தான் என்றாலும், கறுப்புக்கும் வெள்ளைக்கும் காரண வேறுபாடுகள் உண்டு. மழை நேரங்களில் இந்த வெள்ளைப் புகையை நாம் அடிக்கடி காணலாம். ஏர் இன்டேக் என்பது எரிபொருளையும் காற்றையும் உள்ளிழுக்கும் அம்சம். இந்த ஏர்டேக் எதிர்பாராதவிதமாக தண்ணீரையும் உள்ளிழுத்து, இன்ஜினுக்குள் நுழையும்போது வெள்ளைப் புகை ஏற்படலாம். இதனால், எரிபொருள் சரியாக எரியாமல் எக்ஸாஸ்ட்டில் அப்படியே 'ராவாக' தங்கிவிட வாய்ப்பு உண்டு. சில நேரங்களில் க்ராங்க்ஷாஃப்ட்டுக்கு அடியில் வேலை செய்யும் இன்ஜின் ஓயில், கம்பஷன் சேம்பரைத் தாண்டி இன்ஜின் ஹெட்டில் வழிந்தாலும் வெள்ளைப் புகை வரலாம். வெள்ளைப் புகைக்கு இன்னொரு முக்கியமான காரணம், லோ சிலிண்டர் கம்ப்ரஷன். அதாவது, 100 சதவிகிதம் காற்றும் எரிபொருளும் கலந்த கலவை சரியாக எரியாமல் இருப்பது. இந்த 'லோ சிலிண்டர் கம்ப்ரஷன்' மிகவும் ஆபத்தான விடயம். இது வால்வுகளில் லீக்கேஜ், பிஸ்டன் ரிங், சிலிண்டர் கிளேஸ்களில் பாதிப்புகள் போன்றவற்றை ஏற்படுத்தி விடும். குளிர்காலங்களில் வாகனத்தை ஸ்டார்ட் செய்யும்போது வெள்ளைப் புகை வந்து, இன்ஜின் வார்ம்-அப் ஆன பிறகு அது மறையலாம். இது பெரிய பிரச்சினை இல்லை என்றாலும், பிஸ்டன் ரிங்குகள் மற்றும் சிலிண்டர் கிளேஸிங்குகளைச் சுற்றிய காபன் கறைகள் கவனம்.

### எப்படி?

சேவிஸ் விடும்போது ஓயில் ஃபில்டர், ஏர்ஃபில்டர், கார்புரேட்டர் ஃப்யூல் இன்ஜெக்டர் போன்றவற்றைச் சுத்தம் செய்திருக்கிறார்களா என்பதில் ஒரு கண் இருக்கட்டும். மோட்டார் சைக்கிளில் எப்போதாவது ஸ்பார்க் ப்ளக்கும் சிக்கலைக் கொடுக்கலாம். எனவே, எப்போதும் கூடுதலாக ஒரு ஸ்பார்க் ப்ளக்கை கையில் வைத்திருங்கள். மோட்டார் சைக்கிள் அல்லது கார் எதுவாக இருந்தாலும் சரி எப்போதுமே ஓவர்லோட் அடிப்பதைத் தவிர்த்துவிடுங்கள். குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் சேவிஸ் பண்ணுகிறீர்களோ இல்லையோ, இன்ஜின் ஓயில் மட்டுமாவது தவறாமல் மாற்றிவிடுங்கள். ஃப்யூல் இன்ஜெக்ஷன் என்றால், நிச்சயம் ECU-வில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அர்த்தம். இதை சேவிஸ் சென்டரில் செக் செய்து கொள்ளத் தவறாதீர்கள். கார்புரேட்டர் என்றால், ட்யூனிங் முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு

"ஆண்டவனின் தோட்டத்திலே அழகு சிரிக்குது, ஆகாயம் பூமி எங்கும் இளமை சிரிக்குது, வேண்டு மட்டும் குலுங்கி குலுங்கி நானும் சிரிப்பேன், அந்த விதியைக்கூட சிரிப்பினாலே விரட்டி அடிப்பேன்"

திரைப்பாடல்

அடுத்த சந்ததிக்கு ஒரு நல்ல பரிசு வழங்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் எனக்கு வழங்கப்பட்டால் அது ஒவ்வொரு தனிமனிதனும் சிரிக்கும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற பயிற்சியினைப் பெறும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதாகவே இருக்கும் என்றார் சாள்ஸ் ஷுள்ஸ்.

அன்பின் வரவேற்புரை சிரிப்பு, அவசர உலகின் இடைக்கால நிவாரணி சிரிப்பு, நோய்களை விரட்டும் இயற்கை மருத்துவம் சிரிப்பு என்கிறார்கள் சிரிப்பின் சிறப்பை ஆராய்ந்த சிந்தனையாளர்கள்.

அவலங்களிலிருந்து சிறிது விடுபட சிரிப்பு உதவுகிறது. எதிர்பார்த்து வற்வேற்கப்படும் கோடை காலத்து மழைபோல் நகைச் சுவை திடீரென உலகையும் காற்றையும் உங்களையும் தூய்மைப்படுத்தி குளிர்மைப்படுத்தி விடும். லோங்ஸ்ரன் ஹஜஸ் என்பவரது கருத்து இது.

"சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது இதயத்தின் இன்னசை"என்றார்ஜேம்ஸ்துபரி

''பெரிய பிரச்சினைகளுக்கு சிறந்த முடிவுகளைக் காண சிரிப்பு உதவுகிறது''என்றார் ரோமானிய கவிஞர் ஹொரேஸ்.

அழுவது எப்படி என்று பிறந்த நேரம் கொண்டே தெரிந்து வைத்திருக்கிறான் மனிதன். சிரிப்பதற்குத்தான் கொஞ்சம் பயிற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

மார்க்ஸ் பாலன் பேர்க் என்பவரது கருத்து இது.

ஒரு நாளேனும் கவலையில்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே.

சிரிக்கும்போது நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. பல தொற்று நோய்களிலிருந்துகூட இது நம்மைப் பாதுகாக்கின்றது என இது தொடர்புடைய சிந்தனையாளர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்கள்.

ஒரு நிமிடத்தில் சிரிக்கும் சிரிப்பு என்பது பத்து நிமிடங்கள் துடுப்பு வலிப்பதற்குச் சமம். டாக்டர் வில்லியம் ஃப்ரையின் கணிப்பு இது.

"சிரிப்புத்தான் மனிதனின் ஒரே எதிர்ப்புணர்ச்சி. அதிகாரத்தை எதிர் கொள்வதற்கு சிரிப்பைத் தவிர வேறு வழிகள் இல்லை"என்கிறார் மிலன் குந்தேராஎன்பவர்.

"அடக்கியொடுக்கப்பட்ட உணர்ச்சிகள் சிரிப்பின் மூலம் விடுவிக்கப்படுகின்றன" என்கிறார் உளவியலாளர் சிக்மண்ட்ஃப்ரெய்ட்

''சிரிப்பு படை எடுத்து வரும் போது எதுவும் எதிரில் நிற்க முடியாது'' என்பது மார்க்ட்வெய்ன் என்பவரது கருத்து.

என் வாழ்வில் எனக்கு மிக அதிகமான துன்பங்கள் இருக்கின்றன. ஆனால் அவை என் உதடுகளுக்குத் தெரியாது. இவை எப்பொழுதும் சிரித்துக் கொண்டேயிருக்கும் என்கிறார் வார்த்தைகளைப் பேசாமலே பிறரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த சார்லி சப்ளின்.

''துன்பவாழ்விலும் இன்பம் காணும் விந்தை புரிவது சிரிப்பு... மனக்கவலையைப் போக்கி மூளைக்குத்தரும் சுறுசுறுப்பு...''என்கிறார் சிரிப்பின் சிறப்பை சீர்தூக்கிப் பார்த்து நகைச்சுவையால் நாட்டுக்கு சேவை செய்து முன்வந்த என். எஸ். கிருஷ்ணன்.

சிரிக்க வைப்பதும் ஒரு உதவி செய்வது போலத்தான் என்பது அவரது அபிப்பிராயம்.

துன்பமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவன் தெரிந்து கொள்ளவேண்டும். முடிந்தால் அமைதியான சிரிப்பின் இரகசியத்தைக் கற்றுக் கொடுங்கள் என்று ஆபிரஹாம் லிங்கன் தனது மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

அற்புதமானது எது என்றால் ஒருத்தன் மனம்விட்டுச் சிரிப்பது அவன் சிரிப்பதற்குக் காரணம் நீங்கள் தான் என்றால் அது அதைவிட அற்புதமானது என்கிறார் இதுபற்றி ஆராய்ந்த ஆராய்வாளர் ஒருவர்.

சிரிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் தாராளமாகவே சிரியுங்கள். இது ஒரு மலிவான அருமருந்து. வாழ்வதற்குத் தேவையான ஒரு ஆதாரமான, ஆதரவான உகந்த சூழலை இது ஏற்படுத்தித் தந்து விடுகிறது என்கிறார் ஜோர்ஜ் கோர்டன் பைரன் என்பவர்.

நகை ஈகை இன்சொல் இகழாமை என நல்வாழ்வுக்குத் தேவையானவற்றை வகைப்படுத்தி வகுத்து சிரிப்புக்கு முதன்மை இடம் தந்து மேன்மைப்படுத்திய வள்ளுவர்

"இடுக்கண் வருங்கால் நகுக..." என்ற அரிய அர்த்தமுள்ள ஆலோசனையையும் வழங்கி வலுச்சேர்த்துள்ளார். சிரிப்பின் மகத்துவம், பெருமை பற்றி இது தொடர்பான சிந்தனையாளர்கள் இவ் வாறெல்லாம் சிறப்பித்துக் கூறியுள்ளதை, விபரித்துள்ளதை நாம் பரவலாகக் காண முடிகிறது.

இதேபோன்று தமிழ்த்திரை கானங்களிலும் சிரிப்பு ஒன்றிக் கலந்து இசைந்து மனதை இன்புறச் செய்து கொண்டிருக்கிறது. மனதில் ஊஞ்சலாடும் கவிதை வரிகளில் ஆங்காங்கே இதனைக் கேட்க முடிகிறது.

''என்னதான் ரகசியமோ இதயத்திலே...? நினைத்தால் என க்கே சிரிப்பு வரும் சமயத்திலே..."

"சிரிப்புத்தான் கவலைக்கு மருந்து..."சிரிக்கத் தெரிந்தால் போதும் துயர் நெருங்காது நம்மை ஒரு போதும்..."

"சிரித்தாலும் போதுமே செவ்வானம் தோன்றுமே..."

"செவ்வானத்தில் ஒரு நட்சத்திரம் சிரித்தது எனைப் பார்த்து..."

"ஏன் சிரித்தாய் என்னைப் பார்த்து? உன் எழில் தனைப் பாடவா தமிழைச் சேர்த்து..."

"பார்த்தேன் சிரித்தேன் பக்கம் வரத் துடித்தேன் உனக்கே என நான் நினைத்தேன் அந்த மலைத் தேன் இவரென மலைத்தேன்..."

''ஒரு அழகுப் பெட்டகம் புதிய புத்தகம் சிரிக்கும் பந்தலிலே..."

''பெண்ணல்ல [illegible] ஊதாப்பூ சிவந்த [illegible] ரோஜாப்பூ சிரிப்பு மல்லிகைப் பூ..."

''கண்கள் காணும் கனவிலே உன்முகம் இருக்கும் காற்றால் ஆடும் ரோஜாப்போல் சிவந்தே சிரிக்கும்..."

"காலையில் மலரும் தாமரைப் பூ அந்திக் கருக்கலில் மலரும் மல்லிகைப்பூ இரவில் மலரும் அல்லிப்பூ அவள் என்றும் மலரும் முல்லைப்பூ..."

"முல்லைப் பூ மணக்குது முத்தைப் போலச் சிரிக்குது அள்ளி அள்ளி வாசத்தேனை இளம் தென் றல் வீசுது..."

"சிரித்திருக்கும் முல்லையைத் தென்றல் தீண்டிச் சிலிர்க்க வைக்கும்..." என்றார் கவிஞர் பெ.வரதராசனார்.

தொடரும் திரை கானங்கள்

"மலரோடு விளையாடும் தென்றலே வாராய் என் மனம் குளிர இன்பமே தாராய்..."

''சங்கீதத் தென்றலிலே சதிராடும் பூங்கொடியே சந்தோசம் காண உள்ளம் நாடுதே..."

''செந்தமிழ்தேன் மொழியாள் நிலாவெனச் சிரிக்கும் மலர்க் கொடியாள்..."

"பொன்வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத நான் வளை கொண்ட கையாலே மெதுவாக மூட..."

"மலர் என்ற முகம் இன்று சிரிக்கட்டும் மனம் என்ற கருவண்டு பறக்கட்டும் உலகத்தை ஒருமுறை மறக்கட்டும்..."

''செங்கனிவாய் திறந்து சிரித்திடுவாய் தித்திக்கும் தேன் குடமே செண்பகப் பூச்சரமே..."

''பார்த்தால் பசிதீரும் பங்கஜ வதன செங்கனி வாய்ச்சிரிப்பைப் பார்த்தால் பசி தீரும்..."

"முத்து முத்தாய் சிரிப்பதற்கே பாடம் வேண்டுமா? முத்தமிழே முழு நிலவே மோக வண்ணமே முப்பொழுதும் எப்பொழுதும் நமது சொந்தமே..."

"சின்ன அரும்பு மலரும் சிரிப்பைச் சிந்தி வளரும் கண்கள் அந்தக் காட்சி கண்டு களிக்கும் நாள் வரும் மகிழும் நாள் வரும்..."


''கரும்புதிர முத்துதிர அழகு சிரிக்கு கரும்பு முகம் கண்டவுடன் கவலை பறக்குது..."

"நீ சிரித்தால் நான் சிரிப்பேன் சிங்காரப் பெண்ணே நீ அழுதால் நான் அழுவேன் மங்காத பொன்னே எட்டி எட்டி வட்ட நிலா உன்னைப் பார்க்குது உன் எச்சில்பட்ட சோத்தை அது தனக்குக் கேட்குது கஷ்டமாக சீக்கிரம் நீ சாப்பிடு அம்மா –அந்த சந்திரனை விளையாடக் கூப்பிடு அம்மா..."

"முத்திரை பசும்பொன்னே ஏனிந்தச் சிரிப்பு? முகமோ மலரோ இது என்ன ரசிப்பு? மின்னொளி வீசும் உன் எழில் கண்டால் வேறென்ன வேண்டுமடா...?"

''காதல் கார்த்திகை திருநாள் மனம் கலந்தால் மார்கழித் திருநாள் சேர்ந்து [illegible] திருநாள் [illegible] சிரித்தும் [illegible]..."

"சிரிக்காத வாயும் சிரிக்காதோ? அந்த திருநாளைக் கண்டு மகிழாதோ? சிரிப்பில் உண்டாகும் ராகத்திலே பிறக்கும் சங்கீதமே..."





சிரிப்பில் பலவித ரகங்களைப் பார்க்க முடிகிறது.

வெள்ளை மலர்ச் சிரிப்பு , பால் போல் சிரிப்பு, குங்குமப் பூப்போல் சிரிப்பு,வெள்ளரிக்காய் பிளந்தது போல் சிரிப்பு பாழைபோல் சிரிப்பு, செம்மாதுளை பிளந்ததுபோல் சிரித்து வரும் சிரிப்பு, கொட்டும் அருவி போல் சிரிப்பு, சிரித்த சிரிப்பொலி சிலம்பொலிதான்.

சிரிப்போ முல்லை விரிப்போ? பூக்களெல்லாம் சிரிப்பதைத் தந்தது. இவ்விதமெல்லாம் சிரிப்பு அழகழகாக விபரிக்கிறது அழகுற விபரிக்கப்படுகிறது.

''ஆற்றங்கரை தனிலே தனியானதோர் மண்டப மீதினிலே தென்றல் காற்றை நுகர்ந்திருந்தேன் கன்னி கவிதை கொணர்ந்து தந்தாள் ஏற்று மனமகிழ்ந்தே அடி என்னோடிணங்கி மணம்புரிவாய் என்று சாற்றிய போதினிலே விழிக்கோணத்திலே நகை காட்டி மறைந்து விட்டாள்"

நகையை இவ்வித கோணத்தில் பார்த்தார், பார்க்க வைத்தார் பாரதியார்.

பிரபல இசைக் கலைஞர் சிதம்பரம் வை.ஜெயராமன் வீட்டு முற்றத்தில் "பதநீர் அருந்துக" என்ற வாசகம் எழுதப்பட்ட ஒரு வான் நின்று கொண்டிருந்தது.

திருவாளர்கள் சி.என்.அண்ணாத்துரை, இரா.நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி ஆகியோர் அப்போது ஜெயராமனின் இல்லத்திற்குச் சென்றிருந்தார்கள். கலைஞர் கருணாநிதி வானின் வாசகம் பற்றி விசாரித்த போது நகர சபையினர் தமது பாவனைக்காக எடுத்துச் சென்றதாகவும் பணி முடிவுற்றதால் திருப்பி ஒப்படைத்துள்ளதாகவும் விபரம் தெரிவித்தார் ஜெயராமன்.

கலைஞர் கருணாநிதி ''வாசகத்தை அழித்து விடாதீர்கள் வாசகத்துக்கு முன்னால் சரிகம என்ற வார்த்தைகளைச் சேர்த்து விடுங்கள்'' என்று தமக்கே உரிய பாணியில் ஆலோசனை வழங்கினார்.

''சரிகம பதநீர் அருந்துக'' எல்லோருமே சேர்ந்து ரசித்தார்கள்.

"சங்கீத சௌபாக்யமே என்றும் குன்றாத பெரும் பாக்யமே..." என்ற அற்புதமான இன்னிசை கானத்தை பாடியவர் சிதம்பரம் ஜெயராமன்.

"இசை கலந்த இனிய நினைவு இசைப்பாடலிலே என் உயிர்த் துடிப்பு நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு..."

"செங்கதிரால் தாமரைகள் சிரித்திருக்கும் சேர்மதியால் அல்லி மலர் வாய்சிரிக்கும் பொங்கிவரும் மழை வரவால் பயிர் சிரிக்கும் பொய்யாத மொழிக்குறளால் புலம் சிரிக்கும் துங்கமுறச் சிரித்திருக்கும் அறிவால் ஆய்ந்து தூயனவன் கொல் வழியில் பொதுமை காண இங்கினி நாம் முயலுவமேல் புதுமை பூக்கும்" என்றார் மலர்வண்ணன் என்ற கவிஞர்.

"ஆயிரம் மலர்களே மலருங்கள் அமுதகீதம் பாடுங்கள் பாடுங்கள் வானிலே வெண்ணிலா வந்து வந்து வளரலாம் மனதில் உள்ள கவிதைக்கோடு மாறுமா...?"

''மூளை முன்மொழிய முகம் முடிவெடுக்க உதடுகள் ஒத்துக் கொண்டு வாய்வழி அனுப்பும் அற்புத மலர் சிரிப்பு... சிநேகத்தின் வரவு சிரிப்பு... சிந்தனையின் முதிர்ச்சி சிரிப்பு...அன்பின் வரவேற்புரை சிரிப்பு...அவசர உலகின் இடைக்கால நிவாரணி சிரிப்பு...நோய்களை விரட்டும் இயற்கை மருத்துவம்... சிரிப்பில் சிக்கனமா? சிரித்துச் சிரித்து உங்களுக்கு நீங்களே மருத்துவம் பாருங்கள்'' என்கிறார் மற்றொரு கவிஞர்.

"உற்சாகம் கலந்த சந்தோசமானதொரு சூழ்நிலையில்தான் எல்லாமே செழிப்படைந்து வளர்ச்சி பெறுகின்றன'' என்றார் ஜீன்போல் றிச்றர்.

''ஒரு ஆண்டின் ஒவ்வொரு ஷணத்திலும் அதற்கேயுரித்தானதொரு அழகு இருந்து கொண்டு தானிருக்கிறது'' என்று அனுபவித்துச் சொன்னார் எமர்சன்.

அழகின் சிரிப்பு

எங்குமே ஆனந்தம் ஆனந்தமே ஜீவனின் மகரந்தம்...

"மகிழ்ச்சியுடன் குயிலினங்கள் கூவும்; அந்த மாந்தோப்பில் குளிர் தென்றல் மெல்ல வீசும்! மகிழ்ச்சியுடன் செடி கொடிகள் ஆடும்; அங்கு மலர்ந்திருக்கும் பூக்களின் மே[illegible] வண்டு தாவும்! மகிழம்பூ மணமெங்கும் தோயும்; பூக்கள் வளைந்தாடிக் காற்றோடு மெல்லச் சாயும்! துகில் விரித்த காட்சியைப் போல் நிலவு தோயும்; சோலையெங்கும் ஒளிசிந்தி மகிழ்ச்சி நல்கும்!"என கவிதை சொல்கிறார் கவிஞர் பெ.வரதராசன்.

மலரோடு விளையாடும்
தென்றலே வாராய்
மனம் குளிர இன்பமே தாராய்
தென்றல் வந்து வீசாதோ
தெம்மாங்கு பாடாதோ...?

காணும் காட்சி யாவும் வண்ணக் கோலம் தான்

"நீலக்கடல் அலை மோதி வருகையில் நெஞ்சம் பறிகொடுத்தேன் இங்கு கோடி அலைகள் என் நெஞ்சில் எழுவதை யாரிடம் போயுரைப்பேன்..?"

(திரைப்பாடல்)

இன்பம் எங்குமிங்கே ஆட்சி புரியுது இயற்கையிலே யாவும் இணைந்தாடுது ஜீவசுகம் தேடுது... எத்தனை எத்தனை இன்பங்கள் நெஞ்சினில் பொங்குதம்மா? பல் சுவையும் சொல்லுதம்மா... புதிய உணர்வலைகள் பொங்கி இசைபாடுதே...எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா, இறைவா...?'' என பிரமிப்புடன் பரவசமடைந்தார் பாரதியார்.

''இன்று நமதுள்ளமே பொங்கும் புது வெள்ளமே...கண்ணிலே ஊறும் நீரும் இனி நம் நிலை காண மாறும்சுகம் கவிதை பாடிவரும்"என்று கவிதையில் சுகம் கண்டார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

சிரிக்கின்றோம் இன்று சிரிக்கின்றோம். சிந்திய கண்ணீர் மாறியதாலே சிரிக்கின்றோம் இன்று சிரிக்கின்றோம் சேர்ந்தே சிரிப்போம் சேர்ந்தே மகிழ்வோம்.

க.கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வனமகன்

## திரைவிமர்சனம்

தொடர்ந்து வெற்றிப் படங்களாக கொடுத்து வரும் ஜெயம் ரவி இந்த படம் தொடங்கியதிலிருந்தே எதிர்பார்ப்பை தூண்டிவிட்டார். மேலும் இயக்குனர் ஏ.எல்.விஜய்யும் சமீபத்தில் பெரும் ஹிட் கொடுத்தவர்.

இருவரின் கூட்டணியில் வெளிவந்திருக்கும் வனமகன் வெற்றிப்படமாக இருவருக்கும் கைகொடுக்குமா என பார்ப்போம். வாருங்கள் வனத்திற்குள் செல்வோம்.

அந்தமான் தீவுகளில் வாழும் மலைவாழ் பழங்குடி இனத்தை சேர்ந்தவரான ஜெயம் ரவி கதையின் நாயகன். இவரை சார்ந்த மக்களுக்கு சிலரால் இடைஞ்சல்கள் வருகிறது. ஒரு கட்டத்தில் இது பெரிதாக பெரும் ஆபத்தாக மாற கதை சூடுபிடிக்கிறது.

பெரிய தொழிலதிபரின் மகளாக வரும் ஹீரோயின் சாயிஷா தன் அப்பாவின் நண்பரான பிரகாஷ்ராஜின் பராமரிப்பில் வாழ்கிறார். தமிழுக்கு புதிது என்றாலும் கொஞ்சம் கிளாமர், கூடுதல் நடிப்பு என அசத்தியிருக்கிறார். தன் நண்பர்களுடன் அந்தமான் சுற்றுலா செல்லும் போது அங்கு எதிர்பாராத விபத்து நேர்கிறது.

இதில் எப்படியோ ஜெயம் ரவி மாட்ட இவரை சென்னைக்கு அழைத்து வருகிறார்கள். பின் ஜெயம் ரவியின் விஸ்வரூபம் வெளிப்பட ஒரே அமர்க்களம் தான்.

காட்டுவாசியான அவரை எப்படியோ அடக்கி சாயிஷா தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறார். பின் ஹீரோயினுக்கு தெரியாமல் ரகசிய நிச்சயதார்த்தம் ஏற்பாடு செய்யப்பட அங்கு நடப்பதே வேறு.

இந்த கலவரத்தில் ஜெயம் ரவி பொலிஸ் வலையில் சிக்குகிறார். அவரை பொலிஸ் கைது செய்ய காரணம் என்ன, பழங்குடி இன மக்களின் நிலை என்னானது , ஹீரோ சாரா என்ன ஆனார், சாயிஷாவுக்கு பார்க்கப்பட்ட மாப்பிள்ளை யார் என்பதே மீதிக் கதை. ஜெயம் ரவியின் நடிப்பு வனமகனாக மாறிவிட்டார் என்றே சொல்லலாம்.

கண்கள் மட்டுமல்ல, உடல் மொழியில் அவர் செய்யும் அசைவுகள் காட்டுவாசியென பிரதிபலிக்கிறது. கதைக்காக ரிஸ்க் எடுத்திருக்கிறார் என்பது படத்தில் நன்றாகதெரிகிறது.

ஹீரோவை கண்டாலே அலறி ஓடும் ஹீரோயின் ஒரு கட்டத்தில் வாசி வாசியென ஜெயம் ரவியை சுற்றுகிறார். கதை முழுக்க இவரும் பயணம் செய்கிறார்கள். ஒப்பனிங் முதல் எண்டிங் வரை இவரை அழகாக காட்டியிருக்கிறார்கள்.

கும்கி, கடம்பன் என காடுகளை சார்ந்த படங்கள் ஏற்கனவே வந்தாலும் இதில் வித்தியாசத்தை காட்டி தனித்துவம் பெறுகிறார் இயக்குனர் ஏ.எல்.விஜய். அவர் மீதான நம்பிக்கையை தளரவிடாமல் படத்தை நகர்த்தியிருக்கிறார்.

காட்டில் தொடங்கி நகரம் சென்று மீண்டும் வனத்தை நோக்கி படை எடுத்து மெசேஜ் சொல்கிறார். காமெடியான தம்பி ராமையா அவருடைய ஸ்டைலை அப்படியே காட்டியிருக்கிறார். இவரும் ஹீரோயினும் சேர்ந்து காமெடி செய்கிறார்கள். ஆனாலும் சில இடங்களில் ரவியால் காமெடிகள் உண்டாகிறது.



படத்தின் வில்லன் யார் என்பது கடைசியில் தான் தெரியும். பிரகாஷ் ராஜ் சில இடங்களில் வந்தாலும் தான் சீனியர் என்பதை நடிப்பில் காட்டியிருக்கிறார். ஜெயம் ரவியுடன் போகன் படத்தில் நடித்த வருண் இந்த படத்தில் ஒரு செகண்ட் ஹீரோ போல. ஆரம்பத்தில் இவர் தான் வில்லனோ என தோன்றும்.

இயக்குனர் விஜய் கதையை கொண்டு சென்றவிதம், கிளைமாக்ஸ் ட்விஸ்ட். கடைசி வரை வனமகனாகவே வாழ்ந்த ஜெயம் ரவியின் நடிப்பு. படம் ரிலீஸ்க்கு முன்பே அதிக வாய்ப்புகளை அள்ளிய ஹீரோயின் பற்றி இனி என்ன சொல்ல.


பின்னணி இசையை பன்னீர் போல சரியாக தெளித்திருக்கிறார் ஹாரிஷ் ஜெயராஜ். ஒரு இடத்தில் ஹீரோ காட்சியில் லாஜிக் இடிக்கிறது. உங்களுக்கே அது தெரியும். கதையை இன்னும் கொஞ்சம் சீக்கிரம் முடித்திருக்கலாமே என தோன்றுகிறது.

ஹாரிஷ் ஜெயராஜ் மீதான எதிர்பார்ப்பு பூர்த்தியாகவில்லை. மொத்தத்தில் வனமகன் மண்ணின் மகன் தான். அனைவரும் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோலி ஏன் சொதப்புகிறார்?




சம்பியன்ஸ்டிராஃபி தோல்வி, பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து கும்ப்ளே விலகல், ஹோலியின் கப்டன்ஸி மீதான நம்பிக்கையின்மை என மீண்டும் சர்ச்சைகளுக்குள் வந்து விழுந்திருக்கிறது இந்திய கிரிக்கெட் அணி. பயிற்சியாளரான ஒரே ஆண்டில் பதவியில் இருந்து விலகியிருக்கிறார் அனில் கும்ப்ளே.

என்னுடைய 'ஸ்டைலில்', நான் பயிற்சியாளராகத் தொடர்வதில் கப்டனுக்கு மாற்றுக்கருத்துகள் இருப்பதாக பி.சி.சி.ஐ .என்னிடம் சொல்லியிருக்கிறது. முரண்பாடுகளைக் களைய பி.சி.சி.ஐ. எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துவிட்ட நிலையில் நான் பதவி விலகுகிறேன்' என அறிவித்திருக்கிறார் கும்ப்ளே.

இதே கும்ப்ளே கடந்த ஆண்டு இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றபோது, ஹோலியின் ஆக்ரோஷ அணுகுமுறை எனக்குப் பிடித்திருக்கிறது. நானும் ஆக்ரோஷமானவனே. ஆனால், களத்தில் இதனை நாங்கள் எதிர்கொள்ளும் விதம் வித்தியாசமாக இருக்கும்.

ஆக்ரோஷமாகச் செயற்படுவதற்கும், எல்லை மீறுவதற்கும் இடையே ஒரு சிறு இடைவெளிதான் இருக்கிறது என்பதை இருவருமே அறிவோமென்றார். கும்ப்ளே வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், இந்த ஓர் ஆண்டு இடைவெளியில் நடந்திருப்பது இரு




தரப்பிலுமான எல்லைமீறல் தான்.

பயிற்சியாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எந்த இலக்கணமும் கிடையாது. அதே சமயம் பயிற்சியாளர் என்பவர் பி.டி. மாஸ்டர்களைப்போல இருக்க முடியாது என்பதே கிரேக் சேப்பல் காலகட்டம் சொல்லித் தந்த பாடம். அந்தப் பாடம் இவர்களுக்குப் புரியவில்லை என்பதால் வந்த சோதனைதான் ஹோலி - கும்ப்ளே பிரிவு.

உண்மையில் ஹோலி - கும்ப்ளேவுக்கு இடையேயான இந்தப்பிரச்சினை இரு தலைமுறைகளுக்கான இடைவெளியும், யார் சொல்வதை யார் கேட்பது என்கிற ஈகோ மோதலும்தான். நாங்கள் செய்வதுசரி... எங்களிடம்கோபப்பட யாருக்கும் உரிமையில்லை. வெற்றியோ, தோல்வியோ நாங்களே எங்களைச் சரிசெய்து கொள்வோம்.

எங்களுக்கு பாஸ்க்மாஸ்டர்கள் தேவையில்லை' என்கிற தலைமுறையைச் சேர்ந்தவர் ஹோலி. மறுபக்கம், ஒழுங்கு, ஒழுக்கம், ட்ரெய்னிங், கீழ்ப்படிதல்' என்கிற தலைமுறையைச் சேர்ந்தவர் கும்ப்ளே. இரண்டு அணுகுமுறையிலும் தவறில்லை. அதை எக்ஸிக்யூட் செய்வதில்தான் இரண்டு தலைமுறைகளும் மோதிக் கொண்டிருக்கின்றன.

ஹோலி எவ்வளவு ஆக்ரோஷமானவரோ, அதே அளவுக்கு உஷ்ணமானவர் கும்ப்ளே. தன்னுடைய பௌலிங்கின்போது யாராவது களத்தடுப்பில் சொதப்பினால், டென்ஷன் ஆவார் கும்ப்ளே. ஆனால், இப்போதைய தலைமுறையோ, அடுத்த மேட்ச்ல பார்த்துக்கலாம்' என ஈஸியாகக் கடக்கும் தலைமுறை. இங்குதான் பிரச்சினையே. ஒருவரின் அணுகுமுறையை இன்னொருவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

2007ஆம் ஆண்டு இந்திய அணியின் கப்டன் பதவி எனக்குக் கிடைத்தது. கிட்டத்தட்ட 17 ஆண்டுகள் இந்திய அணியில் விளையாடியபிறகே எனக்கு கப்டன் பதவி கிடைத்தது. அதுவும் கப்டன் பதவிமீது அப்போது யாருக்கும் விருப்பம் இல்லாததால்தான், என்னால் அதைப் பெற முடிந்தது" என்று, தான் கப்டனான கதையை முன்பு சொல்லியிருக்கிறார் கும்ப்ளே.

ஹோலி கப்டன் ஆனதற்குப் பின்பு இப்படிப்பட்ட பின்னணிக் கதைகள் எதுவும் இல்லை. ஹோலியின் பட்டிங்கின் மீது யாருக்கும் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், ஒரு சிறந்த கப்டனாகத் தகுதிகளை வளர்த்துக்கொள்வதற்கு முன்பாகவே கப்டனாகிவிட்டார் ஹோலி.

2014ஆம் ஆண்டின் இறுதியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் பாதியில் கப்டனாகப் பொறுப்பேற்றார் ஹோலி. அப்போது இந்திய அணிக்குப் பயிற்சியாளர் கிடையாது.

ரவி சாஸ்திரி அணியின் இயக்குநராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். டோனி தொடரின் பாதியிலேயே கப்டன்ஷிப் பொறுப்பில் இருந்து விலகியதற்கும், ஹோலி பொறுப்பேற்றதற்கும் சாஸ்திரியே காரணம். 2016 ஜூலை வரை கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் பயிற்சியாளரே இல்லாமல், ரவி சாஸ்திரியின் தலைமையில் இயங்கி வந்தது இந்திய அணி. ரவி சாஸ்திரி பயிற்சியாளராவோ, அணியின் இயக்குநராகவோ இல்லாமல் அணிக்குள் ஒருவராக, ஹோலியின் நண்பராகவே இருந்தார். அதனால்தான், கடந்த ஆண்டு பயிற்சியாளரை நியமிக்க டெண்டுல்கர், கங்குலி, லக்ஷ்மண் தலைமையில் குழு அமைக்கப்பட்டபோது, பயிற்சியாளரே தேவையில்லை. சாஸ்திரியே போதும்" என்றார் ஹோலி. ஆனால், டெண்டுல்கர் தலைமையிலான குழு கும்ப்ளேவைப் பயிற்சியாளராக நியமித்தது. 2019 இங்கிலாந்து உலகக்கோப்பை வரை கும்ப்ளே பயிற்சியாளராக இருக்க வேண்டும் என்பதே இந்த மூவர் குழுவின் விருப்பம்.

ஆனால் இந்த மூவரும் செய்யத் தவறியது பயிற்சியாளர் என்பவர், சாஸ்திரியைப்போல் ஒரு நண்பராக இருக்க வேண்டும் என நினைக்காமல், பயிற்சியாளர் என்பவர் கண்டிப்பானவராக இருக்க வேண்டும்' என நினைத்ததே.

**ஹோலி துணிச்சலானவரா?**

ஹோலியின் அட்டிடியூட் எப்போதுமே விவாதப்பொருள் தான். துணிச்சலானவராக, ஆக்ரோஷமானவராக, அதிரடியானவராக களத்தடுப்பில் இருப்பார் ஹோலி. ஆனால் இது எல்லாமே ஃபீல்டிங் செய்யும்போதுதான். கப்டனாக ஹோலி துணிச்சலானவரா, அதிரடியானவரா என்றால், இல்லை என்பதே பதில். ஒரு செட்டான போர்மேட்டிலேயே பயணிப்பார் ஹோலி. இரண்டு ஸ்பின்னர், இரண்டு அல்லது மூன்று வேகப்பந்து வீச்சாளர், இரண்டு ஓல் ரவுண்டர் எனப் பல ஆண்டுகாலமாகப் பின்பற்றப்படும் பழைய போர்முலாவையே இன்னமும் பின்பற்றுபவர் தான் ஹோலி.

அதிரடியாக அணி வீரர்களை மாற்றிப்போட்டுப்பார்க்கும்சோதனை முயற்சிகளை ஹோலி விரும்பமாட்டார். காரணம், அணியில்கன்னா பின்னாவென மாற்றங்களை ஏற்படுத்தினால், அது விமர்சனங்களைக் கிளப்பும் எனப் பயப்படுவார்.

இன்னொரு முக்கியமான விடயம்... ஹோலி கப்டனாக யோசிக்க வேண்டியதைவிட பட்ஸ்மேனாகப் பல வியூகங்களை யோசிக்க வேண்டியிருக்கிறது. அவர் கப்டனாக ரிஸ்க் எடுத்து யோசிப்பதைவிட பட்ஸ்மேனாக அவர் சிந்திக்க அதிக நேரம் வேண்டும். அதனால்தான், அவர் கப்டன்ஸியில் அதிரடி முடிவுகளை எடுப்பதில்லை. அந்த முடிவுகளை மற்றவர்கள் எடுக்கும் போது, அதை அவரால் தாங்கி கொள்ளவும் முடியவில்லை.

கடந்த மார்ச் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்கு டெஸ்ட்தொடர்போட்டியின்கடைசி டெஸ்ட்டில் ஹோலியால் ஆட முடியாத நிலை. ரஹானே கப்டன் ஆனார். இதுதான் நேரம் என ரிஸ்க் எடுக்க விரும்பினார் கும்ப்ளே.

ஹோலியின் இடத்தை சுழற்பந்து வீச்சாளரான குல்தீப் யாதவைக் கொண்டு நிரப்பினார் கும்ப்ளே. அந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அஸ்வின், மிஷ்ரா என சீனியர்கள் தடுமாற, நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தி அவுஸ்திரேலியாவின் பட்டிங்கை சீர்குலைத்தார் குல்தீப்.

குல்தீப்பை அணிக்குள் கொண்டுவந்ததை ஹோலி ரசிக்கவில்லை என்பதோடு தனக்குத் தகவல் சொல்லாமல் ப்ளேயிங் லெவனில் எப்படி மாற்றங்களைக் கொண்டுவரலாம் எனக் கோபப்பட்டார்.

இங்கிருந்துதான் இருவருக்கும் இடையிலான உரசல் உச்சம் தொட்டது. சம்பியன்ஸ் டிராஃபி அணியில்கும்ப்ளே சில வீரர்களைச் சேர்க்க வேண்டும் எனச் சொல்ல, ஹோலி அதை மறுக்க... மோதல் வெளி உலகத்துக்கு வந்தது.

கும்ப்ளே சிறந்த நிர்வாகியாக இருக்கலாம். ஆனால், அவர் சிறப்பான பயிற்சியாளர் இல்லை. அதேபோல் ஹோலி மிகச்சிறந்த பட்ஸ்மேனாக இருக்கலாம். ஆனால், வியூகங்கள் அமைப்பதிலும், நெருக்கடியான சூழலை ஹேண்டில் செய்வதிலும் அவர் சிறந்தவர் இல்லை.


ஹோலிக்கு கப்டன்ஸியை விட தன்னுடைய பட்டிங் முக்கியம் என்பதில் எவ்வளவு கவனம் இருந்ததோ, அதேபோல் அனில் கும்ப்ளேவுக்குப் பயிற்சியாளர் என்பதைவிட பி.சி.சி.ஐ-ல் பல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்பதில் அதிகக் கவனம் இருந்தது.

கும்ப்ளே - ஹோலி இருவருமே இன்னும் மெச்சூர் ஆகியிருந்தால், இந்தச் சூழலே உருவாகாமல் இருந்திருக்கும்! (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

## ஊழ் வினை உறுத்தும்



துப்பாக்கியிலிருந்து தெறிக்க விடப்பட்ட தோட்டா அவனை நோக்கி பாய்ந்தது. காற்றை கிழித்து கொண்டு விரைந்த அந்த தருணத்தில் அவன் அப்படி செய்திருக்க கூடாதுதான். இருந்தாலும் யார் செய்த புண்ணியமோ ஏன் முற்பிறவியில் அவன் செய்த புண்ணியமாக கூட இருக்கலாம். ஒருவேளை தெறித்த தோட்ட கூட அவன் காதருகே டேய் நவுருடா என்றதோ யார் கண்டார்கள்! காலில் சுருக்கென்று கடிக்க, குனிந்தவன் 'அன்று எதிரில் நிற்பவனை பரலோகம் அனுப்பி வைத்தான். வைத்தவன் குறி தப்பியது. இது அடிக்கடி பரம் பொருளுக்கே நடக்கும் போது இவனுக்கு நடவாதா? என்ன!. துப்பாக்கியின் முனையில் இருந்து வெளிப்பட்ட அந்த சூட்டின் புகைச்சல் தான் இப்போது எய்தவனின் நெஞ்சிலும் புகைகிறது.

அது ஒரு நடையாளர் பூங்கா. ஏரி கறையின் ஓரத்தில் அமைந்துள்ள அந்த பூங்காவில் சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு மும்மாரி மழையினால் ஏரியில் தண்ணீர் வழிந்தோடும் மேட்டுக்குடிகள் படகு சவாரி செய்வார்கள். பூர்வகுடிகள் அங்கே மீன்பிடித்து. அவர்களை வேடிக்கை பார்ப்பார்கள். யார் கண்பட்டதோ இல்லை கண்படவில்லை. மனிதனின் கால்பட்டு விட்டது. இருபது ஆண்டுகளில் ஏரி மயானமானது. புதர் மண்ட தொடங்கியது. கயவர்கள் அடைக்கலம் அடைந்தார்கள். வடமதுரையின் கோவா லாஸ்விகாஸ் எல்லாம் அந்த பூங்கா தான். கஞ்சா தொடங்கி கேட்டது கிடைக்காதது என்று எதுவும் அங்கில்லை. இருந்தும் சில வேடிக்கை மனிதர்கள் வாடிக்கையாக நடைபோடுவதுண்டு. ஆகையால் அந்த மாலை வேளையில் அவ்வப்போது இப்படி சில சம்பவங்கள் நடப்பதுண்டு. அதை தவறாமல் இவர்கள் இருவரும் பார்த்து ரசிப்பதுண்டு. என்னடா இது! இப்பலாம் இங்க அடிக்கடி இப்படி நடக்குது என்றான் தேவா.

ஆமாடா இங்க என்னமோ பண்றாய்ங்கடா! என்னானு நம்ம கண்டுபிடிக்கிறோம்" என்றான் சித்தார்த். இது நமக்கு தேவ இல்லாத வேலை.

வேலையே இல்லாமதானே சுத்திட்டு இருக்கோம். அதுக்கு இந்த வேலைய பாப்போம் என நக்கலாக சொன்னான் சித்தார்த். அடுத்த நாள் காலை சித்தார்த் மட்டும் சென்று நோட்டமிட்டான். எட்டு மணி நேர தேடலுக்கு பிறகு அவர்களின் திட்டங்களை ஒருவாறு அறிந்து கொண்டான். அதை தேவாவிடமும் கூறினான். ஆனால் அவன் அதற்கு உடன்படவில்லை. உரையாடல் நீண்டது.

டேய் நம்ம எவ்வளவு கஷ்டத்துல இருக்கோம்னு உனக்கே தெரியும். உனக்கு அப்பா இல்ல எனக்கு இருந்தும் பிரயோஜனமில்ல. நம்மதான் இனி எல்லா பாத்துகனும்.

அவய்ங்க நாளகழிச்சு வைரத்த கடத்த போறாய்ங்க இத மட்டும் நம்ம அடிச்சோம்னா!" என வெறி கொண்டவன் போல பேசினான் சித்தார்த்.

டேய் சித்தா! ஏன்டா உன் புத்தி இப்படி போய்ருச்சு நம்ம பட்டதாரிகள்டா. அதுமட்டுமில்லாம இதலாம் தப்பு! மாட்டுனா நம்மள செதில் செதிலா செதச்சுருவாய்ங்க" என்று நொந்து கொண்டே சொன்னான் தேவா.

ஆமா நம்ம பட்டதாரிகள் தான் வேலைகிடைக்காத பட்டாதாரிகள். உனக்கு ஞாபகமிருக்கா. வேலை கிடைக்காம நீ மெக்கானிக்கல் படிச்சும் இரும்பு பட்டறைக்கு போன நான் நூறு ரூபா சம்பளத்துக்கு ஜல்லி அள்ளி போடுற வேலைக்கு போனேன். ம்ஹூம் எனக்கு சரியா படலை.

இப்போது மிகவும் நிதானமாக சொல்ல தொடங்கினான் சித்தார்த். இங்க பாரு ரொம்ப நல்லவனா இருக்காத, முடிஞ்சா நாலு எதிரிகள சம்பாரி. அப்துல் கலாம எல்லோரும் மறந்துட்டாங்க ஆனா காந்திய இன்னும் ஞாபகம் வச்சுருக்காங்க தெரியும்ல.

நல்லது மட்டும் செய்ய நான் ஒன்னும் புத்தனுமில்ல நீ இயேசுவுமில்ல. ஏன் அவுங்க ரெண்டு பேரும் கூட நல்லவங்க இல்ல. ஏன் தெரியுமா அவங்களுக்கு அடுத்தவன் கஷ்டபடுறத பார்க்க ரொம்ப பிடிக்கும் கஷ்டபடுறத பாக்குறது கடவுளே இல்லதான!

**(அடுத்தவாரம் தொடரும்)**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1119

Search for people, places and things | Nagendram | Home


**ஜனார்த்தனன்**





**கிருபவன்**




**பிரதீஸ்**





**கஜமாறன்**




**ரவிராஜ்**



**கஜயரூபன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 91

## வாழ்வில் வெற்றி பெற்றிட .... 5

எம்மிடம் இருந்தவற்றை நாம் இழந்து விடும் பொழுது வேதனைப்படுகிறோம். கோபப்படுகிறோம். மனவிருத்தி அடைந்து தோல்வி மனோநிலைக்கு ஆட்படுகிறோம். ஆனால் அவை எம்மிடம் இருந்த காலத்தில் அவற்றை எண்ணி மகிழ்ச்சி அடைந்திருக்கிறோமா என்று எண்ணிப்பார்ப்போமாக இருந்தால் அந்தக் காலத்திலே அவை சம்பந்தமாக நாம் அக்கறை அற்றவர்களாக இருந்திருப்பது புலப்படும்.

எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சி அடையத்தெரியாமல் அவற்றை இழக்கும்பொழுது மட்டும் வேதனைப்படும் மனநிலை விசித்திரமானது. எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சியும் திருப்தியும் அடையும் மனநிலையை வளர்துக்கொள்ளும் பயிற்சி வெற்றிக்கு வித்திடும்.

எமது சிந்தனை இலக்கு மற்றவர்களிலும் பார்க்க நாம் சிறந்தவர்களாக மாறுவது எவ்வாறு என்று அமைந்திருப்பது ஆரோக்கியமானதாக அமையாது. இதற்குப்பதிலாக நாம் முன்பு இருந்ததிலும் பார்க்க சிறந்தவனாக வளர என்ன செய்யலாம் என்றவாறாக அமைந்திருப்பது ஆரோக்கியமான பாதையை எமக்கு காட்டிநிற்கும் இறைவனிடம் எதனை கேட்கவேண்டும்?

மகிழ்வான,மனநிறைவான வாழ்வு எமக்கு கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வதிலும்பார்க்க கஷ்டங்களையும், சவால்களையும் மனோதிடத்துடன் எதிர் கொள்ளும் வல்லமையை வேண்டிநிற்பது வாழ்வின் வெற்றிக்கு வழிசமைக்கும்.

வாழ்வில் பல நிரந்தரமான முடிவுகளை சில தற்காலிக காரணங்களுக்காக எடுத்துவிட்டு கஷ்டப்படுகின்றோம். உணர்ச்சிவசப்படடு இருக்கும் சந்தர்ப்பங்களில் முடிவெடுப்பதை தள்ளிப்போடுவது நல்லது. மனம் உணர்ச்சிவசப்படடு அங்கலாய்த்து இருக்கும்பொழுது நாம் எமது உண்மையான தன்னம்பிக்கையை இழந்துவிடுகின்றோம். தினமும் 18 மணிநேரம் தூங்கும் சிங்கங்கள் காட்டின் மன்னனானது எவ்வாறு? அதன் அலட்டிக்கொள்ளாத,அங்கலாய்க்காத மனப்போக்கும் தன்னம்பிக்கையுமே அதன் பலம்.

நாம்உணர்ச்சிவசப்பட்டதாலோ தவறாக வழிநடத்தப்பட்டதாலோ எடுத்த தவறான முடிவுகளை சரிசெய்துகொள்வது தோல்வி என்று அர்த்தப்படாது. சிலரை தவறாக புரிந்துகொண்டு பிரிந்துவிடுகிறோம்.வேறு சில தவறானவர்களை சரியாகப் புரிந்து கொள்ளாததால் அவர்களுடன் நெருங்கி அதன்காரணமாக நொந்து போகிறோம்..

இவை காலம் எமக்கு கற்றுக்கொடுக்கும் பாடங்கள். காலம் நல்ல ஆசிரியர்கள் போல எம்மில் அன்பு பாராட்டி அரவணைத்து பாடத்தை கற்றுத்தரும். அந்தப் பாடங்களை கற்றுத்தேற பழகிக்கொள்வது பயனுடையதாக அமையும்.




எமது துயர்களை நாமே எமது கைகளால் துடைத்து மற்றவர்களுக்கும் கைகொடுத்து எமது வெற்றிப்பாதையை செப்பனிடும் பணியை நாமே முன்னெடுத்து நம்பிக்கை ஒளியில் வெற்றி இலக்கை நோக்கி பயணித்து ஆகவேண்டி இருக்கிறது. எமது அறிவு மங்கிவிடவில்லை. சிந்தனை ஓட்டங்கள் சிதறிவிடவில்லை. மனதினதும் உடலினதும் பலம் அற்றுப் போகவில்லை. அதற்காக சந்தோசப்படுவோம்.

தொடரும்

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்தியநிபுணர்.

## நெருப்புக்காய்ச்சலில் இருந்து எம்மை தற்காத்துக்கொள்ள...



நெருப்புக்காய்ச்சல் ஒருவகை பக்றீரியாவால் ஏற்படுகின்ற தொற்றுநோயாகும். இந்த நோயை ஏற்படுத்துகின்ற பக்றீரியாவின் பெயர் சல்மெனெல்லா தைபி (Salmonella Typhi). இந்த நோய்க்கிருமிகள் பிரதானமாக நோய்க்கிருமியின் தொற்றுக்கு உட்பட்ட நீர், உணவு என்பவற்றினால் பரவுகின்றது. மனிதனுக்கு தொற்று ஏற்பட்டு 10 நாட்களின் பின்னரே நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன.

### இந்நோய்க்கான முக்கிய அறிகுறிகள்

விட்டு விட்டுக் காயும் உயர்காய்ச்சல், தலைவலி, வயிற்றுநோ, வாந்தி, தொடக்க காலங்களில் மலச்சிக்கல், பின்னர் வயிற்றோட்டம் என்பனவாகும்.

பெரும்பாலானவர்கள் மருத்துவ உதவிகளால் சுகப்படுத்தப்படுகின்றனர். பலர் மருத்துவ உதவியின்றி இந்த நோயின் தீவிர சிக்கல்களுக்கு உள்ளாக நேரிடலாம். எனவே இந்த நோய்க்குரிய அறிகுறிகள் இருப்பவர்கள் நோயின் ஆரம்பத்திலேயே மருத்துவ உதவியை நாடுவதன் மூலம் நோயின் சிக்கல்களையும் இறப்பையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

இந்த நோயின்சிக்கல்கள் (Complication) பெரும்பாலும் இரண்டு வாரங்களின் பின்னரே ஏற்படுகின்றன.

இந்த நோயின் தாக்கத்தால் சிறுகுடல் சேதமடைதல், சிறுகுடலில் இருந்து பெருமளவு இரத்தப்பெருக்கு, செப்ரிக் சொக் **(Septicshock)** எனப்படும் குருதி அமுக்கம் குறைவடைதல், **DIC** எனப்படும் இரத்தப்பெருக்கு போன்ற பலவகை சிக்கல்கள் ஏற்படக்கூடும். இந்த நோய் ஏற்பட்டு குணமானவர்களில் 10 வீதமானவர்கள் எந்த விதமான நோய் அறிகுறிகளும் இல்லாமல் அவர்களின் மலத்துடன் இந்த நோய்க்கான கிருமியைத் தொடர்ந்து வெளியேற்றலாம். இவர்கள் நோய்க்காவிகள் என்று அழைக்கப்படுவர். இவர்களும் இனங்காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவது அவசியம்.

இந்த நோயை உறுதிப்படுத்த பலவகை சோதனைகள் செய்யப்பட்ட போதிலும் பிரதானமாக **Blood Culture** என்ற பரிசோதனை முக்கியமானதாக விளங்குகின்றது. நோயாளியின் நோயின் தீவிரத்தைப் பொறுத்து மாத்திரைகளாகவோ அல்லது ஊசிமருந்தாகவோ இந்த நோயை கட்டுப்படுத்தும் மருந்துகள் வழங்கப்படுகின்றது. இந்த மருந்துகள் மொத்தமாக 7-10 நாட்கள்வரை வழங்கப்படும். இந்த நோய்க்கு உட்பட்டவர்கள் நோய்க்காலங்களில் இலேசான ஆகாரங்கள் உண்ணுதல் (Light diets) முக்கியமாகும். சோறு, பிட்டு போன்ற உணவுகள் நோயின் தீவிரத்தை கூட்டக் கூடியவை.

### இந்த நோயைக் தடுக்கும் வழிமுறைகள்

முறையாகவும் சுத்தமாகவும் வீடுகளில் தயாரிக்கப்பட்ட உணவுகளை அருந்துதல், வீடுகளில் உணவைச் சரியாக மூடி வைத்தல், சுத்தமாகப் பரிமாறுதல் போன்றவையாகும். இதன் மூலம் இந்த நோய் ஏற்படுவதை குறைக்க முடியும். இதே போன்று வீடுகளில் கொதித்தாறிய நீரைப்பருகவேண்டும். சகல வீடுகளிலும் சரியான மலசலகூட வசதிகள் கடைப்பிடிக்க வேண்டும். எப்பொழுதும் உணவு அருந்தும் முன்பும், மலம் கழித்த பின்னரும் சவர்க்காரம் கொண்டு கைகளை நன்கு கழுவவேண்டும். இயலுமானவரை கடைகளில் உண்ணும் பழக்கங்களைத் தவிர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். சகல உணவுக் கடைகளிலும் முறையாகவும் சுத்தமாகவும் உணவுதயாரிக்கப்படுகின்றனவா? அவை சரியான முறையில் பாதுகாக்கப்படுகின்றனவா? என்பதை சுகாதார சேவையாளர்கள் உறுதிப்படுத்துவதன் மூலமும் இந்த நோயைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

எனவே நாம் மேற்குறிப்பிட்ட தடுப்பு முறைகளைக் கவனத்தில் கொண்டு இயலுமானவரை இத்தொற்று நோயில் இருந்து எம்மைப் பாதுகாப்பதுடன் இந்த நோயின் அறிகுறிகள் காணப்படின் உரிய நேரத்தில் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று இந்த நோயின் தாக்கத்திலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வோம்.

பொது வைத்திய நிபுணர்
Dr.பி. யோண்சன்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org